ISSN 2386-1630

மொழிதல்

தொகுதி: 3, எண்: 1 - 2016



சுதந்திர ஆய்வு வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதல்

ஆய்விதழ்

தொகுதி: 3, எண்: 1 தை - ஆனி 2016

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

சுதந்திர ஆய்வு வட்டம்

7953 (CP)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதல்

ஆய்விதழ்

தொகுதி: 3, எண்: 1- தை - ஆனி 2016

ISSN 2386 - 1630

ஆசிரியர்

கலாநிதி சி. சந்திரசேகரம்

உதவி ஆசிரியர்கள்

திரு சு. சிவரெத்தினம்

கலாநிதி வ. இன்பமோகன்

ஆலோசனைக் குழு

பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்

பேராசிரியை மௌ. சித்திரலேகா

கலாநிதி நதிரா மரியசந்தனம்

முனைவர் ஞா. ஸ்டீபன் (தமிழ்நாடு)

முனைவர் ந. முத்துமோகன் (தமிழ்நாடு)

பேராசிரியர் நா. சுப்பிரமணியஐயர் (கனடா)

வெளியீடு

சுதந்திர ஆய்வு வட்டம்

முன் அட்டை வடிவமைப்பு

அருள் சஞ்ஜித்

தொடர்பு

110/3, கண்ணகி அம்மன் கோயில் வீதி,

10 வது குறுக்கு,

மட்டக்களப்பு, இலங்கை.

தொலைபேசி : 0652228815, 0776647375

0770075898, 0774749441

மின்னஞ்சல் : mozhithal2014@gmail.com

அச்சு

குமரன் அச்சகம்,

39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 6.

மின்னஞ்சல்: kumbhlk@gmail.com

விலை: 250.00

மொழிதலில் பிரசுரமாகும் கட்டுரைகளை ஆசிரியரின் அனுமதியுடன் மாத்திரமே மறுபிரசுரம் செய்யலாம். இவ்விதழிலே பிரசுரமாகியுள்ள கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் கட்டுரை ஆசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். - ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதல்

சுதந்திர ஆய்வு வட்டம் தனது பயணத்தின் அறாத் தொடர்ச்சியில் மொழிதலின் நான்காவது (தொகுதி: 3, எண்: 1) இதழை வெளியிடுகின்றது. மொழிதலின் மூன்றாவது இதழ் வெளிவந்த நிலையில் கல்வியியலாளர்கள், ஆய்வாளர்கள் மத்தியில் இருந்து மொழிதலின் காத்திரத் தன்மை பற்றி வெளிவந்த நல்லபிப் பிராயங்கள் எமக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன.

இந்த இதழ் சமகால இலங்கை அரசியல், கல்வெட்டு மரபு, இந்திய தத்துவம், இலங்கை நவீன ஓவியச் செல்நெறி, மேற்காசிய இசை, ஆய்வு முறையியல் ஆகிய கருப்பொருள்களைத் தர்க்கமுறையில் அணுகும் ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது. நமது தமிழ்ச் சூழலில் ஆய்வு முறையியல் தொடர்பாகப் பல்வேறுபட்ட அபிப்பிராயங்களும் தெளிவீனங் களும் நிலவுகின்ற சூழலில் ஆய்வுமுறையியல் தொடர்பானதொரு கட்டுரையும் இந்த இதழிலே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொழிதலின் ஆய்வியல் பங்களிப்பின் அவசியம் பல்வேறு தளங்களில் உணரப்பட்டிருக்கின்றபோதும் ஆய்வியல் அணுகுமுறையுடனான ஆய்வுக் கட்டுரைகளை உரிய நேரத்தில் பெறுவது சிரமமான விடயமாக இருந்து கொண்டே இருக்கின்றது. இந்நிலையினை மாற்றியமைப்பதற்கு எமது புலமையாளர்கள் முன்வரவேண்டும். இது மொழிதலை மேலும் அகலித்து காத்திரப்படுத்தும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த இதழுக்கான கட்டுரைகள் பலவற்றைத் திருத்தி அபிப்பிரா யங்களையும் ஆலோசனைகளையும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அனுப்பிவைத்த மீளாய்வாளர்களான (Referee) முனைவர் ந. முத்துமோகன் (ஆய்வாளர், ஸ்ரீ குருகிரந்த் ஷாகிப் கற்கைள் நிலையம், குருநானக் தேவ் பல்கலைக்கழகம், அமிர்தரஸ், பஞ்சாப், இந்தியா), பேராசிரியர் M.S.M அனஸ் (மெய்யியல் மற்றும் உளவியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை), பேராசிரியர் சி. மௌனகுரு, கலாநிதி நதிரா மரியசந்தனம் (சிரேஸ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை) ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் செவ்வை பார்ப்பதிலே என்னோடு உதவியாக இருந்த திருமதி விஜிதா திவாகரன், செல்வி கிருஷ்ணவேணி ஆகியோருக்கும் அட்டை வடிவமைப்பை அழகுறச் செய்து தந்த அருள் சஞ்ஜித் அவர்களுக்கும் ஆதரவு நல்கிய வாசகர்களுக்கும் எமது நன்றிகள்.

ஆசிரியர்

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே

1. மேற்காசிய இசை: தொன்மையும், மரபுகளும் 1
பேராசிரியர். எம்.எஸ்.எம்.அனஸ்

2. உலகளாவிய ஆய்வுமுறையியல்: தமிழ்ச் சூழலுக்கான சில குறிப்புகள் 14
முனைவர் ஞா.ஸ்டீபன்

3. தேர்தல் சீர்திருத்தங்களும் அரசியற் சிறுபான்மையினரும் 27
பேராசிரியர் சி. சிவசேகரம்

4. ஈழத்தில் இறப்புத் தொடர்பான கல்வெட்டு மரபு 43
திரு க. இரகுபரன்

5. இந்திய தத்துவ மரபில் சடப்பொருள்வாதிகள் பற்றிய சித்திரிப்பு - ஒரு மறுமதிப்பீடு 53
கலாநிதி இரத்தினசபாபதி பிரேம்குமார்

6. இலங்கையில் நவீனத்துவமும் ஓவியச் செல்நெறியும் 64
திரு சு. சிவரெத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காசிய இசை: தொன்மையும், மரபுகளும்

எம்.எஸ்.எம். அனஸ்

தொன்மை இசையில் ஒரு சிறிய பகுதி மட்டுமே இன்று எஞ்சியுள்ளது. அனேக வகை இசை வடிவங்களும், இசைக் கருவிகளும் கால வெள்ளத்திற்கு இரையாகிவிட்டன. ஆனால் பல்வேறு ஆதாரங்களினூடாகப் பெரிதும் காணாமற் போன இவ்விசை மரபினையும் இசைக் கருவிகளையும் பற்றிப் பல சான்றுகளை இன்று உலகம் பெற்று வருகின்றது.

அகழ்வாய்வுகள், சுவரோவியங்கள், கல்லறைப் பொருட்கள் போன்றவற்றின் மூலமாக இச்சான்றுகளை உலகம் கண்டடையக் கூடியதாகவுள்ளது. எல்லாப் பெரிய தொன்மை நாகரிகங்களிலும் இசை ஒரு முக்கிய பங்கினை ஆற்றியுள்ளது. தொடர்பாடல்கள், சமூகத் தொழிற்பாடுகள், சமயவழிபாடுகள், பொழுதுபோக்குகள் எனப் பல்வேறுவகையில் அதன் பங்கினை வகைப் படுத்திப் பேசமுடியும்.

தொன்மை இசையானது வரலாற்றிற்கு முற்பட்ட இசையைக் கடந்து வளர்ச்சி பெற்றிருந்தது. மேற்கு ஆசியா, கிரேக்கம், உரோம், மெஸெப் பொட்டோமியா, பாரசீகம், எகிப்து, இந்தியா, சீனா என்று பெரிய நாகரிகங்களை இசை வசப்படுத்தி இருந்தது.

மேற்காசியத் தொன்மை மற்றும் வரலாற்றுக்கு முற்பட்ட இசை வளங்களையும், இசை மரபுகளையும் குவிமையப்படுத்தியதாகவே இச்சுருக்க ஆய்வு இங்கு விபரிக்கப்படுகிறது.

மேற்காசியா பல இனக்குழுக்கள் வாழும் பரந்த நிலப்பரப்பு. அது பல்வேறு நாகரிகங்கள் சந்திக்கின்ற பிரதான பூமிகளில் ஒன்று. சில இனக்குழுக்கள் அந்த மண்ணிற்கே சொந்தமானவை. பல ஆயிரம் வருடங்களாக இம்மக்கள் அங்கு வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் அரேபியர், அஸர்பன்சானியர், பாரசீகர்கள், குர்துகள் பிரதான இனக் குழுவினர் எனலாம். மற்றும் துருக் இனத்தவர்கள், ஆர்மேனியர்கள், அஸ்ஸீரியர்கள், யஸீதிகள், சமரிட்டன்கள், பேர்பர்கள் எனப்பல இனக்குழுக்களும் இங்கு வாழ்கின்றன.

மேற்காசிய இசை என்பது ஒரு பொது இசையின் அடையாளம் என்பதை விட அங்கு வாழும் மக்களினங்கள் ஒவ்வொன்றினதும் தனித்துவமான இசை மரபுகளின் தாய்ப்பூமி, மேற்காசியா என்பது அதிகம் பொருத்தமானது. இவற்றுள் ஹிப்ரு, அரபு, துருக், அசெரி, குர்து ஆர்மேனிய இனத்தவர்களின் இசை மிக முக்கியமானவை எனக் கூறலாம்.

மேற்காசிய இசை என்பது ஒரு பொது இசையின் அடையாளம் என்பதை விட அங்கு வாழும் மக்களினங்கள் ஒவ்வொன்றினதும் தனித்துவமான இசை மரபுகளின் தாய்ப்பூமி, மேற்காசியா என்பது அதிகம் பொருத்தமானது.

சுமேரியர், பபிலோனியர், அஸ்ஸீரியர்கள் போன்ற நாகரிகங்களினதும் அதற்கு அண்மைப் பிராந்தியங்களான எனடோலியா, பாரசீகம், சிரியா, பலஸ்தீன் பிராந்தியங்களிலும் அகழ்வாய்வுகளின் மூலம் கண்டெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கற்பொறிப்புத் தகடுகள் மூலம் இங்கு காணப்பட்ட இசைக் கருவிகளையும், இசைச் செல்வாக்கையும் அறியக் கூடியதாகவுள்ளது.

இசைக்கருவிகளைக் கொண்ட ஓவியங்கள், சுவர்ச்சித்திரங்கள், பாடகர்களைக் காட்டும் சுவர் சித்திரங்கள், நடனக்காரர்களின் காட்சிகள், சமய வழிபாட்டுச் சடங்குக் காட்சிகள் போன்றவை அச்சமூகங்களில் இசை பெற்றிருந்த முக்கியத்துவத்தை எமக்கு உணர்த்துகின்றன. ''ஊத்'' வாத்தியமும், ''யாழ்'' இசைக் கருவியும், புல்லாங்குழல்களும் மேற்காசிய இசைக்கருவிகளில் இடம்பெறும் முன்னணிக் கருவிகள் எனக் கூறலாம்.

'ஊத்'

உலகின் எந்த இசை மரபாயினும் அங்கு நட்சத்திர அந்தஸ்தில் பிரகாசிப்பது ஏதோ ஒரு இசைக்கருவிதான். மேற்கத்தேய இசையில் பெரும்பாலும் வயலின் அவ்வாறான ஒரு கருவி. மத்திய கிழக்கு இசையில் நட்சத்திர அந்தஸ்தில் இருப்பது 'ஊத்' (UD) கருவியாகும்.

மத்தியதரை நாடுகள், மத்திய கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த சுமேரிய, அக்காடிய, பாரசீக, பபிலோனிய, ஆர்மேனிய, அஸ்ஸீரியா உள்ளிட்ட எல்லா நாகரிகங்களுக்கும் இக்கருவியும் அதன் இசையும் பிரபலமானதாக இருந்துள்ளது.

மத்திய கிழக்கின் அரபுப் பிராந்தியங்கள் கி.பி 7ஆம் நூற்றாண்டில் வட ஆபிரிக்காவிலிருந்து ஈராக், ஐரோப்பாவின் கிழக்குப் பகுதி வரை பரவியிருந்தது. நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வந்த தொடர்புகள், பரிமாற்றங்கள் காரணமாக மத்திய கிழக்கின் குறிப்பாக அரபுலக இசையானது பாரசீகம், துருக்கி, வட ஆபிரிக்கா வரை பரவியது.

ஊத் கருவி அரபுச் செல்வாக்கிருந்த எல்லா நாடுகளுக்கும் பரவியது. முஸ்லிம் பேரரசு விரிவடைந்த போது ஸ்பெயினுக்கும், சிசிலிக்கும் இக் கருவியின் செல்வாக்கு பரவியது.

ஊத் தொன்மையான இசைக்கருவி. மிக நீண்ட ஆழமான வரலாறு இதற்கு உண்டு. மத்திய கிழக்கில் பல நூற்றாண்டு காலமாக மக்கள் இக்கருவியைப் பயன்படுத்தி வந்துள்ளனர். கம்பிகளில் இருந்து ஊத் தரும் இசை மிகவும் தனித்துவமானது. இது ஒரு பழைமையான வாத்தியம் என்பது உண்மையாயினும் இப்போது ஐரோப்பாவிலும், நவீன இசைக் கருவிகளிடையேயும் ஊத் பிரபல்யம் பெற்ற இசைக் கருவியாகத் திகழ்கிறது.

ஐரோப்பாவிற்கு ஊத்தின் அறிமுகம் கிட்டாரின் தோற்றத்திற்கு காரணமாக இருந்ததை ஸ்பெயினில் வாழ்ந்த முஸ்லிம்களின் இசை வரலாறு கூறுகிறது. மத்திய கிழக்கில் ''ஊத்'' ஒரு ''ராஜவாத்தியம்''. ''ஊத்'' மத்திய கிழக்கின் எல்லா இன மக்களின் இசை மரபிலும் ஒரு முக்கிய கருவி. எல்லா மக்களின் ஆதரவையும் இக்கருவி பெற்றுள்ளது.

மத்திய கிழக்கில் ''ஊத்'' ஒரு ''ராஜவாத்தியம்''. ''ஊத்'' மத்திய கிழக்கின் எல்லா இன மக்களின் இசை மரபிலும் ஒரு முக்கிய கருவி. எல்லா மக்களின் ஆதரவையும் இக்கருவி பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபு மொழியில் இது ''ஊத்'', ஆர்மேனிய மொழியில் இது ''வாத்'', சிரிய மொழியில் இது ''ஊத்'', கிரெக்க மொழியில் இது ''ஊட்டி'' இஹிப்ரூ மொழியில் ''உத்'', பாரசீக மொழியில் ''பார்பத்'', குர்திஷ் மொழியில் ''ஊத்'', துருக்கிஷ் மொழியில் இது ''ஊத்'', சோமாலிய மொழியில் ''கூட்'', அஸெரிய மொழியில் ''ஊத்'' என்று ஏறத்தாழ ஒரே வகைப் பெயரையும், ஒத்த வடிவத்தையும் ''ஊத்'' பெற்றுள்ளது.

''ஊத்'' தொல்பொருள் காட்சிச்சாலைக்குரிய பொருள் அல்ல. அது மிகத் தொன்மையானது. ஆனால், ''ஊத்'' இன்றும் வாழும் இசைக்கருவி. தொன்மைக் கருவிகள் என்று கருதப்படும் பல கருவிகளை மத்திய கிழக்கில் மக்கள் இன்றும் பயன்படுத்தி வருகின்றனர். அவை வெகுமக்களின் ஆதரவு பெற்ற கருவிகளாகவும் விளங்குகின்றன. கம்பி வாத்தியங்கள், காற்று வாத்தியங்கள், மேள வாத்தியங்கள் என எல்லா வகை வாத்தியங்களிலும் இதனைக் காணமுடியும்.

இன்று மத்திய கிழக்கு நாடுகளில் போரும், பயங்கரவாத இயக்கங் களும், அவை வலியுறுத்தும் சமயச் சட்டங்களும் இசைக் கருவிகளின் பயன்பாட்டிற்கும், இசைக்கும் சாதகமற்ற சூழலை உருவாக்கியுள்ளன. இந்தப் பின்னணியிலும் மக்களினதும், கலைஞர்களினதும் இசையார்வத்தில் குறைகள் ஏதும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. போராட்டங்களின் மத்தியிலும் மக்கள் தொடர்ந்தும் இசையில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

அண்மையில் (ஜனவரி 2015) அல் - அறப் சஞ்சிகை மேற்கொண்ட ''ஊத்'' கருவி செய்பவர்களுடனான நேர்முகம் ''ஊத்'' கருவியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும். ஈராக்கில் ''ஊத்'' கருவி செய்துவரும் மஹ்மூத் அப்துல்நபி என்பவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளின் போது ஊத் பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்: ''ஊத் ஏனைய கருவிகளிலிருந்து வேறுபட்ட கருவி. நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால் அதுவும் உங்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும், துயரமான சந்தர்ப்பமாக இருந்தால் அது துயரத்தை இசையாகத் தரும்''.

''ஊத்'' ஏனைய கருவிகளிலிருந்து வேறுபட்ட கருவி. நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால் அதுவும் உங்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும், துயரமான சந்தர்ப்பமாக இருந்தால் அது துயரத்தை இசையாகத் தரும்!

அப்துல்நபி ஊத் கருவியைக் கைகளால் உருவாக்கும் பழைய பரம்பரை யைச் சேர்ந்தவர். இப்போது சிரியாவிலும், துருக்கியிலும், எகிப்திலும் ஊத் கருவி இயந்திரங்களின் உதவியுடன் செய்யப்படுவதாகவும் அவர் கூறுகிறார்.

தென் மெஸெப்பொட்டோமியா (தற்போதைய ஈராக்) ஊத் கருவியின் பிறப்பிடமாக இருந்த போதும், ஊத்தின் பிரபல்யம் முழு மத்திய கிழக்கையும், வட ஆபிரிக்காவையும், மத்திய ஆசியாவையும் ஊடறுத்துச் செல்கிறது.

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் சோனகர் (Moors) ஊத் கருவியை ஐரோப்பா விற்கு அறிமுகப்படுத்தினர். முஸ்லிம்கள் ஸ்பெயினை ஆட்சி செய்த காலத்தில் இது நடந்தது. இசைவல்லுநரும், பாடகருமான சிர்யாப் கி.பி 821இல் பக்தாதிலிருந்து ஸ்பெயினுக்கு வந்ததில் இருந்து இந்த அறிமுகம் ஆரம்பமானது.

இசையினால் மக்களை மகிழ்வூட்டும் கலையில் சிர்யாப் வல்லவராகத் திகழ்ந்தார். கொடோர்வா அரசவையில் பல வருடங்கள் தனது இசைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையை அவர் வெளிப்படுத்தினார். அத்துடன் ஐரோப்பாவில் முதலாவது இசைப்பயிற்சிக் கல்லூரியையும் அவர் கொடோவாவில் ஆரம்பித்தார். அவர் அறிமுகம் செய்த பாடல் பயிற்சி ஸ்பெயினின் இசையில் நீண்டகாலம் செல்வாக்குச் செலுத்தியது.

ஐந்து கம்பி ஊத் வாத்தியத்தை ஸ்பெயினுக்கு அறிமுகப்படுத்தியதிலும் சிர்யாபின் பெயரே முதலிடத்திலுள்ளது. இக்காலப் பகுதியில் மத்தியாசியா வில் இருந்தும், வட ஆபிரிக்காவில் இருந்தும் அழைக்கப்பட்ட இசைக் கலைஞர்கள் அரசவை இசை வைபவங்களில் பங்கேற்றனர். கலீபா அவர்களுக்குச் சிறந்த வெகுமதிகளை வழங்கி கௌரவித்தார்.

ஊத் கருவியையே அரேபியக் கலைஞர்கள் அதிகம் பயன்படுத்தினர். ஊத் கருவியையும், வயலினை ஒத்த ரெபாப் என்ற கம்பி வாத்தியத்தையும், நேய் என்ற மரப் புல்லாங்குழலையும், கிண்ண வடிவிலான தர்பூக்கா மேளத்தையும் அரபு நாடுகளிலிருந்தும், மத்தியாசியாவிலிருந்தும் வந்த கலைஞர்கள் ஸ்பெயினிற்கு அறிமுகம் செய்தனர்.

ஊத் தரும் தொனியின் பண்புகளும், அதன் வசீகர ஓசையும் நவீன இசைக் கலைஞர்களின் புதிய இசை வடிவமைப்புக்களுக்குப் பெரிதும் மெருகூட்டுவதை இன்று அறியமுடிகிறது. தற்காலத்தில் அரபு உலகம் முழுக்க ஊத் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன. துருக்கிய ஊத், எகிப்திய ஊத், ஈராக் ஊத், சிரிய ஊத் என்று இவை பிரபல்யமடைந்துள்ளன. இவற்றிற்கிடையில் காணப்படும் வேறுபாடுகள் குறைவாகும். அவற்றின் அமைப்பு வடிவங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கிடையாது. வரலாற்றாய்வாளர்கள் ஊத் இனை அரபுகளுக்குரிய ஒரு இனத்துவக் கருவியாக அடையாளப்படுத்துகின்றனர்.

பர்பத்

நவீன ஊத் கருவி, ஐரோப்பாவின் லூட் இரண்டிற்குமான வம்சத் தொடர்பு ஒன்றுதான் என்று கூறப்படுகிறது. பாரசீகத்தில் ஊத், பர்பத் என்று கூறப்படுகின்றது. இது மத்தியாசியாவின் லூட் இனை ஒத்தது என்பர். அரபுலகுக்குரிய ஊத் கருவியின் அமைப்பு பாரசீக பர்பத் வகையைச் சேர்ந்ததெனவும் கூறப்படுகிறது. ஆனால், நவீன ஈரானின் பர்பத் அரபு ஊத்திற்குச் சமமான வடிவத்தைக் கொண்டு அமைந்துள்ளது.

பர்பத் உலகின் மிகப் பழைமையான இசைக்கருவி. இது மத்தியாசியா விற்குரிய கருவியாகும். கண்டெடுக்கப்பட்ட பழைமையான பர்பத் கருவி கி.மு 1ஆம் நூற்றாண்டிற்குரியதாகக் கருதப்படுகிறது. இது மத்தியாசியா வில் பெக்டாரியானா என்ற இடத்தில் நடத்தப்பட்ட அகழ்வாய்வின் போது பெறப்பட்டதாகும். ஹிந்துகூஷ் மலைத் தொடரையும் இன்றைய ஆப்கானிஸ்தான், உஸ்பெக்கிஸ்தானா, தஜ்கிஸ்தான் நாடுகளையும் உள்ளடக்கிய பகுதியைச் சேர்ந்த பிராந்தியம் பெக்டாரியானாவாகும். பர்பத் கருவியின் புவியியல் எல்லைகள் மத்தியாசியா முழுக்கப் பரந்து செல்கிறது. மேற்காசியாவும் அதன் நிலையமாகும்.

பர்பத் உலகின் மிகப் பழைமை யான இசைக் கருவி. இது மத்தியாசியா விற்குரிய கருவியாகும். கண்டெடுக்கப் பட்ட பழைமை யான பர்பத் கருவி கி.மு 1ஆம் நூற்றாண் டிற்குரியதாகக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்பத் கருவி தற்போது பெற்றுள்ள ஊத் வடிவம் கி.பி 7ஆம் நூற்றாண்டில் அரேபியரினால் உருவாக்கப்பட்டதாகும். தான்பூருக்கு அடுத்ததாக ஈரானின் மிகப்பழைமையான கம்பி இசைக்கருவி இதுவாகும். ஈரானில் சபாவித் ஆட்சியாளர் சமயக் காரணங்களுக்காக இக்கருவியைத் தடை செய்திருந்தனர். பின்னர் மக்கள் மீண்டும் இக்கருவியைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

அரபு மொழியில் 'ஊத்' என்ற சொல் மெல்லியதான ஒரு மரத்துண்டைக் குறிக்கின்றது. அச்சிறு மரத்துண்டு ஊத் கருவி இசைப்பதற்காகப் பயன் படுத்தப்படுகிறது. பாரசீக மொழியில் கம்பியைக் குறிக்கும் ரொட் அல்லது ரூட் (Rud) என்ற சொல் அரபு மொழியில் 'ஊத்' ஆக மருவி ஒலிப்பதாக எக்ஹார்ட் நெவ்பாவர் போன்ற ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். தொல்லியல் இசையியலாளரான ரிச்சார்ட் டம்ரிலின் கருத்துப்படி ரூட் என்ற சொல்லுக்கான மூலச்சொல் வடமொழியில் கம்பி வாத்தியத்தைக் குறிக்கும் 'ருத்ரி' என்ற சொல்லாகும். செமித்திய மொழி ஊடாக ருத்ரி அரபு மொழிக்குச் சென்றுள்ளது என்று அவர் கருதுகிறார். வட சிரியாவிலும், மெஸெப்பெட்டோமியாவிலும் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் ஊத் இருந்ததை தொன்மைச் சித்திரங்களும், அகழ்வாய்வுகளும் நிரூபித்துள்ளன.

பர்பத் கருவி தற்போது பெற்றுள்ள ஊத் வடிவம் கி.பி 7ஆம் நூற்றாண்டில் அரேபியரினால் உருவாக்கப் பட்டதாகும். தான்பூருக்கு அடுத்ததாக ஈரானின் மிகப் பழைமையான கம்பி இசைக் கருவி இதுவாகும். ஈரானில் சபாவித் ஆட்சியாளர் சமயக் காரணங் களுக்காக இக்கருவியைத் தடை செய்திருந்தனர்.

மெஸெப்பொட்டோமியா

தொன்மை மெஸெப்பொட்டோமியா ஆறாயிரம் வருடங்களுக்கு முன்னரே உயர்ந்த நாகரிகத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பு. செமித்தியர்களும், அக்காடியரும், சுமேரியர்களும் இப்பிரதேசத்தில்தான் தமது நாகரிகங் களைக் கட்டியெழுப்பினர். அவர்களின் எல்லா நகரங்களிலும் கோயில்கள் இருந்தன. சொற்களும், இசையும் இணைந்த வழிபாடுகள் இங்கு பிரசித்தமானவை.

ஆரம்ப விவசாயிகளான இவர்கள் ஆவிக் கோட்பாட்டில் நம்பிக்கை யுள்ளவர்கள். இயற்கை அனைத்தும் உயிருள்ளனவாகவே அவர்களுக்குத் தெரிந்தன. ரம்மான் என்ற இடிக்கடவுளையும், இயாக் கடவுளையும் தமது குரலினாலும், இசையினாலும் அவர்கள் வழிபட்டனர். தாம் பயன்படுத்திய ஊது குழலின் (ஹல்ஹலாட்டு) ஒலியை ரம்மான் கடவுளின் மூச்சுக் காற்றுக்கு ஒப்பிட்டனர். மணற்கடிகை மேளத்தில் (பலாக்), இயாக் கடவுளின் பெயரை எழுதியிருந்தனர். உண்மையில் இக்கருவிகளின் பயன்பாடு வரலாற்றுக்கு மிகவும் முற்பட்டதாக இருந்தாலும் அவற்றை அவர்கள் நேரடியாக வழிபாட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர் (AlecRobertson and Denis Steveris, The Pelican History of music, Pengum Books Great Britain, 1973:13).

தோல் இசைக் கருவிகள் உள்ளிட்ட தட்டி இசை எழுப்பக்கூடிய அநேக கருவிகளை இவர்கள் பயன்படுத்தினர். கொம்புகள், ஊது குழல்கள் போன்ற பலவித காற்றுக் கருவிகளையும் ஹார்ப், லீரா போன்ற கம்பி வாத்தியக் கருவிகளையும் இவர்கள் பயன்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஊர்' எனும் பண்டைய மெஸெப்பொட்டோமிய நகரத்தில் கண்டெடுக்கப் பட்ட இசைக் கருவிகள் அக்கால இசை பற்றிய பல தகவல்களைத் தருகின்றன.

பொது மக்கள் இசையைப் பெரிதும் விரும்பினர். சிலைகளிலும், கற்பொறிப்பு வாசகங்களிலும், மக்கள் தமது கேளிக்கைகளின் போது இசையில் ஈடுபட்ட விதம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. செல்வந்தர்கள் தமது பல்வேறு வைபவங்களுக்கும், விருந்துபசாரங் களுக்கும் இசைக்கு முக்கியத்துவம் தந்தனர்.

பெருநாள் தினங்களிலும், அரசவைத் திருமணங்களிலும், பிறப்பு மற்றும் இறப்புச் சடங்குகளிலும் இசை பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. இசைக் கலைஞர்களுக்குச் சமூகத்தில் செயலாற்ற இவ்வாறு நிறைய சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால், இசைக் கலைஞர்கள் சமூகத்தில் தாழ்ந்த நிலையில் இருந்தது பற்றியும் அறிய முடிகின்றது.

'ஊர்' எனும் பண்டைய மெஸெப்பொட்டோமிய நகரத்தில் கண் டெடுக்கப்பட்ட இசைக் கருவிகள் அக்கால இசை பற்றிய பல தகவல்களைத் தருகின்றன. 11 கம்பிகள் கொண்ட 'Harp' மற்றும் 'lyre' (யாழ் போன்ற நரம்புக் கருவிகள்) மற்றும் சில கருவிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. தொல்லியல் ஆய்வாளர்களும், அரும்பொருள் காட்சிச்சாலை ஆய்வாளர்களும் சிதைந்த துண்டுகளைப் பயன்படுத்தி கருவிகளை மீளக்கட்டமைத்து அவற்றைப் பற்றிய மேலதிக ஆய்வுகளுக்கு உதவுகின்றனர்.

இவ்வாறு கண்டெடுக்கப் பட்ட கற் புத்தகங்கள் சிலவற்றில் இராகம், இசை, இசை அளவீடு கள் பற்றிய குறியீடுகளும் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட கற்புத்தகங்கள் சிலவற்றில் இராகம், இசை, இசை அளவீடுகள் பற்றிய குறியீடுகளும் இடம்பெற்றுள்ளன. இசைக் கருவிகளின் இசை அதாவது மீட்டப்படக்கூடிய இசைக் குறியீடுகள் சிலவும் அவற்றில் பொறிக்கப்பட்டிருந்தன. பண்டைய இசையை மீள உருவாக்கும் மீட்டுருவாக்க முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

'ஊர்' நகர இசைக்கருவிகளில் கம்பிகளின் எண்ணிக்கை அதிகம். இக்கருவிகளில் 11 முதல் 13 வரை கம்பிகள் காணப்படுகின்றன. வாசிக்கக் கூடியதாக திருத்தியமைக்கப்பட்ட இசைக் கருவிகளில் இருந்து எழும் இசைகள் மிகவும் உயர்வானதாக இருப்பதாக இசை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சுமேரியர்

சுமேரியரும் இசையை விரும்பினர். அவர்களின் சமய வாழ்விலும், சமூக வாழ்விலும் இசைக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. சுமேரிய கம்பி வாத்தியம் லீரா (யாழ் போன்ற தோற்றத்தையுடைய சிறிய கம்பி வாத்தியம்) ஆகும். இது எருதின் வடிவத்தினைக் கொண்டது. எருதினது உடல் அக்கருவியின் ஓசைப்பெட்டியாக வடிவமைக்கப்பட்டிருந்தது. சுமேரியர் எருதை தெய்வீக ஆற்றலுக்கும், வளக்கருத்திற்கும் குறியீடாகப் பயன்படுத்தினர்.

மெஸெப்பொட்டோமியாவில் யாழ் (ஹார்ப்), சிறிய யாழ் (லிரா), லூட் (ஒரு வகைக் கம்பி வாத்தியம்) பிரசித்தமானவை. லூட் ஒரு பழைமையான வாத்தியம். கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்னர் மெஸெப்பொட்டோமியாவில் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட கருவி இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்

ஹார்ப் (யாழ்) உலகில் எப்போது, எங்கு தோற்றம் பெற்றது என்பது பற்றித் தெளிவான முடிவுகள் இல்லை. வரலாற்றுக்கு முற்பட்ட ஹார்ப்பின் இசை ஓசை எப்படியானது என்பது பற்றியும் போதுமான தரவுகள் பெறப்படவில்லை. ஹார்ப்பை ஒத்ததான மிகப் பழைமையான கருவி பற்றிய செய்தி பிரான்ஸின் குகை ஓவியங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. இப்பழைமையான ஹார்ப்பின் வயது கி.பி 15000 வருடங்கள் என்று மதிப்பிடப்படுகின்றது.

வேட்டைக்காரர்களின் வில்லின் ஓசையில் இருந்துதான் மிகப் பழைமையான ஹார்ப் உருவாகியிருக்கலாம் என்பது பலரின் கருத்து. எகிப்தின் பாரோஹ் யுகத்திற்குரிய கி.பி 5000ஆம் ஆண்டுகள் பழைமையான ஹார்ப் கருவிகளின் வடிவங்கள் வேட்டைக்காரர்களின் வில்லை ஒத்தவையாகக் காணப்படுகின்றன. பாரோஹ் ரம்ஸஸின் (கி.பி 1198-1166) கல்லறையில் வில் வடிவ ஹார்ப் வரையப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

குறைந்தது 5000 வருடங்களுக்கு முன்னரே ஹார்ப் கருவி மக்கள் பாவனையில் இருந்ததை தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. முக்கியமாக தொன்மை மெஸெப்பொட்டோமியாவிலும், ஈராக்கிலும் நடத்தப்பட்டு வரும் அகழ்வாய்வுகள் இதன் தொன்மை பற்றியும் பல்வேறு வடிவிலான ஹார்ப் கருவிகள் பற்றியும் புதிய தகவல்களைத் தருகின்றன.

சுமேரியாவிலும் மிகத் தொன்மையான ஹார்ப் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொன்மைக்கால சவ அடக்கப் பொருள்களில் ஒன்றாக ஹார்ப் இருந்ததை அகழ்வாய்வுகள் காட்டித் தந்துள்ளன. ஊர் நகரில் நடைபெற்ற கல்லறை அகழ்வுகளின் போது பெற்ற ஹார்ப் கி.மு 2600 - 2000 வருடப் பழமையானதென மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கு நான்கு கருவிகள் கிடைத்தன. அவற்றுள் ஒன்று ஹார்ப், ஏனைய மூன்றும் லீராக்கள்.

லீரா இசைக் கலைஞரான மைக்கல் லெவியின் கருத்துப்படி தொன்மை ஹார்ப்பை விட லீரா பழைமையானது. மத்திய கிழக்கு நாடோடி வாழ்க் கைக்கு ஏற்ற விதத்தில் (ஹார்ப்பைவிட) அளவில் சிறியதான, இடத்திற்கிடம் கொண்டு செல்வதற்கும் வசதியானதாக இது வடிவமைக்கப்பட்டிருந்தது.

நம்ப முடியாத வகையில் 60000 வருடங்கள் பழைமையான இடைக் கற்கால யுகத்திற்குரிய ஹார்ப் மற்றும் லீரா இரண்டிற்குமான அடிப்படை இசை வில் தான் என்பதை நிறுவக்கூடிய கண்டுபிடிப்புக்களும் நடந்துள்ளன. இன்றும் ஆபிரிக்கப் பழங்குடிகள் 'இசை வில்லை' பயன்படுத்தி வருவதையும் மைக்கல் லெவியின் கட்டுரை முன்வைக்கின்றது. இடைக் கற்காலத்திற்குரிய 'இசை வில்'லிலிருந்துதான் லீராவும் ஹார்ப்பும் தோன்றியிருக்க வேண்டும் என்று 'தொன்மை அண்மைக் கிழக்கு நாடுகளின் தொல்லியல் இசையியல்' என்ற நூலில் பேராசிரியர் ரிச்சர்ட் தம்ரில் கூறுகின்றார். தொன்மை இஸ்ரேல் / பலஸ்தீன் இசை பற்றிய தொல்லியல் ஆய்வுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன (Music in Ancient Israel/ Palestine, Joachim Brawn).

வேட்டைக்காரர் களின் வில்லின் ஓசையில் இருந்துதான் மிகப் பழைமையான ஹார்ப் உருவாகியிருக் கலாம் என்பது பலரின் கருத்து. எகிப்தின் பாரோஹ் யுகத்திற்குரிய கி.பி 5000ஆம் ஆண்டுகள் பழைமையான ஹார்ப் கருவிகளின் வடிவங்கள் வேட்டைக் காரர்களின் வில்லை ஒத்தவையாகக் காணப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைதூதர் ஏப்ரஹாமின் காலத்திலிருந்து யூத அல்லது ஹிப்று கலாசாரத்தில் இசை பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. தெய்வங்களை இசையினால் இணைத்து வழிபடும் வேறு எந்தக் கலாசாரத்திற்கும் ஒப்பாகவே ஹிப்று கடவுளர்களுக்கும், இசைக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருந்துள்ளன. ஜூபல் என்ற இசைக் கலைஞன் பற்றிய பதிவு பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது. ஏப்ரஹாம் மோஸஸ், தாவீத் ஆகியோரின் கால இஸ்ரேல் / பலஸ்தீன் இசைக் கருவிகள் பற்றியும் பழைய ஏற்பாட்டில் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இறைதூதர் ஏப்ரஹாமின் காலத்திலிருந்து யூத அல்லது ஹிப்று கலாசாரத்தில் இசை பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. தெய்வங்களை இசையினால் இணைத்து வழிபடும் வேறு எந்தக் கலாசாரத் திற்கும் ஒப்பாகவே ஹிப்று கடவுளர் களுக்கும், இசைக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருந்துள்ளன.

பல்வேறு இசை, பல்வேறு இசைக் கருவிகள் பற்றிப் பல பதிவுகள் பழைய ஏற்பாட்டில் உள்ளன. குரலுடன் இணைந்து ஹார்ப் இசைப்பது பற்றி சங்கீதங்கள் அத்தியாயத்தில் பின்வருமாறு ஒரு வரி வருகின்றது:

> இறைவா நான் உமக்குப் புதியதொரு பாடலைப் பாடுவேன்,
> பத்து நரம்பு வீணையால் உமக்குப் புகழ் பாடுவேன் *(144:9)*

ஏழு அல்லது எட்டு கம்பிகள் கொண்ட லீரா என்ற கம்பி வாத்தியமும் குரல்களுடன் இணைந்ததாக இசைக்கப்படுவதை சங்கீதங்கள் 98ஆம் பிரிவில் காணமுடியும்.

> யாழ் இசைத்து ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்
> வீணையும் யாழும் இசைத்துப் பாடுங்கள்

கொண்டாட்டங்களின் போதும், சவ ஊர்வலங்களின் போதும் மேளம், குழல், சுரமண்டலம் என்பன இசைக்கப்படுவது பற்றிய பதிவை சாமுவேல் ஆகமம் 1இல் காணமுடியும்.

> கூட்டத்தைச் சந்திப்பாய் அவர்களுக்கு முன்
> யாழ், மேளம், குழல், சுரமண்டலம் செல்லும்,
> அவர்கள் இறைவாக்கினர்கள் *(10:5-6)*

பைபிள் கூறும் கருவிகளில் ஒன்று 'கினோர்' (Kinnor). இது 'ஹார்ப்' (யாழ்) என்றே மொழி பெயர்க்கப்படுகிறது. பைபிளில் சுமார் இருபது வகை இசைக் கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் அநேகமானவை சங்கீதங்கள் அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளன. இஸ்ரேலிய / பலஸ்தீனிய சமூகங் களில் இசை பெற்றிருந்த தொடர்புகள் பற்றியும் பழைய ஏற்பாடு நமக்கு குறிப்புகளைத் தந்துள்ளன. மக்களின் மனப்பாங்கிலும், மனவெழுச்சியிலும் இசை செலுத்திய செல்வாக்கினையும் பைபிள் குறிப்புக்கள் மூலம் அறிய முடிகின்றது.

லீரா

லீரா சிறிய யாழ் போன்ற கம்பி வாத்தியம். ஆனால் யாழைவிட சில வேறு பாடுகள் இதற்கு உண்டு. லீரா என்ற பெயர் கிரேக்கம் ஊடாக வந்த இலத்தீன் மொழிப் பிரயோகமாகும். பழைமையான லீரா ஊர் நகரில் அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள லீரா கருவிகள் 4500 ஆண்டுகள் பழைமையானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1929இல் லியானாட் வுலி அரசு இடுகாட்டில் நடாத்திய அகழ்வாய்வின் போது சில லீராக்களையும், ஹார்ப்களையும் கண்டெடுத்தார். புதைகுழியில் ஒரு பெண்ணுடன் சேர்த்து ஒரு லீரா புதைக்கப்பட்டிருந்ததும் அகழ்வின் போது அவதானிக்கப்பட்டது. 'ஊர் இன் தங்க லீரா' அல்லது 'எருது லீரா' வடிவம் மிக உயர்ந்த லீரா கருவியாகக் கருதப்படுகிறது. கொம்புடன் கூடிய எருதின் முகம் தங்கத் தகட்டினால் அல்லது வெள்ளியினால் அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. இது பக்தாத் தேசிய நூலகத்தில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது (Lyres: The Royal Tombs of or Sumerian Shakepeare.com).

தொன்மை இஸ்ரேலிய அல்லது ஹிப்று மரபிற் குறிப்பிடப்படும் கின்னோர் வாத்தியம் பற்றிய தெளிவான கருத்துக்கள் இல்லாத போதும் அது ஹார்ப் அல்லது லீரா என்று மொழி பெயர்க்கப்படுகின்றது. கின்னோர் பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ள கருவிகளில் ஒன்று. இக்கருவியின் தோற்றம், வடிவமைப்புப் பற்றிய ஆய்வுகள் நடந்த வண்ணம் உள்ளன.

'கின்னோர்' (Kinnor) என்பதற்கான சொல்லியல் ஆய்வில் ஈடுபட்டுள்ளவர்கள் இதனை ஒத்த கருவிகளில் இருந்தே இச்சொல் வந்திருக்கலாம் எனக் கூறுகின்றனர். எகிப்தின் ''க்னாவூல்'', சிரியாவின் 'கெனாரா', அரபு - பாரஸீக 'குணார்' என்பவற்றிலிருந்து இப்பெயர் வந்திருக்கலாம் என்றும் இவ்வாய்வாளர்கள் கருதுகின்றனர். மேலும் கின்னோர் என்பது ஒரு குறித்த வாத்தியத்தின் பெயர் அல்ல என்றும், பல கம்பி வாத்தியங்களைக் குறிக்கும் ஒரு பொதுப் பெயர் என்றும் கருதப் படுகிறது (Jonathan L.Friedman Music in Biblical Life, London, 1980).

பைபிளின் படி கின்னோர் தாவீத் இசைத்த கருவியாகும். கின்னோர் இஸ்ரேலின் புகழ்பெற்ற, மேன்மைக்குரிய கருவி. தல்மூத் மரபுக்குரிய ஆலயங்களில் ஒன்பது கின்னோர்கள் இருந்துள்ளன.

தாவீது கின்னோர் இசையை வழங்குவதில் அனுபவம் மிக்கவராக விளங்கினார். சவுலை தீய ஆவி பிடித்துக் கொண்ட போது யாழ் (கின்னோர்) மீட்டிய செய்தியைச் சங்கீதங்கள் அத்தியாயம் இவ்வாறு கூறுகிறது:

தீய ஆவி சவுலைப் பிடித்துக் கொண்டது. அவர் தம் வீட்டிற்குள்ளேயே அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தார். தாவீது நாள்தோறும் செய்வதைப் போலத் தன் கையால் யாழை மீட்டிக் கொண்டிருந்தான்.

லீரா குடும்பத்திற்குரிய மற்றொரு கருவி எரித்திரியாவிலும், எத்தியோப்பியாவிலும் ''பெஜூனா'' என்று அழைக்கப்படுகிறது. மரபுச் செய்திகள் மன்னர் சவுலின் நோய் நீக்கத்திற்காக தாவுத் இசைத்த கின்னோர் கருவி தான் பெஜுவாவின் முன்னோடிக் கருவி என்று கூறுகின்றன.

தஃப்

மேற்காசிய மேள வகைகள் விரிவாக ஆராயப்பட வேண்டியவை. இங்கு தஃப், தபல் பற்றிய சில குறிப்புக்களைப் பார்க்கலாம். மேற்காசிய மரபிலும், அரபு மரபிலும் இவை தம்பூரின்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

பழைமையான லீரா ஊர் நகரில் அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இங்கு கண்டுபிடிக்கப் பட்டுள்ள லீரா கருவிகள் 4500 ஆண்டுகள் பழைமை யானவை.

'ஊர் இன் தங்க லீரா' அல்லது 'எருது லீரா' வடிவம் மிக உயர்ந்த லீரா கருவியாகக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்பர் இன இசையிலும், மொரொக்கொ இசைகயிலும், அரபு இசையிலும் தஃப் இன்றும் பிரதான இடத்தைப் பெற்றுள்ள வாத்தியமாகும்

தம்புரின்களின் பொதுப் பெயர் 'தஃப்' ஆகும். தஃப் என்பது 'தபல்' என்று கூறப்படும் அரபு மேளங்களின் பெயர். பபிலோனிய, அஸ்ஸீரிய மொழிகளிலும், ஹிப்ரூ மொழியிலும் இதற்குக் கிட்டிய சொற்களே பயன்படுத்தப்படுகின்றன. பபிலோனிய நாகரிகத்தில் 'தஃப்' அதப்பு என்று கூறப்படுகிறது. துருக்கி மொழியில் தஃப், தாவுல் என்று கூறப்படுகிறது. இது இரு தலைகளையுடைய உருளை வடிவக் கருவி. பேர்பர் இன இசையிலும், மொரொக்கொ இசைகயிலும், அரபு இசையிலும் தஃப் இன்றும் பிரதான இடத்தைப் பெற்றுள்ள வாத்தியமாகும் (பார்க்க : எம்.எஸ். எம்.அனஸ், 2014).

பலஸ்தீன் – இஸ்ரேல்

பலஸ்தீன் / இஸ்ரேலின் இசை பற்றிப் பேசும் போது நமது மனதிற்கு வரும் பிரதான பெயர் மன்னர் தாவீது (King David), ஆகும். 3000ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேலியரை ஆண்ட அரசர். ஹிப்ரு மரபில் அவர் இலட்சிய அரசராகக் காட்டப்படுகிறார். இஸ்ரேலியர்களின் ஆன்மீகப் பாடல்களை இயற்றியவர்களில் ஒருவராகவும் தாவீது கருதப்படுகிறார். இவ்வான்மீகப் பாடல்கள் காலப்போக்கில் ஒரு நூலாகத்தொகுக்கப்பட்டு சங்கீத நூல் அல்லது திருப்பாடல்கள் நூல் என்று பெயரிடப்பட்டது.

இவ்வான்மீகப் பாடல் தொகுதி விவிலியத்தில் சங்கீத நூல் என்று அழைக்கப்படுகிறது. வரலாற்று, இறைவாக்கு நிகழ்ச்சி சம்பந்தமாக இசையோடு தாவீது தொடர்புபடுத்தப்படுகிறார். முதலாம் சாமுவேல் நூலில் தாவீது 'யாழிசைஞன் அவருக்கு யாழ் மீட்டத் தெரியும். தீய ஆவி சவுலைப் பிடிக்கும் போதெல்லாம் தாவீது யாழ் எடுத்து மீட்டுவான் என்ற குறிப்புக்கள் உள்ளன. தாவீது இஸ்ரேலியரின் இனிய பாடகர் என்ற குறிப்பும் உண்டு (விவிலியக் களஞ்சியம் 111,1993:661).

பிற்காலத்திலும் இசையும், வழிபாடும் தாவீதின் கட்டளைப்படி நடப்பதாகக் குறிப்பிடப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில் 'தாவீது சங்கீதங்களின் ஆசிரியர்' என்று இயேசு சுட்டுகிறார். முஸ்லிம்களின் வேதநூலான குர்ஆனிலும் தாவீது (தாவுது நபி) பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

'மலைகளையும், பட்சிகளையும் தாவுதிற்கு வசப்படுத்திக் கொடுத்தோம். அவை அவருடன் துதி செய்து பாடின' (குர்ஆன், 21:79) என்ற ஒரு வசனத்தை இங்கு உதாரணமாகக் காட்டமுடியும். மேலே தரப்பட்டது அல்துல் ஹமீது பாகவியின் தமிழ் வடிவம். மர்மதியூக் பிக்தோர் (1988), யூசுப் அலி (1977) ஆகியோரின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

'தாவுதுடன் சேர்ந்து புகழ்ப் பாடல்கள் இசைக்குமாறு மலைகளையும், பறவைகளையும் நாம் பணித்தோம்' என்று இறைவன் கூறுவதாக அவ்வசனம் அமைந்துள்ளது. தாவுதின் குரல் இனிமை பற்றியும், அவரது இசை ஞானம் பற்றியும் இஸ்லாமிய மரபுகளில் செய்திகள் உள்ளன (பார்க்க: எம்.எஸ்.எம்.அனஸ், அரபு இசை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்து

ஆபிரிக்காவின் ஏனைய மக்களைப் போல ஆரம்ப கற்காலத்தில் இருந்து எகிப்தியர் இசையில் தமது தொடர்பை வெளிப்படுத்தி வந்துள்ளனர். சான்றுகளுடன் கூடிய இசை வரலாறு எகிப்தில் 4000 ஆண்டளவில் தான் ஆரம்பிக்கின்றது. எகிப்திய அரச வம்சத்தினரான பாரோஹ் மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் இசைக்கு முக்கிய இடம் தரப்பட்டிருந்தது. காற்றுக் கருவிகள், கம்பிக் கருவிகள், மேளக் கருவிகள் என எல்லா வகைக் கருவிகளுக்கும் அவர்கள் சொந்தக்காரர்களாக இருந்தனர். கைதட்டும் ஓசையைச் சிறப்பாகப் பயன்படுத்தி இசையை அவர்கள் மெருகூட்டினர்.

எகிப்திய மக்களின் வாழ்வில் இசை முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. எகிப்திய சமூகத்தில் இசைக் கலைஞர்கள் பல்வேறு அந்தஸ்திலுள்ள உயர் பதவிகளை அனுபவித்தனர். தேவாலயங்கள், அரசமாளிகைகள், தொழிற்கூடங்கள், பண்ணைகள், போர்க்களங்கள், கல்லறைகள், பிறப்புச் சடங்கு எனப் பல்வேறு பின்னணிகளில் இசையை மக்களும், அரசர்களும் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இசைக் கருவிகள் நன்கு வளர்ச்சி பெற்றவையாகவும், பல்வேறு வகையினதாகவும் விளங்கின. மேளங்கள், கம்பிவாத்தியங்கள், காற்றுக் கருவிகள் எனப்பலவகை இசைக் கருவிகளை எகிப்தியர் பயன்படுத்தி வந்துள்ளனர். ஆண் குரல்களும், பெண் குரல்களும் பாடல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன (Music in Ancient Egypt, www.umch.edu/ancientegypt).

எகிப்தின் பிரதான ஹெய்தர் என்ற பெண் தெய்வம், இசைக்கும் நடனத்திற்குமான அதிபதியாகும். பெண்மை அன்பிற்கும், மகிழ்ச்சிக்கும் உரிய தெய்வமாகவும் ஹெய்தரை மக்கள் வழிபட்டனர். பசு - பெண் தெய்வமாகவும் ஹெய்தர் சித்திரிக்கப்படுகிறது. தலையில் எருதின் இரு கொம்புகளும், கொம்புகளுக்கிடையில் சூரியத் தட்டும் பொருத்தப் பட்டிருப்பதை ஹெய்தர் சிற்பங்களில் காணமுடியும்.

சூரியத்தட்டு சூரியக் கடவுளுடன் ஒப்பிடப்படுகிறது. இசை தொடர்பில் ஹெய்தருக்கான முக்கியத்துவம் சற்று வேறுபட்டதாகும். பிரபஞ்ச ஒத்திசைவு (Universal Harmony) பற்றிய நம்பிக்கை ஊடுருவி உள்ள இசையின் வேர்கள் ஹெய்த்தில் ஒன்றுகலந்திருப்பதாக தொன்மை இசை பற்றிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சிவப்புத்தட்டு அதையே குறிக்கின்றது என அவர்கள் கூறுகிறார்கள்.

பாரோஹ் அரச வம்சகாலத்து ஓவியங்களிலும், சிற்பங்களிலும் ஆறு கம்பிகள் உள்ள ஹார்ப்பை மீட்டுபவரின் தலையில் ஆறு சிவப்புத் தட்டுக்கள் இருப்பதும் இக்கருத்தையே தருவதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தொன்மை எகிப்திய இசையில் வானவியல் இசை அர்த்தத்துடன் கூடிய பிரபஞ்ச ஒத்திசைவு பற்றிய கருத்திற்கான குறியீடாக இது கொள்ளப்படுகின்றது.

ஹெய்தர் தெய்வத்தின் கோயில்களில் பாடப்படும் பாசுரங்களிலும் பிரபஞ்ச ஒத்திசைவுக் கருத்துக்கள் பொதிந்துள்ளன. இசைக்கும், பிரபஞ்சத்

எகிப்திய மக்களின் வாழ்வில் இசை முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. எகிப்திய சமூகத்தில் இசைக் கலைஞர்கள் பல்வேறு அந்தஸ்திலுள்ள உயர் பதவிகளை அனுபவித்தனர்.

இசைக் கருவிகள் நன்கு வளர்ச்சி பெற்றவை யாகவும், பல்வேறு வகையின தாகவும் விளங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹார்ப் மற்றும் வீரா வாத்தியங்களையும் எகிப்தியர் பயன்படுத்தினர். ஹார்ப் போன்ற வாத்தியங்களை இசைப்பவர்கள் அரசமட்டத்தில் கௌரவமாக நடத்தப்பட்டனர். திருவிழாக் களிலும், நடன வைபவங் களிலும் பங்கேற்று பொழுது போக்கிற்காக இசையில் ஈடுபட்டவர்கள் சமூகத்தில் குறைந்த தரத்தினவராகவே கணிக்கப் பட்டுள்ளனர்.

திற்கும் இடையிலான தொடர்பு பற்றிய ஒரு எண்ணக்கருவினை உணர்த்து கின்றது என்பதே இங்கு கூறப்பட்ட கருத்துக்களின் பொருளாகும். ஹெய்தர் கோயிலில் பாடப்படும் ஒரு பாசுரம் பின்வருமாறு அமைந்துள்ளது.

விண்ணுலகும் அதன் உடுக்களும்
உனக்கு இசைகின்றன.
சூரியனும் சந்திரனும்
உன்னைத் துதி செய்கின்றன.
நெட்டேரு தெய்வம் உன்னைப் புகழ்கின்றது.
நெட்டேரு தெய்வம் உனக்காய்ப் பாடுகின்றது (music and entertainment – excerpt from Historical deception.www.egypt-tet ut org 01.07.2016).

ஹார்ப் மற்றும் வீரா வாத்தியங்களையும் எகிப்தியர் பயன்படுத்தினர். ஹார்ப் போன்ற வாத்தியங்களை இசைப்பவர்கள் அரசமட்டத்தில் கௌரவமாக நடத்தப்பட்டனர். திருவிழாக்களிலும், நடன வைபவங்களிலும் பங்கேற்று பொழுது போக்கிற்காக இசையில் ஈடுபட்டவர்கள் சமூகத்தில் குறைந்த தரத்தினவராகவே கணிக்கப்பட்டுள்ளனர்.

புல்லாங்குழல் வகையான இசைக் கருவிகள் வயதில் மூத்த கருவிகளாக எடுத்துக் காட்டப்படுகின்றன. கம்பி வாத்தியங்களில் ஹார்ப் முக்கியமானதாகும். வேட்டைக்கான வில்லின் வழியாக உருவான இக்கருவி பண்டைய அரச வம்சக் காலப்பகுதிக்குரிய வளர்ச்சி பெற்ற கருவியாகும். 8 முதல் 12 கம்பிகள் கொண்ட இக்கருவியை ஆண்களும், பெண்களும் இசைத்தனர். இருந்தவாறும், நின்றவாறும், முழந்தாளில் நின்றவாறும் ஹார்ப் கருவியை கலைஞர்கள் இசைப்பது மரபாக இருந்தது. ஹார்ப் கருவி மரத்தினால் செய்யப்பட்டதாக இருந்தாலும் அதன் அலங்கார வேலைப்பாடுகள் அக்கருவியை விலைமதிப்புள்ளதாக்கியது.

கடவுள் சந்நிதானங்களில் பாடுவது பெருவழக்காக இருந்தது. பாடுவதில் பெண்களும் பங்கேற்றனர். பெண் கடவுள்களுக்கும், சில போது ஆண் கடவுளர்களுக்கும் இவர்கள் பாடினர். இறந்தவர்கள் பேரிலும் பாடல்கள் பாடப்பட்டன. எகிப்தின் பாரோஹ் மன்னர் வம்சத்தவர்களின் கல்லறைகளில் இறந்தோருக்காகப் பாடப்பட்ட பாடற்பொறிப்புக்கள் பல இடம்பெற்றுள்ளன.

இப்பாடல்களை மக்கள் ஹார்ப் கருவி இசையுடன் இணைந்தே பாடியுள்ளனர். இறந்தவர்களையும், இறப்பையும் புகழ்ந்து இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பாடகர் நிஜேமியா கூறுவது:

உனது இருப்பிடத்தில் நீ எவ்வளவு உறுதியாக இருக்கிறாய்,
உனது நினைவுகள் மறக்க முடியாதவை,
அது உணவுப் பண்டங்களால் நிரம்பியுள்ளது,
அது எல்லா நன்மைகளையும் பெற்றுள்ளது,
உனது ஆன்மா உன்னுடன் உள்ளது,
அது உன்னை விட்டுவிலகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும் போது ஹார்ப் இசையுடன் கை தட்டலும் நிகழ்வதுண்டு. கைகளைத் தட்டி ஓசை எழுப்புவது கிரேக்க எகிப்திய இசைப் பண்பாட்டின் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது. புனிதமானவற்றிற்கும், உலகியல் சார்ந்தவற்றிற்கும் அவர்கள் கை தட்டி இசைக்கு மெருகூட்டினர்.

சமயம் சார்ந்ததோ, உலகியல் சார்ந்ததோ இசையும் நடனமும் இன்றித் தொன்மை எகிப்தில் வைபவங்கள் பூர்த்தியடைவதில்லை. ஹார்ப், லூட், மேளங்கள், ஊது குழல்கள், தம்பூரின்கள், தட்டி ஒலியெழுப்பும் கருவிகள் சகிதம் கை தட்டலுடன் பாடல்கள் இசைக்கப்பட்டன. உலகம் முழுக்க தொல்லியல் காட்சி மண்டபங்களில் ஏராளமான எகிப்திய இசைக் கருவிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எகிப்தியரின் நாளாந்த வாழ்வில் இசை எந்தளவு முக்கியத்துவம் உடையதாக இருந்தது என்பதற்கான தகவல்களையும் இப்பண்டைய இசைக்கருவிகள் எமக்குத் தருகின்றன.

மேற்காசிய இசையானது, இசைத் தோற்ற வரலாற்றையும், இசைப் பண்பாட்டையும், இசையுடனான வெகுசனத் தொடர்பையும் விளக்குவதற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்றது. இசையின் சமயத் தொடர்பை மட்டுமின்றி மக்களின் நாளாந்த வாழ்வுக்கான இசையின் தொடர்புகளையும், இசை எவ்வாறு மன அழுத்தத்திற்கும், உடல் நோய்களுக்கும் நிவாரண மாகலாம் என்பதையும் இவ்விசை மரபு நமக்கு உணர்த்துகிறது.

மேற்காசிய இசையானது, இசைத் தோற்ற வரலாற்றையும், இசைப் பண்பாட்டையும், இசையுடனான வெகுசனத் தொடர்பையும் விளக்குவதற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்றது.

உசாத்துணை நூல்கள்

எம்.எஸ்.எம். அனஸ், *(2014)*, அரபு இசை : கஸீதா முதல் கஸல் வரை, அடையாளம், திருச்சி.

பரிசுத்த வேதாகமம் (பழைய ஏற்பாடு) திருச்சிராப் பள்ளி, *1970*.

Smith's Bible Dictionary – Harp Bible Hub, Biblehub.com

AlecRobertson and Denis Steveris, The Pelican History of music, Pengum Books Great Britain, 1973:13.

Music in Ancient Israel/ Palestine, Joachim Brawn.

Lyres: The Royal Tombs of or Sumerian Shakepeare.com

Jonathan L.Friedman Music in Biblical Life, London, 1980.

விவிலியக் களஞ்சியம் (பியாகு), *1993*

Music in Ancient Egypt, www.umch.edu/ancientegypt

Music and entertainment – excerpt from Historical Deception.www.egypt-tet ut org 01.07.2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

உலகளாவிய ஆய்வுமுறையியல்: தமிழ்ச்சூழலுக்கான சில குறிப்புகள்

ஞா. ஸ்டீபன்

ஒவ்வொரு மொழியிலும் வெவ்வேறு முறையியல் களைப் பயன்படுத்தும் போது ஏற்படும் குழப்பங் களையும் ஐயங்களையும் தவித்தற் பொருட்டு பொதுமைப் படுத்தப்பட்ட உலகளவில் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஆய்வு முறையியல்கள் உருவாக்கப் பெற்றன.

ஆய்வுமுறையியல் என்பது ஆய்வு என்னும் அறிவுசார் செயல்பாட்டை முறைப்படுத்தும் ஒரு நெறியாகும். ஆய்வு எழுத்துக்கள் பொதுமைப் படுத்தபட்ட ஒழுங்கமைப்பில் சீராக அமைய உருவாக்கப்பட்ட நெறிமுறை களின் தொகுப்பே ஆய்வு முறையியலாகும். ஒவ்வொரு புலத்திற்கும் தனித்துவமான ஆய்வு முறையியல்கள் உள்ளன. ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள், நூல்கள் போன்றவை நாடுகளைக் கடந்தும் மொழிகளைக் கடந்தும் உலகளாவிய அறிஞர்களின் பார்வைக்குச் செல்கின்றன. ஒவ்வொரு மொழியிலும் வெவ்வேறு முறையியல்களைப் பயன்படுத்தும் போது ஏற்படும் குழப்பங்களையும் ஐயங்களையும் தவித்தற்பொருட்டு பொதுமைப்படுத்தப்பட்ட உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு முறையியல்கள் உருவாக்கப்பெற்றன. இதன் அடிப்படையில் மூன்று இன்றியமையாத வழிகாட்டும் நூல்கள் உருவாகின. அவை: MLA Style Sheet, Chicago Manuel, Harward Manuel என்பனவாகும்.

இலக்கியம் தொடர்பான ஆய்வுகளுக்குப் பெரும்பாலும் MLA Style Sheet - தான் உலகளவில் பின்பற்றப்படுகிறது. தமிழில் வந்துள்ள பெரும்பாலான ஆய்வு முறையியல் நூல்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த MLA Style Sheet - ஐ பின்பற்றியவை. MLA Style Sheet பலமுறை செம்மைப்படுத்தப்பெற்று மறுபதிப்பாக வெளிவந்துள்ளது. இத்திருத்தங் களையும் புதுமையாக்கங்களையும் தமிழில் வெளிவந்துள்ள ஆய்வு முறையியல் நூல்கள் கவனத்தில் கொள்ளவில்லை. வேறுவிதமாக சொல்வது என்றால் தற்போது தமிழில் பின்பற்றப்படும் ஆய்வு முறையியல் உலகளவில் வழக்கிறந்தது எனலாம்.

இலக்கிய ஆய்வு முறையியலை MLA Style Sheet முதன்மைப்படுத்திய போது Chicago Manuel சமூக அறிவியல் ஆய்வுமுறையியலை முதன்மைப் படுத்தியது. மானிடவியல், நாட்டார் வழக்காற்றியல், சமூகவியல் போன்ற புலங்களில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் இலக்கியப் புலங்களில் பயன்படுத்தப்படும் ஆவணங்களிலிருந்து வேறுபட்டவை. எனவே நூல்கள், கட்டுரைகள் தவிர்த்த ஏனைய ஆவணங்களைப் பயன்படுத்தும் முறையியலையும் Chicago Manuel இணைத்தது. மேலைநாடுகளில் இருபதாம் நூற்றாண்டில் Chicago Manuel மிகுந்த வரவேற்பைப் பெற்றது. பெரும்பாலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துலகச் சமூக அறிவியல் ஆய்விதழ்கள் Chicago Manuel - ஐப் பின்பற்றுகின்றன. எனவே Chicago Manuel முன்வைத்த ஆய்வு முறையியல் இலக்கியம், சமூக அறிவியல் புலங்கள் சார்ந்த ஆய்வுகளுக்கு ஏற்புடைய ஆய்வு முறையியலாக நிலைபெற்றது. இதனைப் போன்று வரலாற்றியல் ஆய்வுகளுக்கு Harward Manuel பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது.

தமிழில் ஆய்வு முறையியல் குறித்த விழிப்புணர்வு இல்லை என்றே சொல்லலாம். ஒவ்வொரு நெறியாளரும் ஒவ்வொறு முறையியலைப் பின்பற்றுகின்றனர். ஒரு நிறுவனத்துக்கென்றோ அல்லது ஒரு துறைக் கென்றோ பொதுவான முறையியல் இருப்பதாகவும் தெரியவில்லை. ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை மேம்பாடு மற்றும் வளர்ச்சி நிறுவனம், புதுவைப் பண்பாடு மற்றும் மொழியியல் நிறுவனம், புதுவைப் பிரஞ்சு ஆராய்ச்சி நிறுவனம் போன்ற ஒரு சில நிறுவனங்களே தங்களது வெளியீடுகளில் உலகளாவிய முறையியல்களைப் பின்பற்றுகின்றன. ஒரு சில ஆய்விதழ்களும் தங்களுக்கான முறையியல்களை வரையறுத்துள்ளன. பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு மையங்களிலும் செய்யப்படும் தமிழியல் ஆய்வுகளில் இவ்வாறான பொதுமைப்படுத்தப்பட்ட ஆய்வுமுறையியல்கள் வழக்கில் இல்லை. ஒருவர் பின்பற்றும் முறையியலை மற்றவர் குறை கூறுவதும் எது முறையியல் என்பது குறித்து அறியாதிருத்தலும் முறையியலை மனம்போனபோக்கில் பின்பற்றுவதும் ஒருவர் செய்த தவறை அப்படியே பின்பற்றுவதும் மாதிரி ஆய்வேடுகளை வைத்துக் கொண்டு அப்படியே நகல் செய்வது போல் பின்பற்றுவதும் தமிழில் பொதுவான நடைமுறையாக உள்ளது. முதுகலையிலும் ஆய்வியல் நிறைஞர் படிப்பிலும் ஆய்வு முறையில் தனித்தாளாகக் கற்பிக்கப்படுகின்றது. இந்தத் தாளில் கற்பனவற்றை ஆய்வேட்டிலோ அல்லது திட்ட ஏட்டிலோ பயன்படுத்துவதில்லை. இந்தத் தாள் வெறும் மதிப்பெண்ணுக்காக மட்டுமே என்ற எண்ணம்தான் பரவலாக உள்ளது. முறையியல் என்பது அடிக்குறிப்புகள், துணைநூற்பட்டியல், பின்னிணைப்பு ஆகியவற்றைத் தருவது மட்டும்தான் எனக் கருதுகின்றனர். முறையியல் பற்றிய கவலை நம்மிடம் பெரிதாக இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

முறையியல் என்பது அடிக்குறிப்புகள், துணைநூற் பட்டியல், பின்னிணைப்பு ஆகியவற்றைத் தருவது மட்டும்தான் எனக் கருதுகின்றனர். முறையியல் பற்றிய கவலை நம்மிடம் பெரிதாக இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஆய்வுக்கு முறையியல் தவிர்க்கமுடியாத ஒன்று. ஆய்வைச் செறிவாகவும் தருக்க அடிப்படையிலும் வளர்நிலையிலும் குறிப்பிட்ட தடத்தில் சென்று முடிவைத் தருவிக்க முறையியல் துணைசெய்கின்றது. குறிப்பிட்ட சிக்கலுக்கு ஒரு முடிவை முன்வைக்கும் போது அந்த முடிவு எவ்வாறு தருவிக்கப்பட்டது என்பதைத் தெரியப்படுத்தாவிடில் அதனை அறிவுலகம் ஏற்பதில்லை. முடிவு எவ்வாறு தருவிக்கப்பட்டது என்பதை எவருக்கும் புரியாத வகையில் மனம்போன போக்கில் எடுத்துரைப்பதும் ஏற்கப் படுவதில்லை. நாம் சென்ற பாதையில் மற்றொருவர் பயணித்தால் நாம் வந்தடையும் இடத்திற்கு அவரும் வந்தடைய வேண்டும். அவ்வாறாக வழிகாட்டும் பணியையே முறையியல் செய்கின்றது. ஆய்வை எவ்வாறு செயல்படுத்த வேண்டும்? ஆய்வுரையை எவ்வாறு அமைக்க வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றை நெறிப்படுத்துவதே முறையியலின் பணியாகும். அவ்வாறாயின் இந்த முறையியல் பொதுமைப்படுத்தப்பட்டதாக இருப்பதுதானே முறையாகும். இங்கு பேசப் பெற்றவற்றின் அடிப்படையில் உலகளவில் பின்பற்றப்படும் முறையியலைத் தமிழ்ச் சூழலுக்கேற்ப சுருக்கமாக அறிமுகம் செய்யும் முயற்சியே இது.

எது அறிவிற் குட்படாத மறைபொருளாக உள்ளது என்பதை இனங் கண்டால் தான் ஆராய்ச்சியைத் தொடங்க முடியும். இதனை ஆராய்ச்சி நெறிமுறை ஆய்வுச் சிக்கல் என்று குறிப் பிடுகின்றது.

ஆய்வுச் சிக்கல்

ஆராய்ச்சி என்பது அறிவின் பரப்பை விரிவுப்படுத்தும் செயல்பாடாகும். மனித அறிவிற்குட்படாத ஒன்றை அறிவிற்குட்படுத்துவதே அதன் பொருண்மையாகும். எது அறிவிற்குட்படாத மறைபொருளாக உள்ளது என்பதை இனங்கண்டால்தான் ஆராய்ச்சியைத் தொடங்க முடியும். இதனை ஆராய்ச்சி நெறிமுறை ஆய்வுச் சிக்கல் என்று குறிப்பிடுகின்றது. ஆய்வுச் சிக்கலைக் கண்டுபிடிப்பதும் அதனை விடுவிப்பதற்கான வழிகளை அடையாளங்கண்டு பயன்படுத்துவதும் தீவிரமானச் செயல்பாடுகளாகும். பொதுவாக தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் ஆய்வுச் சிக்கலைக் குறித்துக் கவலைப்படுவதில்லை. ஆய்வுக்கு ஒரு தலைப்பு மட்டுமே போதும் என்று எண்ணுகின்றனர். ஆராய்ச்சி முறையியலின் இன்றியமையாமையை உணராததன் விளைவே இது. ஆய்வாளர் முதலில் தான் ஆய்வு மேற்கொள்ள விரும்பும் பரப்பைத் தெரிவுசெய்ய வேண்டும். தனக்கு ஈடுபாடுள்ள அல்லது பரந்த வாசிப்புள்ள ஒரு பகுதியை யாருடைய துணையும் இன்றி தெரிவு செய்யலாம். அது நாவல், சிறுகதை, புதுக்கவிதை, சங்க இலக்கியம் என்பன போன்று அமையலாம். இவை ஒவ்வொன்றும் விரிந்த தளங்களைக் கொண்டவை. இந்த விரிந்த தளத்திலிருந்து பரப்பைச் சுருக்கி, சுருக்கிச் சிறிதாக்கி ஒரு குறிப்பிட்ட மையப்பொருளைத் தேர்வு செய்யவேண்டும். அப்பொருளில் ஆய்வாளருக்கு ஆர்வம் இருக்கவேண்டும். தான் சார்ந்த புலம் குறித்த பரந்த அறிவு இருந்தால் மட்டுமே இத்தகைய தேர்வுக்கு வழிவகுக்கும்.

சிக்கல் என்றால் என்ன? சிக்கலை எவ்வாறு உருவாக்குவது? என்பன பற்றித் தெரிந்துகொள்வதன் மூலம் ஆய்வுச் சிக்கலை உருவாக்குவதில் உள்ள இடர்ப்பாடுகளைத் தவிர்க்கலாம். ஆய்வுச் சிக்கலை உருவாக்குவது என்பது ஆய்வின் முதற்படியாகும். ‘எளிமையாகச் சொன்னால் சிக்கல் என்பது கோட்பாட்டு அளவில் அல்லது ஒரு சூழலில் ஆய்வாளன் எதிர்கொள்ளும் ஓர் இடர்ப்பாடாகும். இந்த இடர்ப்பாட்டிற்கு விடை காண்பது ஆய்வாளனின் வேலையாகும்’ என்கிறார் தே.லூர்து (1986:84). ஏற்கனவே கண்டறியப்பட்ட உண்மைகளின் மீது எழுப்பப்படும் ஐயம் அல்லது வினாவிற்கு எட்டிய அறிவால் விடைகாண இயலவில்லை எனில் அது ஆய்விற்கானச் சிக்கலாகக் கருதப்படும். அதாவது விடை காணப்பட வேண்டிய வினாவே சிக்கலாகும். இருப்பினும் எல்லா வினாக்களும் சிக்கல் ஆக முடியாது. அதனைப் போன்றே எல்லாச் சிக்கல்களும் அறிவியல் அடிப்படை கொண்டதாகவோ அல்லது ஆய்வுக்குரியதாகவோ அமையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறாயின் சிக்கலை உருவாக்குவதில் மிகுந்த கவனம் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே கண்டறியப்பட்ட உண்மைகளை அல்லது எட்டிய அறிவுப் பரப்பைக் கடந்து செல்ல வழி உள்ளதா? என்ற தேடலே சிக்கலைக் கண்டறிவதற்கான திறவுகோல் ஆகும். அறிந்த அறிவுப் பரப்பின்மீது ஐயம் கொள்வதின் மூலம் ஆய்விற்குரிய வினாவை உருவாக்கலாம் அல்லது ஏற்கனவே அறியப்பட்ட செய்திகள் முழுமையானவையா என்று சந்தேகப் படுவதின் மூலமும் வினாவை உருவாக்கலாம். மேலும், தலைமுறையினரின் அறிவு இடைவெளிகளின் காரணமாக எழும் குழப்பங்களை அடிப்படையாகக் கொண்டும் வினாக்கள் எழலாம். எவ்வாறாயினும் இருக்கின்ற உண்மைகள் அல்லது அறிவுப் பரப்பில் நிறைவடையாமல் அவற்றின் மீது வினாக்களைத் தொடுப்பதன் மூலமே ஆய்வுக்கான சிக்கலை உருவாக்க இயலும் என்பது தெளிவு. இவ்வாறாக எழுப்பப்படும் வினாக்கள் பல்வேறு வகைகளில் அமையலாம். சில வினாக்கள் கருத்தாக்கங்களை அல்லது கோட்பாடுகளை அல்லது மெய்மைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமையலாம்.

ஏற்கனவே கண்டறியப்பட்ட உண்மைகளை அல்லது எட்டிய அறிவுப் பரப்பைக் கடந்து செல்ல வழி உள்ளதா? என்ற தேடலே சிக்கலைக் கண்டறி வதற்கான திறவுகோல் ஆகும்.

சான்றாக, இங்கு ஒரு வினா முன்வைக்கப்படுகிறது. சங்க இலக்கியங் களில் உறவுமுறைச் சொற்கள் ஏன் காணப்படவில்லை? இவ்வினா சங்க இலக்கியங்களில் உறவுமுறைச் சொற்கள் காணப்படவில்லை என்ற உண்மையிலிருந்து எழுப்பப்பட்டதாகும். இவ்வினாவை எழுப்ப வேண்டும் என்றால் ஆய்வாளன் சங்க இலக்கியத்தை நன்கு அறிந்திருக்கவேண்டும். ஏனெனில் சங்க இலக்கியத்தில் உறவுமுறைச் சொற்கள் பயின்று வரவில்லை என்ற உண்மையைச் சங்க இலக்கியத்தை நுட்பமாக வாசிப்பதன் மூலமே அறிய இயலும். ஆய்வுச் சிக்கலை இனங்காண்பதில் இது முதற்படியாகும்.

இரண்டாவது படிநிலை வினாவைப் பகுத்தறிவுக்கு உட்படுத்துதல் ஆகும். இந்த வினாவிற்குப் பின்னால் உள்ள காரணகாரியங்களை ஆய்வாளன் தெளிவாக்க வேண்டும். இந்த வினா இதுவரை ஏன் எழுப்பப் படவில்லை? இந்த வினாவிற்கு விடை காண்பதின் மூலம் கிடைக்கும் பயன் யாது? இந்த வினாவிற்கான பொருத்தப்பாடு யாது? இந்த வினா ஆய்வுக்குரியதுதானா? இந்த வினாவிற்கான விடை ஏற்கனவே கண்டறியப் பெற்றுள்ளதா? மேற்குறித்த வினாக்களை எழுப்புவதின் மூலம் ஆய்விற்காக முன்வைக்கப்பட்ட வினாவின் ஆழத்தை உணர்ந்துகொள்ள முடியும். மேற்குறித்த வினாக்களுக்கு எல்லாம் பொதுஅறிவு அடிப்படையில் விடையளிக்க இயலும் எனில் அது ஆய்வுக்குரிய வினாவாக அமையாது. பொது அறிவின் மூலம் இவ்வினாக்களுக்கு விடை காண இயலாமல் தேடுதல் தேவை என்பதை உணர்த்தினால் ஆய்வுக்காக எழுப்பப்பட்ட வினா ஆய்வுச் சிக்கலுக்கான தகுதியுடையது எனத் தெளியலாம். இவ்வாறு ஆய்வு வினாவைப் பகுத்தறிவுக்கு உட்படுத்துவதின் மூலமே அதற்குரிய விடையைக் காணும் வழிமுறைகளையும் உணர்ந்து கொள்ளலாம்.

பொது அறிவின் மூலம் இவ் வினாக்களுக்கு விடை காண இயலாமல் தேடுதல் தேவை என்பதை உணர்த்தினால் ஆய்வுக்காக எழுப்பப்பட்ட வினா ஆய்வுச் சிக்கலுக்கான தகுதியுடையது எனத் தெளியலாம்.

நாம் ஏற்கனவே கண்ட ஆய்வு வினாவை இப்போது இரண்டாவது படிநிலைக்கு உட்படுத்திக் காண்போம். சங்க இலக்கியத்தில் உறவுமுறைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் ஏன் பயின்றுவரவில்லை என்று ஆய்வுக்காக முன்வைத்த வினாவுக்கு ஏன் இதுவரையிலும் எழுப்பப்படவில்லை? என்பது பகுத் தறிவுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். சங்க இலக்கியத்தைச் சமூக மானிடவியல் அடிப்படைகளில் ஆய்வு செய்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஒரு சமூகத்தின் அமைப்பிற்கும் செயல்பாட்டிற்கும் உறவுமுறை அமைப்பு மிக இன்றியமையாதது ஆகும். இதனை மானிடவியல் புலம் பல்வேறு ஆய்வுகளின் வழி வெளிப்படுத்தியுள்ளது. ஆயின் சங்க காலச் சமூக அமைப்பின் செயல்பாட்டைத் தெரிந்துகொள்ள உறவுமுறை ஒழுங்கமைப்பு பற்றிய தெளிவு தேவை என்பதை உணரலாம். மானிடவியல் புலத்தின் அடிப்படையில் சங்க இலக்கியத்தை அணுகும் போது உறவு முறைச் சொற்கள் இன்றியமையாத தரவுகளாகின்றன. இத்தரவுகள் சங்க இலக்கியத்தில் காணப்பெறாமையால் மேற்குறித்த கேள்வி முன்வைக்கப் பட்டது. ஆக, நாம் ஆய்விற்காக முன் வைத்த கேள்விக்குப் பின்னால் இருக்கும் காரணகாரியங்கள் இப்போது தெளிவாயிற்று. எனவே இக்கேள்வி ஆய்விற்குரியதே என்பது உறுதியாகின்றது.

வினா குறிப் பிட்ட ஒன்று பற்றியதாகவும் எளிமையான தாகவும், தெளிவான தாகவும், சோதித்து அறியக்கூடிய தாகவும், ஆய்வின் திசையை ஒரு குறிப்பிட்ட வழியில் எடுத்து செல்வதாகவும் அமையும்படி கூர்மைப் படுத்தப்பட வேண்டும்.

வினாவைக் கூர்மைப்படுத்தல் என்ற மூன்றாவது படிநிலை வினாவின் பரப்பு பற்றியதாகும். வினா பரந்துபட்டதாகவும் பொதுவானதாகவும் இருப்பின் அது இன்னும் பல துணைவினாக்களை எழுப்பும். எனவே வினா குறிப்பிட்ட ஒன்று பற்றியதாகவும் எளிமையானதாகவும், தெளிவானதாகவும், சோதித்து அறியக்கூடியதாகவும், ஆய்வின் திசையை ஒரு குறிப்பிட்ட வழியில் எடுத்துச் செல்வதாகவும் அமையும்படி கூர்மைப்படுத்தப்பட வேண்டும். வினாவைக் கூர்மைப்படுத்தும் முயற்சி வினா எவ்வாறு விடையளிக்கப்பட வேண்டும் என்ற வாயிலைத் திறக்கும். மேற்குறித்த முறையின் அடிப்படையில் ஆய்வுச் சிக்கலைத் தெளிவாக வரையறுத்த பின்னரே ஆய்வுத் தலைப்பை முடிவு செய்ய வேண்டும். ஆய்வுத் தலைப்பை முடிவு செய்த பின்னர் ஆய்வுச் சிக்கலைத் தேடுவது முறையற்றது. ஆய்வுக்கு அடிப்படையானது ஆய்வுச் சிக்கலேயன்றி ஆய்வுத் தலைப்பு அல்ல. ஆய்வுக்குரிய வினாவின் இரண்டாவது, மூன்றாவது படிநிலைகளை முறையாக மேற்கொள்ள முன்பனுவல் மதிப்பீடு இன்றியமையாதது.

முன்பனுவல் மதிப்பீடு

பொதுவாகத் தமிழ் ஆய்வுகளில் முன்பனுவல் மதிப்பீடு இடம்பெறுவதில்லை. அவ்வாறு இடம்பெற்றாலும் அது முறையியலின் தேவைக்காக ஆய்வேட்டை முடித்தபின் எழுதுவதாகவே உள்ளது. அல்லது எடுத்துக் கொண்ட ஆய்வுத் தலைப்பை ஒட்டி செய்யப்பெற்ற முன் ஆய்வுகளின் பட்டியலைத் தருவதாகக் காணப்படுகின்றது. முன்பனுவல் மதிப்பீடு ஏன் செய்ய வேண்டும் என்பது பற்றிய தெளிவு நம்மிடம் இல்லை. முறையியலை முறையாகப் பின்பற்றும் ஒருவர் முன்பனுவல் மதிப்பீடு செய்யாமல் ஆய்வுச் சிக்கலைத் தெளிவுபடுத்தமாட்டார். மேலும் ஆய்வின் அடிப்படைச் செயல்பாடான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுப்பரப்பை விரிவுபடுத்துதல் என்ற செயல்பாட்டையும் முன்பனுவல் மதிப்பீடு இல்லாமல் நிறைவேற்றுவது கடினமானது. தான் செய்த பங்களிப்பு என்ன என்பதை முன்பனுவல் மதிப்பீடு செய்யாத ஒருவரால் தெளிவுபடுத்த இயலாது.

ஆய்வுச் சிக்கலைக் கண்டுபிடித்த பின்னர் அது தொடர்பாக இதுவரை எட்டப்பட்ட அறிவு யாது என்பதைத் தேட வேண்டும். அதாவது அது தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளைத் தேட வேண்டும். அது ஆய்வேடுகளாக, நூல்களாக, கட்டுரைகளாக இருக்கலாம். அவற்றின் பட்டியலை முதலில் தயாரிக்க வேண்டும். பின்னர் ஒவ்வொரு படைப்பையும் பகுப்பாய்வுக்குட்படுத்தித் தனித்தனியே மதிப்பீடு செய்ய வேண்டும். இத்தனித்தனி மதிப்பீடுகளைக் கால வரிசையில் ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்தி அறிவின் அல்லது கருத்துக்களின் வளர்ச்சி நிலையைக் கண்டறிய வேண்டும். இறுதியாக எட்டப்பட்ட அறிவு அல்லது கருத்து எது என்பதைத் தெளிவுப்படுத்த வேண்டும். இப்போது தெரிவு செய்துள்ள ஆய்வுச் சிக்கலுக்கும் முன்பனுவல் மூலம் திரண்ட கருத்துக்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகளையும் முரண்களையும் விளக்க வேண்டும். இவ்வாறு செய்கையில் உங்களது ஆய்வுச் சிக்கலுக்கான ஒரு கருதுகோளை முன்மொழியத் தேவையான களங்கள் கிட்டும். உங்களது ஆய்வுச் சிக்கல் எட்டப்பட்ட அறிவின் எல்லைகளைக் கடந்து செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளதா என்பதை இப்போது அறிந்து கொள்ள இயலும். அவ்வாறான வாய்ப்பு இருக்கின்றது எனில் உங்களது ஆய்வுச் சிக்கல் வலுவானது என்பது தெளிவு. இந்தப் படிநிலைகளை முறையாகச் செய்யும் ஓர் ஆய்வாளனுக்கு ஆய்வுச் சிக்கலை விடுவிப்பதற்கு எத்தகைய தரவுகள் தேவை? எத்திசைவழிச் செல்ல வேண்டும்? என்ன கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்? என்பன போன்றவை இயல்பாகவே உணரத்தக்கதாக அமையும். தரவுகளைத் திரட்டி, ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்தித் தருக்க அடிப் படையில் விவாதங்களைத் திரட்டும் போது ஆய்வுச் சிக்கலுக்கான விடை எளிதாகக் கிடைத்துவிடும். இந்த உண்மையை எவ்வாறு கண்டுபிடித்தோம் என்பதை எழுத்து வடிவில் தருவதே ஆய்வேட்டுப் பணியாகும்.

தெரிவு செய்துள்ள ஆய்வுச் சிக்கலுக்கும் முன்பனுவல் மூலம் திரண்ட கருத்துக் களுக்கும் இடையில் உள்ள தொடர்பு களையும் முரண்களையும் விளக்க வேண்டும். இவ்வாறு செய்கையில் உங்களது ஆய்வுச் சிக்கலுக்கான ஒரு கருது கோளை முன்மொழியத் தேவையான களங்கள் கிட்டும்.

ஆய்வுரை எழுதுதல்

ஆய்வுரை எழுதுதல் என்பது ஆய்வின் இறுதிப் படிநிலையாகும். இதுவரை நாம் கண்ட நெறிமுறைகளின் அடிப்படையில் கண்டுணர்ந்த உண்மைகளை முறையாக எழுத்து வடிவில் தருவதே ஆய்வேடு ஆகும். ஆய்வேட்டை எவ்வாறு எழுத வேண்டும்? என்பதற்கும் சில முறையியல்கள் உள்ளன. ஆய்வேட்டை எவ்வாறு வடிவமைப்பது? மேற்கோள்கள், அடிக்குறிப்புகள், துணை நூற்பட்டியல் போன்றவற்றை எவ்வாறு அமைப்பது? போன்ற செய்திகளை ஆய்வு முறையியல் நமக்குத் தருகின்றது.

ஆய்வுரையை எழுதும் முன்னர் ஆய்வுரை எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றி மனத்தில் திட்டமிட்டுக் கொள்ளவேண்டும். ஆய்வுச்சிக்கல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஆய்வேடு மூன்று முக்கியமான பகுதிகளைக் கொண்டதாக அமையும். அவை: 1. ஆய்வுச் சிக்கலை விளக்குதல், 2. தரவுகளைப் பகுத்தாய்வு செய்தல், 3. முடிவுகளை எடுத்துரைத்தல்.

கருதுகோள், பகுத்தாய்வுக்குட்படுத்தப்பட்ட தரவுகள், கிடைக்கப்பெற்ற உண்மைகள், அதன் மூலம் கிடைத்த விளைவுகள், இறுதியாக வருவிக்கப் பெற்ற முடிவுகள் ஆகியவற்றை நன்கு சிந்தித்து வரிசைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆய்வேட்டின் வடிவமைப்பு

பொதுவாக ஆய்வேடு மூன்று முக்கியமான பகுதிகளைக் கொண்டதாக அமையும். அவை: 1. ஆய்வுச் சிக்கலை விளக்குதல், 2. தரவுகளைப் பகுத்தாய்வு செய்தல், 3. முடிவுகளை எடுத்துரைத்தல். ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட ஆய்வுச் சிக்கலின் தன்மைகளையும் அதன் எல்லைகளையும் அது ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவையை முன்பனுவல் மதிப்பீட்டின் வழியாகவும் முதற்பகுதியில் விளக்கவேண்டும். இரண்டாவது பகுதியில் ஆய்வுச்சிக்கலை விடுவிப்பதற்குப் பயன்படுத்தப்படும் தரவுகளின் தன்மை பற்றியும், அவற்றின் மதிப்பு பற்றியும், பகுப்பாய்வு செய்து விளக்க வேண்டும். மேலும், தரவுகளுக்கும் ஆய்வுச் சிக்கலுக்கும் இடையில் இருக்கும் உறவு நிலைகளையும் இப்பகுதியில் விவாதிக்கவேண்டும். மூன்றாவது பகுதியில் மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் ஆய்வுச் சிக்கலுக்கான தீர்வைத் தக்க சான்றுகளுடன் முன்வைக்கவேண்டும்.

தற்காலத்தில் பெரும்பாலான தமிழ் ஆய்வு மாணவர்கள் ஆய்வுத் தலைப்பை முடிவு செய்தவுடனையே இயல் பகுப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்துச் சிந்திக்கத் தொடங்கி விடுகின்றனர். நெறியாளர்களிடம் இது குறித்து ஆலோசனை பெற விரும்புகின்றனர். ஆனால், இதுவரை நாம் கண்ட படிமுறைகளைச் சரியாக பின்பற்றாமல் ஓர் ஆய்வாளன் தனது ஆய்வேட்டின் இயல்கள் எவ்வாறு அமையும் என்பதை முடிவு செய்ய இயலாது. முன்னர் கண்ட படிமுறைகளின்படி ஆய்வு செய்யப் படும் எனில் இயல்பகுப்பு என்பது கடினமான ஒன்று அல்ல. சிக்கலுக்கான தீர்வைக் கண்டறிய நிகழ்த்தப்பட்ட படிமுறைகளின் அடிப்படையிலேயே இயல் பகுப்புகள் அமைய வேண்டும்.

ஆய்வுரை தருக்க அடிப்படையில் தொடர்ச்சியுடையதாக அமைய வேண்டும். அவ்வாறு அமைய ஆய்வேட்டிற்கு ஒரு குறிப்பிட்ட ஒழுங்கமைப்பு பின்பற்றப்படுகின்றது. அதன் வருகைமுறை பின்வருமாறு அமையும்.

1. முன் அட்டை
2. தலைப்புப் பக்கம்
3. நெறியாளர் சான்றிதழ்
4. ஆய்வாளர் உறுதிமொழி
5. நன்றியுரை
6. சுருக்கக் குறியீடுகளின் விளக்கம்
7. பொருளடக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆய்வு முன்னுரை
9. இயல்கள்
10. ஆய்வு நிறைவுரை
11. சான்றாதாரங்கள்
    அ. முதன்மைச் சான்றாதாரம்
    ஆ. துணை நூற்பட்டியல்
12. பின் இணைப்பு

மேற்கண்ட வரிசை முறையில் ஆய்வேட்டின் வடிவமைப்பு அமைவது இயல்பு.

ஆய்வு முன்னுரையில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வுக்களம், ஆய்வு எல்லை, முன் ஆய்வுகள், ஆய்வு அணுகுமுறை, இயல் பகுப்புகள், பின் இணைப்புகள் ஆகியவை விளக்கப்பட வேண்டும். சுருங்கக்கூறின் ஆய்வு முன்னுரை என்பது ஆய்வேடு எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை அறிமுகம் செய்வதாகும்.

ஆய்வுப் பொருளின் தன்மைக்கு ஏற்ப இயல் பகுப்புகள் அமைய வேண்டும். தரவுகளைப் பகுப்பாய்வுக்குட்படுத்திய பின்னரே இயல் பகுப்பு எவ்வாறு அமையும் என்பதை முடிவு செய்ய முடியும். எவ்வாறாயினும் இயல் பகுப்பு விரிந்த தளத்திலிருந்து சுருங்கிச் சுருங்கி ஒரு குறிப்பிட்ட மையத்திற்கு நேராக செல்வதாக அமையவேண்டும். முதல் இயல் ஆய்வுக்களை விளக்கி முன்பனுவல் மதிப்பீடு செய்வதாகவும். இரண்டாவது இயல் ஆய்வுச் சிக்கலை விளக்குவதாகவும், மூன்றாவது இயல் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதாகவும், நான்காவது இயல் தரவுகளைச் சிக்கலோடு பொருத்தி விவாதிப்பதாகவும் அமைவது சிறப்புடையது. இந்த அமைப் பொழுங்கு இயல்பாகவே ஆய்வு முடிவுரைக்கு இட்டுச் சென்றுவிடும்.

தரவுகளைப் பகுப்பாய்வுக் குட்படுத்திய பின்னரே இயல் பகுப்பு எவ்வாறு அமையும் என்பதை முடிவு செய்ய முடியும். எவ்வாறாயினும் இயல் பகுப்பு விரிந்த தளத்திலிருந்து சுருங்கிச் சுருங்கி ஒரு குறிப்பிட்ட மையத்திற்கு நேராக செல்வதாக அமைய வேண்டும்.

ஆய்வு நிறைவுரையில் இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட உண்மைகளைச் செறிவாகத் தொகுத்துத் தரல் வேண்டும். இவ்வாய்வினைத் தொடர்ந்து மேலும் என்ன என்ன ஆய்வுகள் செய்ய வாய்ப்புக்கள் உள்ளன என்பதையும் நிறைவுரையில் சுட்டிக் காட்டலாம்.

ஆய்வு நிரைவுறையைத் தொடர்ந்து இவ்வாய்விற்குத் துணை நின்ற நூல்களின் பட்டியியல் இடம்பெற வேண்டும். இப்பட்டியலில் முதன்மை ஆதாரங்களையும், துணைமை ஆதாரங்களையும் தனித்தனியே பிரித்துக் காட்டவேண்டும். நூற்பட்டியல், அகராதி, கலைக்களஞ்சியம், நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள் என வகைப்படுத்தித் தரப்படல் வேண்டும். பட்டியல் அகர வரிசையில் அமையவேண்டும்.

பின் இணைப்பில் வரைபடங்கள், விளக்கப்படங்கள், களஆய்வில் சேகரித்த செய்திகள், மிக அரிதான ஆவணங்கள் போன்றவற்றை இணைத்துத் தரலாம். ஆய்வேட்டினைப் படிப்பவர்கள் மிக எளிதில் நோக்கீடு செய்ய இயலாத ஆவணங்கள் பின் இணைப்பில் முதன்மையான இடத்தைப் பெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கோளினைத் தேவை கருதி, பொருத்தப் பாட்டை அறிந்து பயன்படுத்த வேண்டும். ஏராளமான மேற்கோள் களைப் பயன்படுத்துவது ஆய்வுக்குச் சிறப்பு என்று கருதக்கூடாது.

மேற்கோள்களும் சான்றுகளும்

மேற்கோள் என்பது ஆய்வாளர் முன்வைக்கும் கருத்துக்குச் சான்றாக அமையும் பிறர் கருத்தாகும். ஒருவர் கருத்தை உறுதி செய்ய, மறுக்க, மேலும் தெளிவாக்க, அல்லது ஆய்வுக்கு உட்படுத்த மேற்கோள் பயன்படுத்தப்படுகிறது. எனவே, மேற்கோளினைத் தேவை கருதி, பொருத்தப்பாட்டை அறிந்து பயன்படுத்த வேண்டும். ஏராளமான மேற்கோள்களைப் பயன்படுத்துவது ஆய்வுக்குச் சிறப்பு என்று கருதக்கூடாது.

மேற்கோள்களை எடுத்தாளும்போது மூலநூலில் எவ்வாறு உள்ளதோ அவ்வாறே பயன்படுத்தவேண்டும். அதனைத் திருத்தம் செய்தல் கூடாது. ஏனெனில் அது பிறருடைய கருத்து ஆகும். பிறர் கருத்தை அனுமதி இல்லாமல் திருத்துவதற்கு நமக்கு உரிமை இல்லை என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். சில நேரங்களில் எடுத்தாளப்படும் மேற்கோள் மிக இன்றியமையாததாக இருக்கலாம். ஆய்வாளர்கள் இதற்கு அழுத்தம் கொடுக்க விரும்பலாம். இச்சூழல்களில் மேற்கோள்களை அடிக்கோடிட்டோ, தடித்த எழுத்துக்களிலோ காட்டலாம். இவ்வாறு செய்யப்பெற்றால் அடிக்குறிப்பில் அழுத்தம் எம்மால் தரப்பெற்றது எனக் குறிப்பிடவேண்டும். மேற்கோள்கள் அச்சிடப்பட்ட எழுத்து மூலங்களிலிருந்து மட்டும்தான் எடுத்தாளப்படும் என்பதில்லை. கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், நேர்காணல், கலந்துரையாடல் போன்றவற்றில் வாய்மொழியாகச் சொல்லப்படும் கருத்துக்களைக்கூட மேற்கோள்களாகப் பயன்படுத்தலாம். எவ்வாறாயினும் எது மேற்கோள் எது மேற்கோள் இல்லை என்பதை ஆய்வாளரே உறுதி செய்துகொள்ளவேண்டும்.

எல்லாக் கருத்துக்களும் மேற்கோளாகிவிடாது. உறுதி செய்யப்பெற்ற பொதுவான உண்மைகள் மேற்கோளாகாது. சான்றாக, 'சூரியன் கிழக்கே உதிக்கும்', 'பூமி உருண்டையானது', 'மனிதன் ஆறறிவு படைத்தவன்' போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே மேற்கோள்களைத் தெரிவு செய்யும்போது மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். ஆழமான, அழுத்தமான கருத்துக்களையே மேற்கோள்களாக எடுத்தாள வேண்டும். அவ்வாறு பயன்படுத்தும் போது கீழ்க்குறிப்பிடும் நெறிமுறைகளைக் கையாளவேண்டும்.

1. மேற்கோள்கள் மிக நீண்டதாக அமைதல் கூடாது. அதாவது ஒரு பக்கம், இரண்டு பக்கம் செல்லும் அளவுக்கு அமைவதைத் தவிர்த்தல் வேண்டும்.
2. இரண்டு மூன்று பக்கங்களில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை எடுத்தாள வேண்டிய சூழல் ஏற்பட்டால் அப்பகுதியில் சொல்லப் பட்டுள்ள கருத்துக்களை ஒரு சில வரிகளில் சுருக்கித் தரலாம். இவ்வாறு செய்யும்போது மேற்கோள் குறியீடுகளைப் பயன்படுத்தத் தேவையில்லை. ஆனால், இக்கருத்து யாருடையது என்பதைக் குறிப்பிட வேண்டும். சான்றாக: தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றைப் பேசும்போது கல்விப்புலம் சாராத அறிஞர்களின் திறனாய்வுப் பங்களிப்புகளே தரமானவை என்று பொதுவாகச் சொல்லப்படுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால். கல்வியாளர்களின் ஆய்வுப் பங்களிப்புகளை மறுக்கவோ, புறக்கணிக்கவோ இயலாது என்று சான்றுகளுடன் விளக்குகிறார் க.பஞ்சாங்கம் (1996: 65-69). மேற்குறித்தவாறு சுருக்கப்பட்ட பகுதியை மேற்கோளாகப் பயன்படுத்தவேண்டும்.

3. நேரடியாக பிறர் கருத்தை மேற்கோளாகப் பயன்படுத்தும் போது மேற்கோள் குறிகளுக்குள் அவற்றைப் பயன்படுத்தவேண்டும். மேற்கோள் முடிவுற்றவுடன் மேற்கோள் கருத்து எங்கிருந்து எடுக்கப்பட்டது என்ற சான்றைக் குறிப்பிடவேண்டும். சான்று:

''மேலைநாடுகளில் தோன்றிய இவ்விலக்கிய இயக்கம் அது தனது செல்வாக்கினாலும், ஒத்த சூழமைவினாலும் பொதுவானதொரு எழுச்சியின் பின்னணியில் இந்திய மொழிகளில் ஓர் இலக்கிய நெறியாகப் பரவிக் காணப்படுகிறது. இங்கு இது மேலைநாடுகளைப் போன்று திட்டமிட்ட இலக்கிய இயக்கம் அல்ல'' (தி.சு.நடராஜன், 1996:192).

4. மேற்குறித்தவாறு மேற்கோளைப் பயன்படுத்தும்போது மேற்கோளின் இறுதிப் பகுதியில் ஆசிரியரின் பெயரைச் சுட்டுவது என்றால் அடைப்புக் குறிக்குள் தரப்படும் நோக்கீட்டில் ஆசிரியரின் பெயர் தரப்படவேண்டிய தேவையில்லை. சான்று:

''இன்றைய புனைகதைகளில் முதலாளித்துவம் பொருளாதாரம் தந்த நெருக்கடிகளின் காரணமாகத் தோன்றிய மணமாகாத முதிர் பெண்டிர் நிலைகளும், மணமுறிவுகளும் சித்திரமாகியுள்ளதைக் காணலாம். இதுபோல் வரதட்சணைச் சிக்கலும் - மிகச் சமீப காலமாகப் புனைகதையுலகில் பெரும் இடத்தைப் பெற்றுள்ளது'' என்கிறார் தி.சு.நடராஜன் (1996:63).

5. மேற்கோளில் தேவையற்ற பகுதிகள் இருப்பின் அவற்றை நீக்க தொடர் புள்ளிகளைப் (...........) பயன்படுத்தலாம்.

6. மேற்கோளுக்குள் மேற்கோள் வரும்போது உள்ளேவரும் மேற்கோளுக்கு ஒற்றை மேற்கோள் குறியைப் பயன்படுத்தவேண்டும்.

7. பிறமொழி மேற்கோள்களைப் பயன்படுத்தும்போது மொழிபெயர்ப்பு செய்து பயன்படுத்தவேண்டும். மூலப்பகுதியை அடிக்குறிப்பில் தரவும்.

8. மேற்கோளினை வேறுபடுத்திக் காட்டவே மேற்கோள் குறிகள் பயன்படுத்தப்படுகின்றன. தற்காலத்தில் பெரும்பாலும் ஆய்வேடுகள் கணினியில் தட்டச்சு செய்யப்படுவதால் மேற்கோள் குறிகள் தேவையற்றனவாகின்றன. மேற்கோள் குறிகளுக்குப் பதிலாக மேற்கோளினைச் சாய்வெழுத்துக்களில் அல்லது வேற்று எழுத்துருவில் (font) தரலாம்.

மேற்கோள்களைப் பயன்படுத்தும்போது மேற்குறித்த நெறிமுறைகளைக் கையாளவேண்டும்.

இரண்டு மூன்று பக்கங்களில் சொல்லப் பட்டுள்ள கருத்துக்களை எடுத்தாள வேண்டிய சூழல் ஏற்பட்டால் அப்பகுதியில் சொல்லப் பட்டுள்ள கருத்துக்களை ஒரு சில வரிகளில் சுருக்கித் தரலாம். இவ்வாறு செய்யும்போது மேற்கோள் குறியீடுகளைப் பயன்படுத்தத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புகள் என்பது ஆய்வேட்டில் தர இயலாத அதே வேளையில் தொடர்புடைய கருத்துக்களைக் குறிப்பதாகும். இவற்றை ஆய்வேட்டின் உடல்பகுதியில் தருவதன் மூலம் தொடர்ச்சி பாதிக்கப்படும் என்பதால் உடற்பகுதிக்கு வெளியே தரப்படுகிறது. அடிக்குறிப்பு என்பது நோக்கீட்டு குறிப்புகள் மட்டும்தான் என்று கருதக் கூடாது.

அடிக்குறிப்புகள்

அடிக்குறிப்புகள் என்பது ஆய்வேட்டில் தர இயலாத அதே வேளையில் தொடர்புடைய கருத்துக்களைக் குறிப்பதாகும். இவற்றை ஆய்வேட்டின் உடல்பகுதியில் தருவதன் மூலம் தொடர்ச்சி பாதிக்கப்படும் என்பதால் உடற்பகுதிக்கு வெளியே தரப்படுகிறது. அடிக்குறிப்பு என்பது நோக்கீட்டு குறிப்புகள் மட்டும்தான் என்று கருதக்கூடாது. அடிக்குறிப்புகளைக் கீழ் குறிப்பிடும் சூழல்களில் பயன்படுத்தலாம்.

1. குறிப்பிட்ட பொருள்குறித்து கருத்து வேறுபாடுகள் உள்ளன என்று குறிப்பிடும் சூழலில் அடிக்குறிப்பைப் பயன்படுத்தலாம். என்னென்ன கருத்துவேறுபாடுகள் உள்ளன என்பதனை அடிக்குறிப்பில் நோக்கீட்டுக் குறிப்புகளுடன் விளக்கலாம்.
2. குறிப்பிட்ட கருத்தை அறிஞர் பலர் சுட்டியுள்ளனர் என்று எழுதும்போது அடிக்குறிப்பில் அவர்கள் யார்? யார்? என்ற குறிப்பினைத் தரலாம்.
3. வட்டார வழக்குச் சொற்கள், கலைச்சொற்கள் போன்றவற்றிற்கு அடிக்குறிப்பில் விளக்கம் தரலாம்.
4. ஆய்வாளர் சொல்லும் கருத்துக்கு ஒத்த அல்லது முரண்பட்ட கருத்துக்கள் இருப்பின் அவற்றை அடிக்குறிப்பில் சுட்டலாம்.
5. ஆய்வாளர் தெளிவு கருதி மேலும் விளக்கம் தர எண்ணும் இடங்களில் அடிக்குறிப்பு விளக்கம் தரலாம்.
6. மொழிப்பெயர்ப்பு தரவுகளைப் பயன்படுத்தும்போது அக்கருத்துக் களின் மூலத்தை அடிக்குறிப்பில் தரலாம்.

அடிக்குறிப்பைப் பயன்படுத்தும்போது கீழ்க்குறிப்பிடும் நெறிமுறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

1. அடிக்குறிப்பு எதற்குத் தரப்படுகிறதோ அதனை அறியும் வகையில் மேல் எண் அல்லது குறியீடுகள் பயன்படுத்தவேண்டும்.
2. அடிக்குறிப்புகளை அவ்வப் பக்கங்களில் தரலாம். அல்லது இயல் இறுதியில் தரலாம். இயல் இறுதியில் தருவது தற்போது பெரிதும் பின்பற்றப்படும் முறையாகும்.
3. அடிக்குறிப்புகளுக்காக இடப்பெறும் மேல் எண்கள் தொடர் எண்களாக அமைய வேண்டும்.
4. இயலில் பயன்படுத்தப்பெற்றுள்ள அடிக்குறிப்பு தொடர் எண்களின் வரிசை முறைப்படி இயல் இறுதியில் அடிக்குறிப்பு விளக்கம் தரப்படல் வேண்டும்.
5. அடிக்குறிப்புகளுக்குப் பயன்படுத்தப்பெறும் எழுத்துக்களின் அளவு உடற்பகுதியில் பயன்படுத்தப்படும் எழுத்துக்களின் அளவைவிடச் சற்று சிறியதாக இருப்பது நல்லது.
6. விளக்கப்படங்கள், அட்டவணை, வரைபடங்கள் போன்றவற்றையும் தேவை கருதி அடிக்குறிப்பில் தரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை நூற்பட்டியல்

ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்களின் பட்டியலையே துணைநூற்பட்டியல் என்கிறோம். அதாவது ஆய்வுக்குப் பயன்பட்ட துணைமைச் சான்றுகள் போன்றவற்றின் நோக்கீட்டுப் பட்டியலே துணை நூற்பட்டியலாகும். இப்பட்டியலில் ஆய்வேட்டில் பயன்படுத்தப்பட்ட நூற்கள் மட்டுமின்றிப் படித்த நூற்களின் பட்டியலையும் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை. ஆனால், படித்த நூற்கள் ஆய்வோடு தொடர்புடையதாகவும், ஆய்வுச் சிந்தனைக்குத் துணை நின்றதாகவும் அமையவேண்டும். துணை நூற்பட்டியலை ஆய்வேட்டின் இறுதியில் அதாவது ஆய்வு நிறைவுரையைத் தொடர்ந்து வரும்படி அமைத்தல் வேண்டும்.

துணை நூற்பட்டியல் அமைப்பதற்குச் சில நெறிமுறைகள் உள்ளன. தமிழில் இதுவரை வந்துள்ள ஆய்வு முறையியல் பற்றிய நூற்கள் பழைய துணை நூற்பட்டியலின் நெறிமுறைகளையே குறிப்பிடுகின்றன. ஆனால், தற்காலத்தில் உலகளவில் புதிய நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அந்நெறிமுறைகளே இங்கு தரப்படுகின்றன.

ஒரு தனித்த ஆசிரியரால் எழுதப்பெற்ற நூல் எனில் கீழ்க்கண்ட நெறிமுறையைப் பின்பற்ற வேண்டும். ஆசிரியர் பெயர், முன் எழுத்து, வெளிவந்த ஆண்டு, நூலின் பெயர், வெளியிட்ட இடம், வெளியீடு என்ற வரிசை முறையில் பின்பற்றப்படும். நிறுத்தற் குறிகள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

சான்று

லூர்து, தே., 1986: *நாட்டார் வழக்காற்றியல் களஆய்வு*, பாளையங்கோட்டை: பாரிவேள் பதிப்பகம்.

ஒரே ஆசிரியர் பல நூற்கள் எழுதி இருந்தால் அவற்றை வெளியான ஆண்டின் அடிப்படையில் வரிசைப்படுத்த வேண்டும். ஆசிரியர் பெயரை முதல் முறை மட்டும் பயன்படுத்தினால் போதும், அதன் பின்னர் ஆசிரியர் பெயர் வரும் இடத்தில் கோடிட்டுக் காட்டினால் போதுமானது.

ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இணைந்து எழுதிய நூல் எனின் முதல் இரு ஆசிரியர் பெயர்கள் மட்டும் தரப்பெறல் வேண்டும்.

சான்று

பெரிய கருப்பன், இராம., எம்.எஸ்., இலக்குமணன், 1998: *ஆய்வியல் அறிமுகம்*, மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

பதிப்பிக்கப்பெற்ற நூல் எனின், லூர்து, தே., (ப.ஆ), 1981: *நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்*, பெருமாள்புரம்: பாரிவேள் பதிப்பகம்.

ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை எனில், ஆசிரியர் பெயர் இல்லை எனக் குறிப்பிட்டு மேற்குறித்த வரிசை முறைப்படி பிற தகவல்களைத் தரவேண்டும்.

துணை நூற்பட்டியல் அமைப்பதற்குச் சில நெறிமுறைகள் உள்ளன. தமிழில் இதுவரை வந்துள்ள ஆய்வு முறையியல் பற்றிய நூற்கள் பழைய துணை நூற்பட்டியலின் நெறிமுறை களையே குறிப்பிடுகின்றன. ஆனால், தற்காலத்தில் உலகளவில் புதிய நெறிமுறைகள் பின்பற்றப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பிக்கப்பெற்ற நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற கட்டுரைகள் எனில், செல்லபெருமாள், ஆ., 1999: 'நாட்டார் தெய்வங்களின் பண்புக்கூறுகளும் பன்முகத் தன்மைகளும்', பண்பாட்டு வேர்களைத்தேடி, ஞா. ஸ்டீபன் (தொ.ஆ), பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் (பக்.100-122).

இதழ் கட்டுரை எனில், சிவசுப்பிரமணியம், ஆ., 1998: ''அடித்தள மக்கள் மீதான பாலியல் வன்முறைகள்'', ஆராய்ச்சி, 20:18, பாளையங்கோட்டை: நெல்லை ஆய்வுக்குழு(பக்.120-130). மேற்கண்ட நெறிமுறைகளின் அடிப்படையில் துணை நூற்பட்டியல் அமையவேண்டும்.

பின்னிணைப்பு

ஆய்வேட்டின் இறுதிப் பகுதியாக அமைவது பின்னிணைப்பாகும். ஆய்வுக்குப் பயன்பட்ட சான்றாதாரங்களின் தொகுப்பு பின்னிணைப்பில் இடம்பெற வேண்டும். பொதுவாக ஆய்வாளர்கள் பின்னிணைப்பில் அதிக கவனம் செலுத்துவதில்லை. ஆனால், பின்னிணைப்பு ஆய்வின் நம்பகத்தன்மைக்குச் சான்றாக அமையும் ஒரு பகுதி என்பதை மனத்தில் கொள்ளவேண்டும்.

களப்பணித் தரவுகள், நிழற்படங்கள், விளக்கப்படங்கள், வரைபடங்கள், கலைச்சொல் அகராதி போன்றவற்றைப் பின்னிணைப்பில் தரலாம். மிக அரிதான ஆவணங்களின் நகல்களையும் பின்னிணைப்பில் இணைக்கலாம். பின்னிணைப்பில் தரப்படும் ஆவணங்கள் வகைதொகை செய்யப்பட்டு முறைப்படுத்தித் தருதல் வேண்டும். ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள சான்றாதாரங்களை நோக்கீடு செய்யும் வகையில் ஆய்வேட்டில் பின்னிணைப்பு பக்க எண்களைத் தேவையான இடங்களில் குறிப்பிட வேண்டும். ஆய்வோடு தொடர்புடையனவற்றை மட்டுமே பின்னிணைப்பில் தர வேண்டும். பின்னிணைப்பில் ஏதோ சில பக்கங்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத் தேவையற்றனவற்றைத் திணிக்கக்கூடாது. சில ஆய்வு களுக்குப் பின்னிணைப்புப் பகுதி தேவைப்படாது என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். எனவே எல்லா ஆய்வேடுகளுக்கும் பின்னிணைப்பு இன்றியமையாதது என்று கருதக் கூடாது.

தமிழியல் ஆய்வுகளில் ஆராய்ச்சி முறையியல்கள் ஒரே சீராக அமைவதே சிறப்பு. உலகளவில் பொதுமைப்படுத்தப்பட்ட முறையியல்களைப் பின்பற்றுவது மேலும் சிறப்பு. ஆய்வுகளின் தரத்தை உயர்த்த ஆராய்ச்சி முறையியல்களைப் பின்பற்றுவது நல்ல பலன்களைத் தரும் என்பது உறுதி. குறிப்பிட்ட ஒரு புலத்தில் ஆழ்ந்த வாசிப்பும் பரந்த அறிவும் கோட்பாடுகள், அணுகுமுறைகள் பற்றிய தெளிவும் இல்லாத ஒருவரால் இங்கு பேசப்பெற்றுள்ள முறையியல்களைப் பின்பற்ற இயலாது. வாசிப்பும் கருவிகள் குறித்த தெளிவும் இல்லாத ஒருவர் முறையியலை மட்டும் கற்றுக் கொள்வதால் எந்தப் பயனும் இல்லை. எனவே ஆராய்ச்சி முறையியலைப் பயன்படுத்தவும் சில அடிப்படைத் தேவைகள் உள்ளன என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

ஆழ்ந்த வாசிப்பும் பரந்த அறிவும் கோட்பாடுகள், அணுகுமுறைகள் பற்றிய தெளிவும் இல்லாத ஒருவரால் இங்கு பேசப்பெற்றுள்ள முறையியல் களைப் பின்பற்ற இயலாது. வாசிப்பும் கருவிகள் குறித்த தெளிவும் இல்லாத ஒருவர் முறையியலை மட்டும் கற்றுக் கொள்வதால் எந்தப் பயனும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

தேர்தல் சீர்திருத்தங்களும் அரசியற் சிறுபான்மையினரும்

சி. சிவசேகரம்

அரசியல் யாப்பு வரைவின்போது, நாட்டை எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளைவிடப் பெரிய மோதற் களமாகத் தேர்தல் சீர்திருத்த அலுவல் அமையும். ஒவ்வொரு அரசியற் கட்சியும், எதிர்காலப் பாராளுமன்றங்களில் தனது ஆசன வலிமையைப் பேணுவதைக் கவனிக்கும். அதே அளவுக்குத், தனிப்பட்ட அவாக்களும் அதிற் செயற்படும். தேர்தல் சீர்திருத்த விவாதங்களில் வருந்தற்குரியது ஏதெனின், இற்றைவரை அவை குற்பிட்ட சில அரசியற் கட்சிகளின் பாராளுமன்ற வலிமை மீது சீர்திருத்தங்களின் தாக்கம் பற்றியன வன்றிச் சனநாயகப் பிரதிநிதித்தும் பற்றியனவல்ல. இப்பின்னணியில், நாட்டில் நடைமுறையில் இருந்துள்ள தேர்தல் முறைகளின் விளைவுகளின் அடிப்படையில் மேலுஞ் சனநாயகமான தேர்தல் முறை ஒன்றுக்கான ஒரு தேடலாகவே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தேர்தல் சீர்திருத்த விவாதங்களில் வருந்தற்குரியது ஏதெனின், இற்றைவரை அவை குற்பிட்ட சில அரசியற் கட்சிகளின் பாராளுமன்ற வலிமை மீது சீர்திருத்தங்களின் தாக்கம் பற்றியன வன்றிச் சனநாயகப் பிரதிநிதித்தும் பற்றியனவல்ல.

வெற்றிக்கம்பத்தை முதலிற் கடந்தவரின் தெரிவு [வெ.மு.க.]

First past the Post Scheme (1947-1977)

1978ஆம் ஆண்டின் யாப்பு நிறைவேறும் வரை நாட்டில் நடைமுறையிலிருந்த தொகுதிவாரித் தேர்தல் முறையில், ஒவ்வொரு தொகுதியிலும் மிக அதிக வாக்குக்களைப் பெற்றவர் அத் தொகுதிப் பிரதிநிதியாகத் தெரிவாவர். வெவ்வேறு சமூகங்களை ஒப்பிடத்தக்களவிற் கொண்ட சில தொகுதி களில் பல உறுப்பினர்த் தொகுதிகள் இருந்தன. (1947ஆம் ஆண்டு கொழும்பு மத்திக்கு மூன்று ஆசனங்களும் கடுகண்ணாவ, பலாங்கொட, அம்பலாங்கொடை-பலப்பிட்டிய ஆகியவற்றுக்கு இவ்விரண்டு ஆசனங்களும் ஒதுக்கப்பட்டன.) இந் நடைமுறை 1977 தேர்தல் வரை வேறு பல உறுப்பினர்த் தொகுதிகளுடன் நடைமுறையிலிருந்தது.

எவ்வாறாயினும், இத் தேர்தல் முறை, ஒருசில கட்சிகளே அதிகாரத்துக்குப் போட்டியிடும் போது உறுதியான பாராளுமன்ற அரசாங்கம் எனும் நலனைத் தந்தாலும், அந் நலனின் விலை - பிரதேச அடிப்படையில் வலிய தளங்களை யுடைய கட்சிகள் நீங்கலாக - கட்சிகள் பெற்ற ஆசனங்கள் அவை பெற்ற வாக்குக்கட்கு விகிதாசாரமாக அமையாமையும் சிறிய கட்சிகட்கு மாறான கடுமையான சாய்வுமாகும். அட்டவணை-1 இலுள்ள தரவுகள் வாக்குக்களின் தொகைக்கும் ஆசன எண்ணிக்கைக்கும் இடையில் உச்ச உடன்பாடின்மைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவற்றை உணர்த்தும். எளிமைக்காகக், கட்சிப் பெயரிற் தேர்தலிற் பங்கேற்ற இடதுசாரிக் கட்சிகள் அனைத்தினதும் தரவுகளை ஒன்றாகவும் அக்காலத்திற் செயற்பட்ட இரண்டு தமிழ் அரசியற் கட்சிகளின் தரவுகளை ஒன்றாகவும் தொகுத்துள்ளேன். கட்சிப் பெயரையடுத்து வாக்குச் சதவீதமும் அடைப்புக்களுள் ஆசன எண்ணிக்கையும் உள்ளன.

அட்டவணை-1: வாக்குகட்கும் பாராளுமன்ற ஆசனங்கட்கும் பொருந்தாமை (1947-1977)

கட்சி	1947	1956	1970	1977
ஐ.தே.க.	*39.9 (44.2)*	*30.9 (08.4)*	*37.9 (11.3)*	*50.9 (83.3)*
ஸ்ரீ.ல.சு.க.	*00.0 (00.0)*	*44.9 (53.7)*	*36.6 (60.0)*	*29.7 (04.8)*
இடது	*20.6 (18.9)*	*16.9 (17.9)*	*12.2 (16.7)*	*04.0 (00.0)*
தமிழ்	*04.4 (07.4)*	*06.5 (11.6)*	*07.3 (10.7)*	*06.4 (10.7)*

(குறிப்பு: 1956ஆம் ஆண்டில் ஸ்ரீ.ல.சு.க. என்பது மக்கள் ஐக்கிய முன்னணியைக் குறிக்கிறது. இடது என்பது தமது பெயர்களிற் போட்டியிட்ட அனைத்து இடதுசாரிக் கட்சி களையும் உள்ளடக்குகிறது. தமிழ் என்பது 1970 வரை தமிழரசுக் கட்சியையும் தமிழ்க் காங்கிரஸையும் சேர்த்தும் 1977இல் தமிழர் தேசிய ஐக்கிய விடுதல முன்னணியையுங் குறிக்கிறது. 1947இல் 29.2% வாக்குக்களைப் பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள் 22.1% ஆசனங்களைக் கைப்பற்றினர்.)

பெற்ற வாக்குக் கட்கும் ஆசன எண்ணிக் கைக்கும் சமனின்மை எப்போதும் இருந்துள்ளது. 1956இலும் 1970இலும் ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அநீதிக்குட் பட்டது. 1977 இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீ.ல.சு.க.) அதினும் பெரிய அநீதிக்கு ஆளானது.

பெற்ற வாக்குக்கட்கும் ஆசன எண்ணிக்கைக்கும் சமனின்மை எப்போதும் இருந்துள்ளது. 1956இலும் 1970இலும் ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அநீதிக்குட்பட்டது. 1977இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீ.ல.சு.க.) அதினும் பெரிய அநீதிக்கு ஆளானது. இச் சமனின்மையை மூலோபாயமான தேர்தற் பங்குபற்றல், தேர்தல் உடன்படிக்கைகள், இன அடிப்படையில் அமைந்த பிரதேசவாரியான வாக்களிப்பு ஆகியன விகாரப்படுத்துவன. இங்கு விவரங்கள் தரப்படாத 1952ஆம் ஆண்டின் தேர்தல் தொட்டு, வெ.மு.க. முறை, பிரதான கட்சிகளிடையே தோற்ற கட்சிகட்கும் கூட் டணிகட்கும் பாதகமாய் அமைந்தன. வடக்கிலும கிழக்கிலும் ஆதரவுத் தளங்களையுடைய தமிழ்த் தேசியக் கட்சிகளை விட்டால், அனைத்துச் சிறிய கட்சிகளும் நட்டப்பட்டன.

இடதுசாரிக் கட்சிகள் தமது பிரதிநிதித்துவத்தை அறவே இழந்த 1977 தேர்தல் தவிர்ந்த பிற தேர்தல்களில் வாக்கு விகிதத்துடன் ஒப்பிடத்தக்க அல்லது அதினுங் கூடிய விகிதத்தில் ஆசனங்களை வென்றுள்ளனர். 1956 முதல் 1970 வரை, இடதுசாரிகளின் வாக்குக்களதும் ஆசனங்களதும் தொகை கள் ஸ்ரீ.ல.சு.க.வுடன் செய்த போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கைகளால் விகாரப்பட்டுள்ளன. பெற்ற வாக்குக்கட்கு உரியதற்கும் மேலாக 20 முதல் 60 சதவீதம் வரை ஆசனங்களை வென்ற கட்சியும் 70 முதல் 80 சதவீதம் வரை உரியதற்குங் குறைவான ஆசனங்கள் அதன் போட்டிக் கட்சியும் பெற்ற 1956ஆம், 1970ஆம், 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிவுகள் வெ.மு.க. முறைக்கெதிரான வலிய ஒரு வாதமாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆசனப் பங்கு அவற்றின் வாக்குப் பங்கிற்கு அதிகமெனினும் தமிழ்ச் சனத்தொகையின் அடிப்படையில் அது உரியதினுங் குறைவாகும். முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் தமிழ் அல்லது சிங்களத் தேசியவாதக் கட்சி ஒன்றின் வேட்பாளராகவோ அன்றி அக்கட்சிகளின் ஆதரவுடனேயோ மட்டுமே இயலுமானது. 1947இல் சனத்தொகை விகிதத் திற்கு ஈடாக இல்லாவிடினும் ஓரளவேனும் நியாயமாக 6 பாராளுமன்றப் பிரதிநிதிகளைப் பெற்ற மலையகத் தமிழர், அதன் பின், 1977 வரை, தெரிவின் அடிப்படையிற் பிரதிநிதித்துவம் இழந்தனர். அவர்களில் ஒரு சிறு பகுதியினருக்குக் குடியுரமை கிடைத்ததால் 1977 தேர்தலில் ஒரு பாராளுமன்றப் பிரதிநிதியைப் பெற்றனர்.

தற்போதைய தேர்தல் முறைக்கு மாறல்

1978ஆம் ஆண்டின் யாப்பின் கீழ்த், சற்று வஞ்சக நோக்கங்கட்காகத் தேர்தல் முறை மாறுண்டது. ஐ.தே.க. 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் வென்ற 83 சதவீதப் பாராளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டு 1978ஆம் ஆண்டில் நிவைவேற்றதிகாரச் சனாதிபதி முறை நிலைநிறுத்தப்பட்டது. 1977ஆம் ஆண்டு அத்தகைய பெரும்பான்மையை ஈந்த ஒரு தேர்தல் முறை, மாறிய நிலைமைகளில் இன்னொரு கட்சிக்கோ கூட்டணிக்கோ அதையொத்ததொரு பெரும்பான்மையை வழங்கி 1978ஆம் ஆண்டின் யாப்புப் புகுத்திய மாற்றங்களை முன்பின்னாக்குவதுடன் ஐ.தே.க.வுக்குப் பதகமான அம்சங் களையும் சேர்க்கலாம். அந்த இடரை ஜே.ஆர். ஜயவர்தன அறிவார். எனவே மாவட்ட அடிப்படையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தைப் (மா.வி.பி.) புகுத்தினார். அதனுடன் சிறு அளவு தேசியப் பிரதிநிதித்துவத்தையும் இணைத்தார். இவ்வாறு, எந்த ஒரு கட்சியும் பொதுத் தேர்தற் பெரும்பான்மை கொண்டு தனது அரசியல் யாப்பைக் குலைக்கும் வாய்ப்பை மறுத்தார். அதன் பயனாக, வரவிருந்த ஆண்டுகளில் எந்தவொரு கட்சியும் பாராளு மன்றத்திற் தனிப் பெரும்பான்மையைப் பெற இயலவில்லை. ஜயவர்தன சரியாகவே கணித்தார் என அடுத்து வந்த தேர்தல்கள் காட்டின. அதன் பின், 1956இற் போன்றோ 1970இற் போன்றோ ஐ.தே.க. பாராளுமன்ற ஆசனங்களைத் தோற்கவில்லை. ஐ.தே.க. வரலாற்றில் அதி குறைவான வாக்குப் பங்கை பெற்ற 2010ஆம் ஆண்டுத் தேர்தலில், 29.3 சதவீத வாக்குக்களைப் பெற்ற ஐ.தே.க. தலைமையிலான கூட்டணி 225 பாராளுமன்ற ஆசனங்களில் 60ஐ (26.7 சத வீதத்தை) வென்றது.

1978ம் ஆண்டின் யாப்பின் கீழ்த், சற்று வஞ்சக நோக்கங்கட்காகத் தேர்தல் முறை மாறுண்டது. ஐ.தே.க. 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் வென்ற 83 சதவீதப் பாராளுமன்றப் பெரும்பான்மை யைக் கொண்டு 1978ம் ஆண்டில் நிவைவேற்ற திகாரச் சனாதிபதி முறை நிலை நிறுத்தப்பட்டது.

ஜயவர்தன, எந்த நிச்சயமின்மையையுந் தவிர்க்குமாறு, யாப்பின் சில பகுதிகளைத் திருத்த சர்வசன வாக்கெடுப்பும் வேறு சில பகுதிகளைத் திருத்த உயர்நீதிமன்ற ஆணையும் தேவைப்படுமாறு யாப்பு வாசகங்களைப் புகுத்தினார். இதை 2015 ஏப்ரலில் 19வது யாப்புத் திருத்தம் பற்றிய உயர் நீதிமன்ற விதிப்பு தெளிவாக உணர்த்தியது.

மாவட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவத்துக்கு (மா.வி.பி.) ஆக்கமான சில பண்புகள் இருந்தன. அதன் கீழ் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மாவட்டங்களில் ஆசனங்களைப் பெறவும் முஸ்லிம்களும் மலையகத் தமிழரும் அவர்கள் 10 சதவீத அளவிலுள்ள மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவம் பெறவும் இயன்றது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அதிக நலன் பெற்றன. இத்தகைய தேர்தல் வெற்றிகள் அரசியல் வேறுபாட்டிலன்றித் தனிமனித முரண்பாட்டின் பயனான கட்சிப் பிளவுகட்கும் புதிய கட்சிகளின் தோற்றத்துக்கும் உதவின. அதை விடக், குறிப்பான சில வேட்பாளர்கட்கு அனுசரணையும் தாம் வேண்டும் மனிதர்களை வேட்பாளர்களாக நியமிக்குமாறு கட்சிகளை வற்புறுத்தலும் போன்ற ஒழுங்கீனமான முறைகளால் தன்னல அக்கறையுடையோர் அரசியற் கட்சிகளுள் செல்வாக்கை விலைக்கு வாங்கினர்.

அரசியற் கட்சி வேட்பாளர் பட்டியல்களிலிருந்து மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர்களை விருப்பு வாக்குக்கள் மூலம் தெரிந்தமை மா.வி.பி. முறையிற் பிரச்சனைகட்குக் காரணமாயிற்று. விருப்பு வாக்குக்கள், கட்சி களிடையிலான போட்டியையும் வன்முறையையும் விட வலுவாகத், தமக்குட் போட்டியிடும் கட்சி வேட்பாளர்களிடையே போட்டியையும் வன்முறையையும் உச்சப்படுத்தியது. குறிப்பாகப் பெரிய கட்சிகளுள், பாராளுமன்ற உறுப்பினராகவரக்கூடிய ஒவ்வொருவரும் தனக்குப் போட்டியானோரை மேவ விரும்பியதால், தனிப்பட்ட போட்டிகள் கட்சி ஒற்றுமையைக் குலைத்தன.

அரசியற் கட்சி வேட்பாளர் பட்டியல் களிலிருந்து மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களை விருப்பு வாக்குக்கள் மூலம் தெரிந்தமை மா.வி.பி. முறையிற் பிரச்சனைகட்குக் காரணமாயிற்று.

சீர்திருத்தச் சமர்

வெற்றிக்கம்பத்தை முதலிற் கடந்தவரின் தெரிவு (வெ.மு.க.) முறைக்கு மீளுதற்கான வேண்டுதல் 2015ஆம் ஆண்டு ஐ.ம.சு.கூ. ஆட்சி நீங்கு முன்பே வலுவாயிருந்தது. ஐ.ம.சு.கூ. ஆட்சியின் போது சிலகாலமாக, சனநாயக நலனுக்காயன்றி, உட்கட்சி மோதல்களைச் சற்றுத் தணிக்கவும், அதினும் வன்மமாக, மா.வி.பி. முறையால் எழுச்சிகண்ட சிறிய கட்சிகளைப் பலவீனப்படுத்தும் நோக்கிலும் தேர்தல் சீர்திருத்தம் கருதப்பட்டது. அதி முக்கியமான சிறுபான்மையினரின் பிரதிநிதிக் கட்சிகள் இரண்டை அமைதிப்படுத்தும் பல்வேறு சூத்திரங்கள் முன்வைக்கப்பட்டன. வெ.மு.க. முறைக்கும் மா.வி.பி. முறைக்கும் இடையிலான அதி சிறந்த சமரசத்தாலும் முஸ்லிம், மலையகத் தமிழ்க் கட்சிகள் மிக நட்டப்படும் என்பதால் உடன்பாடு ஏற்படவில்லை. தெரிவாவோரிற் பெரும் பங்கினரை மா.வி.பி. முறையில் தெரிவது ஒரு சிறு ஆறுதலாய் அமைந்திருக்கலாம். 2015 ஜூன் அளவில் பாராளுமன்ற உறுப்பினர் தொகையை 225இலிருந்து 237க்குக் கூட்டுவதாயும் அதில் 145 பேரை வெ.மு.க. முறையிலும் 55 பேரை மா.வி.பி. முறையிலும் 37 பேரை தேசிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ (தே.வி.பி.) முறையிலும் தெரிவதெனும் ஏற்பாடு எட்டப்பட்டது.எனினும் உடன் பாடின்மை தொடர்ந்தது. அதனிடை, இனித்தான் தீர்மானிக்க வேண்டிய ஒரு இரட்டை வாக்களிப்பு முறை பற்றிய புதிய யோசனைகளும் வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டமொன்றின் முன்னிலைக் கட்சிகட்கு வாய்ப்பான மா.வி.பி. முறை, சிறிய கட்சிகட்குப் பாதகமானது. தேசிய வாக்குத் தொகை என்பது அனைத்துத் தொகுதிகளிலும் ஒரு கட்சி பெற்ற வாக்குக்களின் கூட்டுத் தொகையாதலால், தே.வி.பி. ஆசனங்களை அதிகரித்தல் சில கட்சிகட்கு உதவலாம். எனினும் வெ.மு.க.வினதும் மா.வி.பி.யினதும் எத்தகைய கலப்பும், நாட்டின் பல பாகங்களிலும் பரவி வாழும் முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்களின் அரசியற் கட்சிகட்குப் பாதகமானது. வடக்கு - கிழக்கின் தமிழ் மக்களிற் கணிசமானோர் போரின் தீவிரத்தாற் தமது பிரதேசங்களினின்று வெளியேறியமையால், தமிழ் அரசியற் கட்சிகளும் அதனால் வலிமை இழப்பர். வளங்கள் போதாமை வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியற் கட்சிகளை - ஒருவேளை தமிழர் கணிசமான தொகையில் வாழும் கொழும்பு தவிர்ந்தால் - வடக்கு-கிழக்கிற்கு வெளியே வேட்பாளர் களை நிறுத்தாமல் மறிக்கும். எனினும் இதுவரை தமிழ் அரசியற் கட்சிகள் வடக்கு-கிழக்கிற்கு வெளியே போட்டியிடுவதைத் தவிர்த்துள்ளன. இது தமிழ்க் கட்சிகளின் தேசிய வாக்குத் தொகைக்குப் பாதகமானது.

மாவட்ட மொன்றின் முன்னிலைக் கட்சிகட்கு வாய்ப்பான மா.வி.பி. முறை, சிறிய கட்சிகட்குப் பாதகமானது.

வெ.மு.க.வினதும் மா.வி.பி.யினதும் எத்தகைய கலப்பும், நாட்டின் பல பாகங்களிலும் பரவி வாரழும் முஸ்லிம், மலையகத் தமிழத் தேசிய இனங்களின் அரசியற் கட்சி கட்குப் பாதகமானது.

கீழ் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் மட்டுமன்றிக் கணிசமான முஸ்லிம் சனத்தொகை கொண்ட மன்னார், புத்தளம், கண்டி, கொழும்பு மாவட்டங்களிலும் ஆசனங்களை வெல்லும் வாய்ப்பை மா.வி.பி. முறை முஸ்லிம் அரசியற் கட்சிகட்கு ஈந்தது. மலையகத் தமிழ் மக்கள், நுவரெலியா மாவட்டத்தில் மட்டுமன்றி, பதுளை மாவட்டத்திலும் அதினுங் குறைவாய்க் கண்டி மாவட்டத்திலும் தமது பிரதிநிதித்துவத்தை உயர்த்த முடிந்தது. கருதப்படும் சீர்திருத்தங்களின் கீழ், பெரிய கட்சிகள் தமது தே.வி.பி. பட்டியலினின்று எவரையும் நியமித்தாலன்றி, மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகளின் தொகை தற்போதைய ஏழிலிருந்து ஒன்று அல்லது இரண்டாகவும் முஸ்லிம் பிரதிநிதிகளின் தொகை தற்போதையதினின்று மூன்றிலொரு பங்காலும் குறையும். எனவே, பாரிய அரசியற் குறைபாடு களிடையிலும், மலையகத் தமிழ், முஸ்லிம் தேசிய இனங்கட்குப், பேரினவாத அரசியலுக்கெதிரான ஒரே அரசியற் பாதுகாப்பாயிருந்த மலையகத் தமிழ், முஸ்லிம் அரசியற் கட்சிகள் மிக நட்டப்படும்.

தற்போதைய மா.வி.பி. முறைக் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் விழும் வக்குக்களில் 5 சதவீதத்தை மட்டுமே பெற்றாலும் எல்லாமாக ஐந்து ஆசனங்களையேனும் வெல்லக்கூடிய மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கடும் பாதிப்புக்குட்படும். அதன் தற்போதைய வாக்கு வலிமை யின் அடிப்படையில், வெ.மு.க. முறைக் கீழ் அது ஒரு ஆசனத்தையும் வெல்லாது. அதைவிட, வரக்கூடிய மா.வி.பி. ஒதுக்கீட்டின் அடிப்படையில், கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்கள் தவிர்ந்த பிற மாவட்டங்களின் வாக்குக்களில் 10 சதவீதத்தைப் பெற்றாலும் ஒரு ஆசனத்தையேனுங் கைப்பற்ற இயலாது. அனைத்து விகிதாசாரப் பிரதிநிதித்துவ ஆசனங்களையும் தேசியப் பிரதிநிதித்துவத்துக்கு ஒதுக்கின், ஜே.வி.பி. குறிப்பிடத்தக்களவு அதிக ஆசனங்களைக் கைப்பற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004இல் தன் செல்வாக்கின் உச்சத்தில் ஒன்பது ஆசனங்களை வென்ற ஜாதிக ஹெல உருமய (ஜே.எச்.யு.), 2010இல் ஒரு பெரிய கட்சியின் தயவில் மூன்று ஆசனங்களை வென்றது. அது ஜே.வி.பி.யை விடப் பெரும் நட்டத்தை எதிர்நோக்குகிறது. வெ.மு.க., மா.வி.பி. முறைகள் இணைந்த ஒரு திட்டத்தில் அது தனித்து நின்று ஒரு ஆசனத்தைப் பெறுவதுங் கடினம். எனினும், எதிர்காலத் தேர்தல்கள் சீரமைத்த முறைக்கமைய நடப்பதை அது விரும்புகிறது. ஏனெனில், ஜே.வி.பி.யும் மலையகத் தமிழரினதும் முஸ்லிம்களதும் கட்சிகள் பெரிதும் நட்டப்படுகையில், ஜே.எச்.யு. யூ. என்.பியின் தயவில் - அல்லது ஒருவேளை ஸ்ரீ.ல.சு.க. தயவில் - ஓரிரு ஆசனங்களைப் பெறலாமென அது எதிர்பார்க்கலாம்.

மா.வி.பி. ஒதுக்கீட்டில் கணிசமான எந்த அதிகரிப்பும் மாவட்ட மொன்றிற் போதியளவு ஆதரவற்ற ஒரு சிறிய கட்சிக்கு உதவாது. மா.வி.பி. ஒதுக்கீட்டை 80 ஆக உயர்த்தின், ஒரு மாவட்டத்திற் பிரதிநிதித்துவம் பெற மாவட்ட வாக்குக்களிற் 10 சதவீதமளவு தேவை. முன்னர் 5 சதவீதமளவு வாக்குக்களுடனும் பல ஆசனங்களைக் கொண்ட கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் 3 சதவீத வாக்குக்களுடனும் ஒரு ஆசனத்தை உறுதிப்படுத்த வாய்ப்பிருந்தது. தே.வி.பி. ஒதுக்கீட்டை 80 ஆக்கின் தேசிய வாக்குத் தொகையில் 0.6 சதவீதத்துடன் ஒரு ஆசனத்தைப் பெற வாய்ப்பும் 1 சதவீதத்துடன் ஒரு ஆசனத்தைப் பற்றி ஏறத்தாழ நிச்சயமும் இருக்கும்.

முன்வைத்துள்ள சீர்திருத்த ஆலோசனைகள் வலிய, வலிமை குறைந்த, சிறுபான்மைக் கட்சிகளின் பாராளுமன்ற ஆசனத் தொகையை எவ்வாறு பாதிக்குமென உணர்த்துவதே இவ் ஆய்வின் நோக்கம்

முன்வைத்துள்ள சீர்திருத்தங்களின் விளைவுகள்

பின்வரும் ஆய்வு அட்டவணை-2 காட்டும் அனுமானித்த வாக்குப் பங்கீட்டின் மீதானது. அட்டவணையில்- எளிமை கருதி -வெ.மு.க., மா.வி.பி., தே.வி.பி. ஆகிய எதன் வழியிலும் ஒரு ஆசனத்தையேனும் வெல்லக்கூடிய இரண்டு பெருங் கூட்டணிகளும் பலங் குறைந்த மூன்று தேசியக் கட்சிகளும் மூன்று சிறுபான்மைக் கட்சிகளும் மட்டுமே உள்ளடங்குகின்றன. முன்வைத்துள்ள சீர்திருத்த ஆலோசனைகள் வலிய, வலிமை குறைந்த, சிறுபான்மைக் கட்சிகளின் பாராளுமன்ற ஆசனத் தொகையை எவ்வாறு பாதிக்குமென உணர்த்துவதே இவ் ஆய்வின் நோக்கம் என்பதாற், பிற கட்சிகளின் விவரங்கள் ஆய்வுக்குப் பயனற்றவை. வாக்குப் பங்கீடு, கடந்த பொதுத் தேர்தல்களிற் கண்ட பங்கீடுகளின் அடிப்படையில், மேலதிகமாக ஒரு பலங் குறைந்த தேசியக் கட்சியையும் புகுத்தி உத்தேசமாக வகுக்கப்பட்டதன்றி, எவ்வாறும் உண்மையான வாக்குப் பங்கீட்டை உணர்த்தாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை-2: பிரதான கட்சிகள் பெற்ற வாக்குக்கள்

மாவட்டம்	தகுதி பெறுங் கட்சிகளின் வாக்குக்கள் (000)								
	தே1	தே2	தே3	தே4	தே5	சி1	சி2	சி3	மொத்தம்
A	160	150	18	22	7	0	0	0	357
B	195	122	20	16	4	0	0	0	357
C	9	8	9	8	0	41	0	155	230
D	420	210	93	53	91	0	31	0	898
E	28	70	10	26	1	96	0	43	274
F	215	230	15	41	22	0	0	0	523
G	402	406	90	46	33	0	0	0	977
H	85	152	14	21	2	0	0	0	274
I	5	0	2	1	0	0	0	260	268
J	240	222	52	29	12	0	0	0	555
K	306	161	98	30	10	36	0	0	641
L	196	125	33	25	9	0	0	0	388
M	320	343	43	36	11	0	0	0	753
N	116	68	12	11	3	0	0	0	210
O	140	199	11	31	4	0	0	0	385
P	73	65	22	16	1	0	0	0	177
Q	87	70	21	22	3	0	100	0	303
R	96	45	32	10	1	0	0	0	184
S	125	116	23	14	3	4	0	0	285
T	215	228	8	18	11	0	0	0	480
U	17	26	7	4	1	61	0	65	181
V	31	6	2	1	1	9	0	82	132
மொத்தம்	3481	3022	635	481	230	247	131	605	8832
சதவீதம்	39.4	34.2	7.2	5.4	2.6	2.8	1.5	6.9	100

வெ.மு.க. அடிப்படையில் ஒரு கட்சி பெறக்கூடிய வாக்குக்களும் ஆசனங்களும் - இன்னமும் உறுதிப்படாத தேர்தல் தொகுதிகட்காக - உய்த்து-ஊகித்தல் முறையில் மதிப்பிடப்பட்டன. எக் கட்சியினதும் மா.வி.பி. ஆசனத் தொகை, இன்னமும் உறுதிப்படாத மாவட்ட மா.வி.பி. ஆசன ஒதுக்கீட்டின் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கணிக்கப்பட்டது. தே.வி.பி. ஆசனத்தொகை முன் கணித்த தேசிய மொத்த வாக்கு அடிப்படையிற் கணிக்கப்பட்டது. 160 வெ.மு.க. ஆசனங்களும் 80 மா.வி.பி. ஆசனங்களுமாக மொத்தம் 240 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பாராளுமன்றத்தில் மாவட்ட முறையில் கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை அட்டவணை-3 காட்டுகிறது. இவ்வாய்வு, தெரியப்படும் எந்த விகிதாரப் பிரதிநிதித்துவத்தினதும் தாக்கம்

வெ.மு.க. அடிப்படையில் ஒரு கட்சி பெறக்கூடிய வாக்குக்களும் ஆசனங்களும் - இன்னமும் உறுதிப்படாத தேர்தல் தொகுதி கட்காக - உய்த்து - ஊகித்தல் முறையில் மதிப்பிடப் பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிது என்பதால் வெ.மு.க. ஆசன மதிப்பீட்டின் செம்மை இங்கு முக்கியமில்லை.

அட்டவணை-3: கட்சிகள் பெற்ற வெ.மு.க. ஆசனங்கள்

மாவட்டம்	கட்சிகள் பெற்ற ஆசனங்கள்								மொத்தம் வாக்குக்கள்	மொத்த ஆசனங்கள்	
	தே1	தே2	தே3	தே4	தே5	சி1	சி2	சி3		வெ.மு.க	மா.வி.பி
A	5	3							357	8	4
B	5	2							357	7	3
C						1		3	230	4	2
D	10	4							898	14	7
E		2				3		1	274	6	3
F	4	5							523	9	5
G	6	7							977	13	6
H	2	4							274	6	3
I								8	268	8	4
J	5	4							555	9	5
K	4	3	1						641	8	4
L	6	3							388	9	5
M	5	6							753	11	6
N	3	1							210	4	2
O	1	3							385	4	2
P	3	3	1						177	7	4
Q	3	1					2		303	6	3
R	2	1	1						184	4	2
S	5	2							285	7	3
T	3	5							480	8	4
U		1				1		1	181	3	1
V	1							4	132	5	2
மொத்தம்	73	60	3	0	0	5	2	17	8832	160	80

விகிதாசார முறையின் இரு அந்தங்களிலும் 80 ஆசனங்கள் முற்றிலும் மா.வி.பி. முறையில் அல்லது முற்றிலும் தே.வி.பி. முறையில் ஒதுக்கப்படின் கிட்டும் கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை அட்டவணை-4 காட்டுகிறது. கணிப்புக்கள் யாவும் அட்டவணை-2இல் காட்டிய வாக்கு விவர அடிப்படையில் அமைந்தவை. முற்றிலும் மா.வி.பி. முறையிற் கிட்டும் ஆசனங்கள் அட்டவணை-3 இல் காட்டியவாறு கணிக்கப்பட்டவை.

ஒப்பீட்டு வசதிக்காக, அட்டவணை-3இல் மொத்தமாக 160 ஆசனங் கட்குத் தந்துள்ள வெ.மு.க. ஆசனத் தொகைகளை அட்டவணை - 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தமாக 80 ஆசனங்கட்கு (அதாவது அட்டவணை-3 இன் தொகைகளின் அரைவாசியாகத்) திருத்தி இறுதி வரிசையிற் காட்டுகிறது.

இறுதி வரிசை காட்டும் திருத்திய வெ.மு.க. ஆசனத் தொகைகளுடன் ஒப்பிடின், தே.வி.பி. முறையால் முன்னிலைத் தேசியக் கட்சிகள் தே1, தே2 சிறுபான்மைக் கட்சி சி3 என்பன நட்டங் காண்பதையும் தேசியக் கட்சிகள் தே3, தே4, தே5 என்பன நன்மை பெறுவதையும் காணலாம். மா.வி.பி. முறையால் முன்னிலைத் தேசியக் கட்சிகள் தே1, தே2 சற்றுக் குறைய நட்டப்படுவதையும் சிறுபான்மைக் கட்சி சி3 சொற்ப நட்டமடைவதையும் காணலாம். தேசியக் கட்சிகள் தே3, தே4, தே5 என்பன மா.வி.பி. முறையை விட தே.வி.பி. முறையாற் சற்றுக் கூட நன்மை பெறக் காணலாம். தே.வி.பி. முறையாலோ மா.வி.பி. முறையாலோ சிறுபான்மைக் கட்சிகள் சி1, சி2 என்பன சொற்பம் சாதகமான அல்லது புறக்கணிக்கத்தக்க பாதிப்பைக் காணுகின்றன.

தே.வி.பி. முறையாலோ மா.வி.பி. முறையாலோ சிறுபான்மைக் கட்சிகள் சி1, சி2 என்பன சொற்பம் சாதகமான அல்லது புறக் கணிக்கத்தக்க பாதிப்பைக் காணுகின்றன.

அட்டவணை-4: மொத்த மா.வி.பி., தே.வி.பி., 80க்குத் திருத்திய வெ.மு.க.ஆசனங்கள்

மாவட்டம்	பெற்ற ஆசனங்கள்								
	தே1	தே2	தே3	தே4	தே5	சி1	சி2	சி3	மொத்தம்
A	2	2							4
B	2	1							3
C						1		1	2
D	3	2	1		1				7
E		1				1		1	3
F	2	2		1					5
G	2	3	1						6
H	1	2							3
I								4	4
J	2	2	1						5
K	2	1	1						4
L	3	2							5
M	3	3							6
N	1	1							2
O	1	1							2
P	2	1	1						4
Q	1	1					1		3
R	1	1							2
S	2	1							3
T	2	2							4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

U								1	1
V	1							1	2
மா.வி.பி. / 80	33	29	5	1	1	2	1	8	80
மொத்த வாக்கு, %	39.4	34.2	7.2	5.4	2.6	2.8	1.5	6.9	100
வாக்கு X 80%	31.5	27.4	5.8	4.3	2.1	2.2	1.2	5.5	80
தே.வி.பி. / 80	32	28	6	4	2	2	1	5	80
வெ.மு.க. / 80	36.5	30.0	1.5	0.0	0.0	2.5	1.0	8.5	80

(வெ.மு.க./80 = 0.5 x அட்டவணை-2 இல் உள்ள வெ.மு.க. ஆசனங்கள்)

மா.வி.பி. யினின்று தே.வி.பி. நோக்கிய நகர்வு மாவட்டங்களில் வலுவான ஆதரவிற் தங்கியுள்ள கட்சிகட்குக் கேடானது.

எனவே விகிதாசாரப் பிரதிநித்துவ முறையில் தே.வி.பி.யின் பங்கு உயர்வதால் தே3, தே4, தே5 ஆகிய தேசியக் கட்சிகள் குறிப்பிடத்தக்க நன்மை பெறுவதையும் தேசியக் கட்சிகள் தே1, தே2, சிறுபான்மைக் கட்சி சி3 ஆகியன கூட நட்டப்படுமெனவுங் கூறலாம். எனவே இக் கட்சிகள் எந்த விகிதாசாரப் பிரதிநித்துவக் கலப்பிலும் மா.வி.பி. முறையின் பங்கு அதிகமாவதை விரும்புவர். சிறுபான்மைக் கட்சிகள் சி1, சி2 பெரும் அக்கறைப்படும் அளவுக்கு மா.வி.பி.யினதும் தே.வி.பி.யினதும் கலப்பு விகிதம் அவர்கட்கு முக்கியமல்ல. பலங் குறைந்த தேசியக் கட்சிகளான தே3, தே4, தே5 ஆகியன மட்டுமே தே.வி.பி.யின் பங்கின் அதிகரிப்பை உவப்பன.

மா.வி.பி.யினின்று தே.வி.பி. நோக்கிய நகர்வு மாவட்டங்களில் வலுவான ஆதரவிற் தங்கியுள்ள கட்சிகட்குக் கேடானது. பெரும்பாலான தொகுதிகளில் முதலிரண்டு இடங்களுள் வராததால் மாவட்ட அடிப்படையில் வெகு சில ஆசனங்களையே பெறக்கூடிய நாடளாவிய கட்சிகட்குச் சற்று நன்மையானது. எவ்வாறாயினும் தே.வி.பி. மூலம் ஒரு கட்சி முழு நலன் பெற வேண்டின், போட்டியிடக்கூடிய அதிகபட்சத் தொகுதிகளில் அது போட்டியிட்டு வாக்குகளைத் திரட்ட வேண்டும். இத்தகைய பலங் குறைந்த கட்சிகள் மா.வி.பி.யினின்று தே.வி.பி.யை நோக்கி அழுத்தம் வலுப்படுவதை விரும்புவதுடன் தமது தேசிய வாக்குக்களின் தொகையைப் பெருக்க வேண்டிப், போட்டியிட இயன்ற அதிகூடிய தொகுதிகளிற் போட்டியிட முனைவுர். இருப்பினும் அக் கட்சிகளின் வலிய போட்டியாளர்கள் அவற்றின் வேட்பாளர்கள் முன்னிலை வேட்பாளர்களிடையிலான போட்டியைக் குழப்புவோரெனக் காட்டுவர். அதன் பயனாக ஒரு சிறிய கட்சி முற்கண்ட ஆய்வு மதிப்பிட்டதினும் அதிகம் இழக்க வாய்ப்புண்டு. ஏனெனின் அக் கட்சிக்குத் தான் போட்டியிடும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வலிய வேட்பாளரை நிறுத்த இயலாதிருக்கும். அப்படி எவரையேன் நிறுத்தினும், அக் கட்சியை ஆதரிக்கக்கூடியோரும், தாம் வாக்களிக்கும் வேளை, தேர்தலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லும் வாய்ப்புடையோருட் தாம் குறைய வெறுக்கும் ஒருவருக்கு வாக்களிக்கக்கூடும்.

இரட்டை வாக்குச் சீட்டுக்கான வாதம்

இன-மதச் சிறுபான்மையோ தத்துவார்த்தச் சிறுபான்மையோ, பிரதேசப் பெரும்பான்மையற்ற எச் சிறுபான்மைக்கும் மா.வி.பி. முறை பாதகமானதெனவும் முற்றிலுந் தேசிய வாக்கின் மீதான விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மட்டுமே சிறுபான்மை அரசியற் குழுக்களுக்கு நியாயம் வழங்குமென முற்கூறியதினின்று தெரிகிறது. மா.வி.பி. முறையின் பிற குறைபாடுகளைக் கடந்த 35 ஆண்டுகளாகப் பல தேர்தல்களிற் கண்டுள்ளோம். நாடளாவிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை பிரச்சினைகளிற் சிலதை மேலும் பெரிதாக்கலாம். தற்போதைய ஆலோசனைகள் சுட்டுவது போல வெ.மு.க. முறை மீது மாவட்ட அடிப்படையிலோ தேசிய அடிப்படையிலோ விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை மேற்பொருத்தல், வெ.மு.க. முறையின் செயல்முறையின் காரணமாக, அரசியற் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவாளர்கட்குப் பிரதிநிதித்துவத்தை மறுக்கும்.

எனவே, வெ.மு.க. முறையின் நன்மைகட்கு ஊறின்றிச் சிறிய அரசியற் கட்சிகட்கு நியாயங் கிடைக்குமாறு வாக்குக்களின் விகிதாசாரப் பிரதிநிதித்துவக் கூறு அமையவேண்டின், விகிதாசாரப் பிரதிநிதித்துவ வாக்களிப்பில் இரண்டு முக்கிய அம்சங்கள் உறுதிப்பட வேண்டும். ஒன்று, விகிதாசாரப் பிரதிநிதித்துவம் முற்றிலும் தேசிய வாக்கின் அடிப்படையில் அமைய வேண்டும். மற்றது, விகிதாசாரப் பிரதிநிதித்துவ வாக்களிப்பு வெ.மு.க.வினின்றும் சுயாதீனமாயிருக்க வேண்டும்.

சுருங்கக்கூறின், ஒருவரது அரசியல் விருப்பு எந்த வேட்பாளரது அரசியல் அடையாளத்துடனும் உடன்படத் தேவையின்றி, அவர் தனது அரசியல் விருப்புச் சாராது ஒரு வேட்பாளரைத் தனது தொகுதியின் பிரதிநிதியாகத் தெரிய வாக்களிக்க இடமிருக்க வேண்டும். மறுபுறம், தான் விரும்புங் கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்தாதவிடத்தும் அவர் அக் கட்சிக்கு வாக்களிக்க இடமிருக்க வேண்டும். தேர்தற் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரைத் தெரிய ஒரு வாக்கும் தேசிய அளவில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைத் தெரிய இன்னொரு வாக்குமாக அமைந்த இரட்டை வாக்குச் சீட்டு முறைக் கீழ் இது இயலும். உலகநாடுகள் பல கையாளும் இம்முறையில் இவ்விரு வாக்குக்களையும், ஜேர்மனியிலும் நியூசீலாந்திலும் போல, முறையே, தொகுதி வாக்கு, கட்சி வாக்கு எனக் குறிக்கிறேன்.

சுருங்கக்கூறின், ஒருவரது அரசியல் விருப்பு எந்த வேட்பாளரது அரசியல் அடையாளத் துடனும் உடன்படத் தேவையின்றி, அவர் தனது அரசியல் விருப்புச் சாராது ஒரு வேட் பாளரைத் தனது தொகுதியின் பிரதிநிதியாகத் தெரிய வாக்களிக்க இடமிருக்க வேண்டும்.

இரட்டை வாக்குச் சீட்டு முறைக் கீழான உத்தேச வாக்குப் பரம்பல் ஒன்றைக் கொண்டு அட்டவணை-5 அமைந்துள்ளது. அதன் கணிப்பிற், தாம் செறிவாக வாழும் பிரதேசங்கட்கு வெளியே வாழும் 25 சதவீதமான தமிழர் 250,000 வாக்குக்களையும் 60 சதவீதமான முஸ்லிம்களும் மலையகத் தமிழரும், முறையே, 480,000 வாக்குக்களையும் 240,000 வாக்குக்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிப்பரென ஊகித்துள்ளேன். அத்துடன், தம்மை அடையாளப்படுத்தும் சிறுபான்மை இன வேட்பாளர் இல்லாததால், அவர்களில் 50 சதவீதமானோர் தமது கட்சி வாக்குக்களை ஒரு சிறுபான்மை இனக் கட்சிக்கு அளிப்பரெனவும் ஏனையோர் தேசியக் கட்சிகட்கு அளிப்பரெனவும் ஊகித்துள்ளேன். அதன் பயனாக, முன்னர் தேசியக் கட்சி தே1 பெற்ற கட்சி வாக்குக்கள் பெருமளவு குறையுமெனவும் தேசியக் கட்சிகள் தே2, தே3, ஆகியன பெற்றவை சிறிது குறையுமெனவும் தே4, தே5 ஆகியவற்றுக்குப் மதிப்பிராதெனவுங் கொள்கிறேன். இக் கணிப்பில் தே6 எனும் புதிய ஒரு கட்சியையும் புகுத்துகிறேன். ஏனெனில் ஒரு சிறிய கட்சி, பிற தேசியக் கட்சிகளையும் சிறுபான்மை இனக் கட்சிகளையும் பற்றிய விரக்தியால், நாடளாவப் போதிய கட்சி வாக்குக்களைத் திரட்டி ஒரு பாராளுமன்ற ஆசனத்துக்குத் தகுதிபெற வாய்ப்புண்டு. வெ.மு.க. முறையிற் தொகுதி வாக்கை வெல்லும் வாய்ப்புள்ள ஒரு வேட்பாளருக்கு அளித்தோர், தொகுதி வாக்களிப்பிற் போலன்றி, வலுவான அரசியற் காரணங்களாற் தமது கட்சி வாக்கை வேறொரு கட்சிக்கு அளிக்கலாமென்பதால், தேசியக் கட்சிகள் தே1, தே2, தே3 ஆகியன தமது கட்சி வாக்குக்களிற் சிறு பகுதியைத் தே4, தே5, தே6 ஆகியவற்றுக்கு இழக்கலாம். தொகுதி வாக்களிப்பு அட்டவணை-2 காட்டுமாறே அமையக், கட்சி வாக்குக்கள் எவ்வாறு அமையுமென்ற அனுமானத்தையும் அதன் விளைவான கட்சி ஆசனப் பங்கீட்டையும் அட்டவணை-5 காட்டுகிறது.

அட்டவணை-5: இரட்டை வாக்குச் சீட்டு முறையில் அனுமானித்த கட்சி வாக்குப் பங்கீடும் தே.வி.பி. ஆசனங்களும்

கட்சி	தே1	தே2	தே3	தே4	தே5	சி1	சி2	சி3	தே6	மொத்தம்
ஒற்றை வாக்குச் சீட்டு வாக்குக்கள், %	*39.4*	*34.2*	*7.2*	*5.4*	*2.6*	*2.8*	*1.5*	*6.9*	*0.0*	*100*
வென்ற ஆசனங்கள்	*32*	*28*	*6*	*4*	*2*	*2*	*1*	*5*	*0*	*80*
இரட்டை வாக்குச் சீட்டு வாக்குக்கள், %	*34.4*	*32.6*	*6.7*	*6.0*	*2.8*	*4.5*	*3.2*	*8.0*	*0.8*	*100*
வென்ற ஆசனங்கள்	*28*	*26*	*5*	*5*	*2*	*4*	*3*	*6*	*1*	*80*

வெவ்வேறு தேர்வு முறைகட்கீழ் ஒவ்வொரு கட்சியும் பெறக்கூடிய ஆசனத் தொகைகளை அட்டவணை-6 ஒப்பிடுகிறது. இரட்டை வாக்கு முறையால் இனச் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் முன்னேறினும், அது சனத்தொகை விகிதாசாரத்திற்கு உரியதினுங் குறைவாகவே இருக்கும். உதாரணமாக சனத்தொகையில் 9 சதவீதமானோரான முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் 7இலிருந்து 9ஆக உயர்ந்தாலும் அது பாராளுமன்ற ஆசனத்தொகையான 240இன் 4 சதவீதத்திற்குச் சற்றுக் குறைவாகும்.

இரட்டை வாக்கு முறையால் இனச் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் முன்னேறினும், அது சனத் தொகை விகிதா சாரத்திற்கு உரியதினுங் குறைவாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகையில் 4.5 சதவீதமானோரான மலையகத் தமிழரின் பிரதிநிதித்துவம் 3இலிருந்து 5ஆக உயர்ந்தாலும் அது பாராளுமன்ற ஆசனத் தொகையான 240இன் 2 சதவீதத்திற்குச் சற்று மேலானது. சனத்தொகையில் 11 சதவீதத் திற்கும் அதிகமானோரான வடக்கு-கிழக்கின் தமிழர், சிறிது இழந்து, 9.5 சதவீத அளவான ஆசனங்களைப் பெறுவர்.

அட்டவணை-6: வெவ்வேறு முறைகட் கீழ்க் கட்சிகள் பெறும் ஆசனங்கள்

கட்சி	தே1	தே2	தே3	தே4	தே5	சி1	சி2	சி3	தே6	மொத்தம்
வெ.மு.க மட்டும் (= 1.5 x அட்டவணை - 1 பெறுமானம்)	109	90	05	00	00	08	03	25	00	240
வெ.மு.க. + மா.வி.பி. (ஒற்றை வாக்குச் சீட்டு)	106	89	08	01	01	07	03	25	00	240
வெ.மு.க. + தே.வி.பி. (ஒற்றை வாக்குச் சீட்டு)	105	88	09	04	02	07	03	22	00	240
வெ.மு.க. + தே.வி.பி. (இரட்டை வாக்குச் சீட்டு)	101	86	08	05	02	09	05	23	01	240

ஒவ்வொரு சிறுபான்மை இனத்தவரும் தத்தம் இன அடையாளமுள்ள கட்சிக்கு மட்டுமே வாக்களிப்பினும், இக் கோலத்திற் பெரிய மாற்றமிராது. ஏனெனின் பாராளுமன்ற ஆசனங்களில் ஏகப்பெரும்பாலானவை வெ.மு.க. முறையிற் தெரிந்தவையாம். ஒரு தேசியக் கட்சியோ இன்னொன்றோ சிறுபான்மை இனப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருசிலரைத் தமது கட்சிப் பட்டியல் மூலம் நியமித்தாலும் அது வெ.மு.க. முறையின் விளைவான இழப்பை ஈடுசெய்யாது.

இனத்துவ நோக்கு, தோற்றத்திற், தேச ஒற்றுமைக்கு எவ்வளவு விரும்பத்தகாததெனினும்- இனத்துவ ஆதிக்கத்துக்குட்பட்ட அரசியற் சூழலில், கொள்கை வகுத்தலிற் சிறுபான்மையினரின் பங்கைக் குறைக்கும் நோக்குடைய தேர்தற் சீர்திருத்தங்களிடையே -அது தவிர்க்கவியலாதது. இரட்டை வாக்கு முறை, போதாதாயினும், பெருமளவும் வெ.மு.க. முறையிலமைந்த தெரிவின் பயனான பிரதிநிதித்துவ இழப்பைச் சற்று ஈடு செய்யும் நியாயமானதொரு முறையாகும்.

இரட்டை வாக்கு முறை, போதாதாயினும், பெருமளவும் வெ.மு.க. முறையிலமைந்த தெரிவின் பயனான பிரதிநிதித்துவ இழப்பைச் சற்று ஈடு செய்யும் நியாயமானதொரு முறையாகும்.

தொகுதிக்கும் கட்சிக்கும் வாக்களித்தலைப் பிரிக்காமல் எவ்விதமான மா.வி.பி., தே.வி.பி. முறைகளின் கலவையுமோ, வெ.மு.க. பிரதிநிதித்து வத்துக்குச் சமமாக விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவதோ சிறிய அரசியற் கட்சிகளின், குறிப்பாகத் தேசிய அரசியற் கட்சிகளின், மறுப்பாகும். இரட்டை வாக்குச்சீட்டு முறை, மட்டுமட்டான ஆதரவுள்ள சிறிய அரசியற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை வாக்குச்சீட்டு அடிப்படை யிலான எவ் விகிதாசாரப் பிரதிநிதித்து வத்தையும்விட இரட்டை வாக்குச்சீட்டு முறை சனநாயக மானது. சமூக விழிப்புணர்வு வளர்ந்து இவ்வாக்களிப்பு முறை எவ்வாறு செயற்படுகிறது என்பதை வாக்காளர்கள் மதித்துணரும் போது, அதனுடைய அனுகூலங்கள் முன்னேறும்.

கட்சிகள் நாடளாவி வாக்குக்களைத் திரட்டுவதை இயலுமாக்கி, அவற்றின் பிரதிநிதித்துவத்துக்கு வாய்ப்பளிக்கின்றமை கவனிக்கவுகந்தது.

ஒற்றை வாக்குச்சீட்டு அடிப்படையிலான எவ் விகிதாசாரப் பிரதிநிதித்து வத்தையும்விட இரட்டை வாக்குச்சீட்டு முறை சனநாயகமானது. சமூக விழிப்புணர்வு வளர்ந்து இவ்வாக்களிப்பு முறை எவ்வாறு செயற்படுகிறது என்பதை வாக்காளர்கள் மதித்துணரும் போது, அதனுடைய அனுகூலங்கள் முன்னேறும். அதைவிடத் தேர்தற் செயல்முறைக்கு அது வேறும் நன்மைகளையும் வழங்குகிறது.

1. ஒரு தொகுதியில் தான் உவக்காத ஒரு வேட்பாளரை நிராகரிக்கும் அதேவேளை அவருடைய கட்சிக்குத் தன் ஆதரவைத் தெரிவிக்கவும் அதற்கெதிரிடையாகத் தான் உவக்காத ஒரு கட்சியிற் போட்டியிடும் தன் விருப்புக்குரிய வேட்பாளரை ஆதரிக்கும் அதேவேளை அவருடைய கட்சியை மறுக்கவும் அது அனுமதிக்கிறது. இவ்வாறு, தனிப்பட மக்களிடையே செல்வாக்கற்ற ஒரு வேட்பாளரால் ஏற்பட்ட இழப்பை ஒரு கட்சி ஈடுசெய்யவும், மறுபுறம், ஒரு நல்ல வேட்பாளர், மக்களிடையே செல்வாக்கற்ற ஒரு கட்சியிற் போட்டியிட்டும், வெல்ல வாய்ப்புப் பெறவும் இயலுகிறது.

2. தமது ஆதரவுத் தளம் குறிப்பிடத்தக்கதாயினும் வலுவற்ற தொகுதி களிலும் சிறிய கட்சிகள் வாக்குக்களைத் திரட்ட அது அனுமதிக்கிறது. அத்துடன், வெறுமே, தனது தேசிய வாக்குத் தொகையைப் பெருக்கு தற்காக, ஒரு சிறிய கட்சி, பல தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்துங் கட்டாயத்தைத் தவிர்ப்பதால், இரட்டை வாக்குச்சீட்டு முறை, அக்கட்சியின் வளங்களதும் பொது வளங்களதும் விரயத்தை மட்டுமன்றி, அக்கட்சியின் அற்ப நன்மைக்காக அவ்வாறு வேட்பாளர் களை நிறுத்தித் தேர்தல் முடிவுகளை விகாரப்படுத்துவதையும் தவிர்க்கிறது.

பிரச்சினைகளும் அரசியல் நன்மைகளும்

இரட்டை வாக்குச்சீட்டு முறையிற் பிரச்சினைகள் உள்ளன. தொகுதி வாக்குச் சீட்டு குழப்பமற்றதாயினும், கட்சி வாக்குச்சீட்டு அளவுக்கதிகமான கட்சிகளின் பெயர்களை உள்ளடக்க வேண்டுவதால், அவ்வாக்குச்சீட்டுக் கையாளக் கடினமாயமையும்.

எனினும், கட்சி வாக்குச்சீட்டிற் சேர்க்கக்கூடிய கட்சிகளை (அ) ஏலவே பாராளுமன்றத்திலுள்ள கட்சிகட்கும் (ஆ) தேசிய மட்டத்திற் போதிய வாக்குக்களைத் திரட்ட இயலாத கட்சிகளின் பெயர்கள் கட்சி வாக்குச் சீட்டில் வராதவாறு, மொத்தத் தொகுதிகளிற் காற்பங்கிற்குங் குறையாத தொகுதிகளிற் போட்டியிடுங் கட்சிகட்கும் மட்டுப்படுத்துவதால் வாக்குச் சீட்டிலுள்ள கட்சிகளின் தொகையைக் குறைக்கலாம். மேலுங் தெளிவு கருதி, வாக்குச்சீட்டில் வரும் கட்சிகளின் பெயர்களை முந்திய தேர்தலிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளின் பாராளுமன்ற வலிமையின் அடிப்படையிலும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமற்ற கட்சிகளின் பெயர்களை அகர வரிசையிலும் பட்டியலிடலாம்.

இதுகாறும் சிறுபான்மை இனக் கட்சிகளின் பிரதிநிதித்துவ அதிகரிப்பின் துர்ப்பாக்கியமான ஒரு அம்சமேதெனின், அக் கட்சிகளின் அக்கறைகட்கும் அவை சார்ந்த சமூகங்களின் அபிலாட்சைகட்கும் உறவின்மையால் அக் கட்சிகளின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் சிறுபான்மை இனத்தோருக்கு அரசியல் நன்மையையோ சமூக நன்மையையோ கொண்டுவாராமையாகும். பாராளுமன்ற உறுப்புரிமை - குறிப்பாக அரசாங்கமமைக்க வேண்டுங் கட்சிக்குப் பெரும்பான்மை போதாமலோ கிட்டிய பெரும்பான்மை வலுக்கேடாகவோ அமையும் போது - அமைச்சுப் பதவிகட்குப் பேரம் பேசுவது உட்படத் தனிப்பட்ட நலனுக்கும் அரசியற் சலுகைகட்குமே துர்ப்பாவனைக்கு உட்பட்டுள்ளது. வாக்காளர்கள் தமது தலைவர்களைப் பகிரங்கமாகக் கேள்வி கேட்பதாலேயே இப் பிரச்சினையைத் தீர்க்கலாம்.

சட்டவாக்கத்திலும் தேசியக் கொள்கை அலுவல்களிலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் தொகுதி அடிப்படையிலான முறைகளை விடச் சனநாயகமானது என்பதுடன் பாராளுமன்றத்திற் பரந்துபட்ட அரசியல் நோக்குக்கட்கு இடமளிக்கும். எவ்வாறாயினும், வெ.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூகத்தின் கீழ் மட்டப் பிரச்சினைகளையும் தமது தொகுதி மக்களின் தேவைகளையும் கவனிப்பதை உறுதிசெய்யும் வாய்ப்புடையது. அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் நடைமுறைக்கு வரின், மத்திய அரசாங்கத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை மட்டும் பாவித்து மாகாண சபைகளில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தினதும் வெ.மு.க. முறையினதும் ஒரு கலவையைப் பாவிக்கலாம். ஊராட்சிகளில் வெ.மு.க. முறையை மட்டும் பாவிக்கலாம்.

அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் நடைமுறைக்கு வரின், மத்திய அரசாங்கத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்து வத்தை மட்டும் பாவித்து மாகாண சபைகளில் விகிதாசாரப் பிரதிநிதித்து வத்தினதும் வெ.மு.க. முறையினதும் ஒரு கலவையைப் பாவிக்கலாம்.

இரட்டை வாக்குச்சீட்டு முறையிற் சாத்தியமான இன்னுமொரு பயனள்ள விளைவு ஏதெனின், சிறுபான்மை இனக் கட்சிகள், தமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தத், தமது பிரதேசங்கட்கு வெளியே வாழும் வாக்காளர்களைக் கவரவேண்டும். அப்படியாயின், அவை வழமையினுங் குறைவான குறுகிய நோக்குடன் செயற்படவும் தமது சமூகத்தினர் ஒரு பல்தேசிய அரசியற் சமூகத்திற்குரியோர் என்ற உண்மையை ஏற்கவுங் கட்டாயப்படுவர்.

எவ்வாறாயினும் எந்தத் தேர்தல் முறையும் சமூக நீதிக்கு உத்தரவாத மல்ல. விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை இங்கு வலியுறுத்தும் நோக்கம், சிறுபான்மைப் பிரதிநிதித்துவத்தை நசுக்கும் உணர்வுபூர்வமான முயற்சி கட்கு ஆளாகும் மன்றுகளில் அரசியற் சிறுபான்மைக் கருத்துடைய சனப் பிரிவினருக்கு ஒரு குரலை உறுதிப்படுத்துவது மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை ஆவணங்கள்

- HRW Abeynaike & HP Ameratunga, The Ceylon Daily News Parliament of Ceylon 1970, The Associated Newspapers of Ceylon Limited, Colombo, 1970
- Category: Former electoral districts of Sri Lanka, https://en.wikipedia.org/wiki/Category:Former_electoral_districts_of_Sri_Lanka
- Elections in Bolivia, https://en.wikipedia.org/wiki/Elections_in_Bolivia#Electoral_system
- Electoral system of Germany, https://en.wikipedia.org/wiki/Electoral_system_of_Germany
- Elections in Hungary, https://en.wikipedia.org/wiki/Elections_in_Hungary#Changes_in_the_electoral_system_from_2012_onwards
- Elections in Japan, https://en.wikipedia.org/wiki/Elections_in_Japan
- Electoral system of New Zealand, https://en.wikipedia.org/wiki/Electoral_system_of_New_Zealand

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

ஈழத்தில் இறப்புத் தொடர்பான கல்வெட்டு மரபு

க. இரகுபரன்

ஒருவர் மரணம் அடைந்தால், அவரது மரணத்தின் முப்பத்தோராம் நாள் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியையின்போது, அவரது குடும்பத்தவர்கள், நினைவு மலர் ஒன்றினை வெளியிடுகின்ற மரபு ஒன்று இலங்கையில் - குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிலவுகின்றது. அந்தியேட்டிக் கிரியையின் ஓர் அங்கமாக அதனை அக்கிரியையிற் கலந்து கொண்டவர்கள் கேட்கும்படியாக ஒருவர் உரத்து வாசிப்பார். அந்த நடைமுறை 'கல்வெட்டுப் படித்தல்' என்று சுட்டப்பெறும். முன்னைக் காலங்களில் உயர்வர்க்க குடும்பங்களைச் சார்ந்த, நிறைவாழ்வு வாழ்ந்த, ஒருவர் இறக்கும்போதே இத்தகைய நினைவுமலர் வெளியிடப்படுவதுண்டு. அதில், இறந்தவரின் புகைப்படம், அவர் இறந்த திகதி, அவருடைய வாழ்க்கை வரலாறு, இறந்தவரின் உற்றார் உறவினர்கள் புலம்புவதான பாவனைப் பாடல்கள், இறந்தவரின் வம்சாவழியை விளக்கும் மரவரிப்படம் முதலானவை அமையப்பெற்றிருத்தல் வழமை. இதில் உள்ள திதிநிருணயம் அடங்கலாகப் பெரும்பாலான விடயங்கள் செய்யுள் வடிவில் அமைந்திருக்கும் (இவற்றைச் 'சரமகவி' என்று சுட்டும் வழக்கும் உண்டு).

எனவே, எவரேனும் காலமானவிடத்து அவரது குடும்பத்தவர், செய்யுள் இயற்றவல்ல தமிழறிவுள்ள ஒருவரைத் தேடிச்சென்று, அவரைக் கொண்டு திதிநிருணயம் முதலாகப் புலம்பல்கள் ஈறாக அனைத்தையும் எழுதுவித்து, அச்சிட்டு, ஒரு சிறு நூலாக வெளியிடுவர். இவ்வாறான நடைமுறை சமுதாயத்தில் அச்சு வசதி பரவலானதன் பின்னரே ஏற்பட்டிருத்தல் சாத்தியம். இந்த வழக்கம் தமிழகத்தில் இருப்பதாகப் புலனாகவில்லை.

இறந்தவர் பற்றிய உள்ளதும் இல்லாததுமான பெருமைகளைப் பாடுவித்தும் குலமரபு கிளத்தியும் நினைவுமலர் வெளியிடுகின்ற வழக்கம் பிற்காலத்தில் பெரிய குடும்பங்களில் மாத்திரமன்றி, சாதாரண குடும்பங்களிலும் இடம்பெறத் தொடங்கிவிட்டது. ஜனநாயக மயப்பாடு, இலவசக் கல்வி, அச்சு வசதியின் விரிவு, நவீன தொழில்நுட்பங்களின் சாத்தியப்பாடு என்று இன்னோரன்னவற்றால் உண்டான சமூக மாற்றம் இதற்கான காரணம் எனலாம். எல்லோர்க்கும் எல்லாம் சாத்தியம் என்று ஆகிவிட்ட நிலையில் கல்வெட்டு எனப்படும் இந்த நினைவு மலர்கள் முன்னைக் காலத்திற் பெற்றிருந்த மதிப்பை இழக்கலாயின. இல்லாததெல்லாம் புனைந்துரைக்கும் தற்புகழ்ச்சியாய் அமைவதனால் கேலிக்குரியவையும் ஆயின. இறந்தவர்

முன்னைக் காலங்களில் உயர்வர்க்க குடும்பங்களைச் சார்ந்த, நிறைவாழ்வு வாழ்ந்த, ஒருவர் இறக்கும்போதே இத்தகைய நினைவுமலர் வெளியிடப் படுவதுண்டு.

இதில் உள்ள திதிநிருணயம் அடங்கலாகப் பெரும்பாலான விடயங்கள் செய்யுள் வடிவில் அமைந்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்துக்கன்றி, ஏனையவர்க்கு எந்தத் தேவையும் இல்லாதன என்ற வகையில் பேணப்படாதனவும் ஆயின. இந்நிலையில் இறந்தவர் தொடர்பானவற்றை அச்சிட்டு வெளியிடுவதை விடுத்து பொதுமக்கள் தேவைக்குரிய அறிவுசார்ந்த ஏதேனும் விடயத்தை நூலாக - நினைவு மலராக வெளியிடும் நல்ல மரபு ஒன்றும் கிளைவிடலாயிற்று. எனினும் அவற்றிற்கூட இறந்தவரின் வாழ்க்கைக் குறிப்பு, அவரது இறப்பின் திதிநிருணயம் என்பவற்றையேனும் சேர்த்துக் கொள்வர். குறைந்தபட்சம் திதிநிருணயத்தை யாவது சேர்க்காது விடுவதில்லை. முன்பு செய்யுள் வடிவில் எழுதப்பட்ட வற்றை, வசன வடிவில் எழுதுவதும் பிற்காலத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாகும். எவ்வாறாயினும் திதிநிருணயத்தைச் செய்யுள் வடிவிலே - அதிலும் வெண்பா வடிவிலே எழுதுகின்ற போக்கே நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவீதம் காணப்படுகின்றது. அத்தகைய வெண்பா திதிவெண்பா என்றே சுட்டப்பெறும். எதில் என்ன மாற்றம் நிகழ்ந்தாலும் இத்தகைய நினைவு வெளியீடுகளைக் கல்வெட்டு என்று சுட்டுகிற வழக்கு மாத்திரம் பெரிதும் அழியாது நிலைபெற்றுள்ளது.

கல்வெட்டு என்று சொல்லப்படுவது அடிப்படையில் கல்லிலே வெட்டப்படுகின்ற வரலாற்றுக் குறிப்புகளைச் சுட்டுதற்கே உரியதாகும். வடமொழியிலே வழங்கும் சாசனம் என்ற சொல்லுக்குப் பதிலாக தமிழிலே கல்வெட்டு என்ற சொல்லே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. உண்மையில் சிலாசாசனம் என்ற சொல்லுக்குரிய நேரடி மொழிபெயர்ப்பாகவே அதனைக் கொள்ள வேண்டும். தாமிரத்தகடுகளில் பதிக்கப்படுகின்ற வரலாற்றுக் குறிப்புகள் தாமிர சாசனம் எனச் சுட்டப்பெறுவன. அவற்றைத் தமிழிலே செப்புப் பட்டயம் என்பர். ஆயினும், கல்லிலாயினும் உலோகத் தகட்டிலாயினும் பதியப்படும் வரலாற்றுக் குறிப்புகளைக் கல்வெட்டு என்று சுட்டும் வழக்கு தமிழ்ச் சூழலிற் பொதுவாக உண்டு. உலக அளவில் அதிக தொகையான சாசனங்கள் தமிழ்ச் சூழலிலேயே கிடைக்கப் பெற்றன என்ற உண்மையும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

ஆயினும். கல்லிலாயினும் உலோகத் தகட்டிலாயினும் பதியப்படும் வரலாற்றுக் குறிப்புகளைக் கல்வெட்டு என்று சுட்டும் வழக்கு தமிழ்ச் சூழலிற் பொதுவாக உண்டு. உலக அளவில் அதிக தொகையான சாசனங்கள் தமிழ்ச் சூழலிலேயே கிடைக்கப் பெற்றன என்ற உண்மையும் இங்கு மனங் கொள்ளத்தக்கது.

முற்காலத்தில் மன்னர்கள் நிகழ்த்திய சாதனைகள், மேற்கொண்ட பணிகள், அவர்களது பிரகடனங்கள் முதலானவற்றை சாசனங்களிற் பதிந்து வைத்தார்கள். அவ்வாறான சாசனங்களில் அம்மன்னர்களின் குலபாரம்பரியம், முன்னைய சாதனைகள் என்பவற்றைப் புகழ்ந்துரைக்கின்ற பகுதியும் செய்யுள் வடிவிலே இடம்பெறுவதுண்டு. அத்தகையவற்றை மெய்க்கீர்த்தி என்று சுட்டுவர். சில மெய்க்கீர்த்திகள் நூற்றுக்கணக்கான அடிகளிலும் அமையப்பெற்றுள்ளன. மெய்க்கீர்த்தி மரபானது நூல்களிலே, அதாவது ஏட்டு வடிவிலே காணப்பெறாது சாசனங்களிலே மாத்திரம் காணப்பெறுவது. எனினும் இலக்கியங்களின் கட்டமைப்புப் பற்றிப் பேசும் இலக்கண நூல்களான பாட்டியல் நூல்களிற் சில, மெய்க்கீர்த்தி பற்றியும் இலக்கணம் கூற முற்படுகின்றமை கருதத்தக்கது. எனினும் சாசன வழக்காறிலுள்ள மெய்க்கீர்த்திகளை இலக்கியமாகக் கருதிக் கொள்ளும் மரபு தமிழ்ச் சூழலில் இல்லை. அம் மெய்க்கீர்த்திகளை இயற்றியவருடைய பெயரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியவருவதில்லை. ஆனால், சாசனங்களிற் காணப்பெறும் மெய்க்கீர்த்திகளை அடிப்படையாகக் கொண்டு மன்னர்கள் பிரதானிகள் முதலானோரின் பெருமைகளை, வரலாற்றைக் கூறுவனவாய் கல்வெட்டு என்று குறிப்பிடப்படுகின்ற நூல்கள் சில, இலங்கையில் தோன்றியுள்ளன.

இலங்கையில் நிலைபெற்ற அத்தகு வழக்கத்துக்குச் சான்றாக ஆமைவன கோணேசர் கல்வெட்டு, வையாபாடல், நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு, மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்னும் நூல்கள்.

''இலங்கையிலே தமிழ் மொழியில் எழுதப்பெற்றுள்ள வரலாற்றுச் சார்புடைய நூல்களிலே கோணேசர் கல்வெட்டு தனித்துவமானது. பல ஆதாரபூர்வமான வரலாற்றுச் செய்திகள் அதிலே அடங்கியுள்ளன. திருகோணமலைப் பிராந்தியத்திலுள்ள சாசன வழக்காறுகளையும் அவற்றின் பொருள் மரபினையும் அடிப்படையாகக் கொண்டு உருவாகிய ஒரு தொடர்ச்சியான இலக்கிய மரபினைப் பிரதிபலிக்கின்ற நூலாகவே கோணேசர் கல்வெட்டு அமைந்துள்ளது .... சாசன வாசகங்களை அடிப்படையாகக் கொண்டெழுந்த இலக்கியங்களையும் கல்வெட்டு எனக் குறிப்பிடும் வழக்கம் இலங்கையில் ஏற்பட்டிருந்தமைக்கு கோணேசர் கல்வெட்டு என்னும் நூல் ஓர் எடுத்துக்காட்டாகும். அதன் முன்னைய பதிப்பொன்றிலே ''கோணேசர் கல்வெட்டென வழங்கும் கோணேசர் சாசனம்'' என்று நூலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. நூலின் சிறப்புப் பாயிரத்தை அடிப்படையாகக் கொண்டு, குளக்கோட்டன் சொல்லிய சொற்படி சொல் என்பதனால் முன்னே குளக்கோட்டு மன்னன் கூறியபடியே கூறுவீராக என்று ஒருவர் கேட்க அதன்படி கல்வெட்டுப் பாட்டெனப் பாடினான் கவிராஜ வரோதயன் என்பது இப்பாயிரத்தாற் புலப்படுகின்றது எனப் பதிப்பாசிரியர் கூறியுள்ளமை சாலவும் பொருத்தமானது'' (பத்மநாதன், சி., 2014: 14,15).

கோணேசர் கல்வெட்டு திருகோணமலைப் பிராந்தியத்தில் ஆட்சி புரிந்த மன்னர்களதும் அங்கு வாழ்ந்த மக்களதும் வரலாற்றைக் கூறுவதுபோல, வடக்கில் அடங்காப்பற்று வன்னியில் நிலவிய ஆட்சியினதும் அங்கு வாழ்ந்த மக்களினதும் வரலாற்றைக் கூறுவதாக அமைந்தது வையாபாடல். ''வையாபாடல் என்ற நூலானது சில சமயங்களில் ''கல்வெட்டும் செய்யேடும்'' என்றும் சொல்லப்படும்'' (பத்மநாதன், சி., 2014: 14,15).

கிழக்கிலங்கையில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் நிலவிய ஏழு நிர்வாகப் பிரிவுகளுள் ஒன்றான நாடுகாட்டுப்பற்றின் வரலாறு கூறுவதாய் அமைவது நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு. பாரம்பரியம் - வம்சம் என்ற பொருள் தருகின்றதான பரவணி என்ற கிராமிய வழக்குச் சொல் கையாளப் பட்டிருத்தல் இங்கு அவதானிக்கத்தக்கது. நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டை மட்டக்களப்பில் நிலவும் வட்டார உணர்ச்சி காரணமாகத் தோன்றிய நூல் என அறிஞர் கருதுவர் (பத்மநாதன், சி., 2014: 106).

மட்டக்களப்புத் தேசத்தின் வரலாற்றை வகுத்துக் கூறுவதும் ''மட்டக்களப்பு மான்மியம்'' என வழங்கப்பெறுவதுமான ''மட்டக்களப்புப்

சாசனங்களிற் காணப்பெறும் மெய்க்கீர்த்திகளை அடிப்படையாகக் கொண்டு மன்னர்கள் பிரதானிகள் முதலானோரின் பெருமைகளை, வரலாற்றைக் கூறுவனவாய் கல்வெட்டு என்று குறிப்பிடப் படுகின்ற நூல்கள் சில, இலங்கையில் தோன்றியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வ சரித்திரம்'' என்னும் நூலின் செய்யுட் பகுதிகள் பல, கல்வெட்டு என்றே குறிப்பிடப் படுகின்றன.

''மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் வசன நடையிலும் செய்யுள் நடையிலு முள்ள பகுதிகளைக் கொண்ட நூலாகும். நூலின் முதலாவது பகுதி வசன நடையில் அமைந்துள்ளது. இதில் இடையிடையே செய்யுள்கள் காணப் படுகின்றன. அவை எங்கிருந்து பெறப்பட்டன என்பதை அறியுமாறில்லை. வசனநடைப் பகுதி மட்டக்களப்பின் பூர்விக வரலாற்று அம்சங்களைக் கூறும் பகுதிபோல அமைந்திருக்கின்றது. செய்யுள் நடையிலமைந்த இரண்டாவது பகுதி கல்வெட்டு என்னும் வகைக்குரிய பாடல்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. குளிக்கல்வெட்டு முறை, பெரிய கல்வெட்டு, பங்குகூறுங் கல்வெட்டு, தாதன் கல்வெட்டு, போடி கல்வெட்டு, குலவிருதுகள், சாதித் தெய்வக் கல்வெட்டு, நன்மைக்கும் தீமைக்கும் கும்பவரிசை, ஆசாரிகள் கல்வெட்டு, முற்குகர் வன்னிமை, பங்கு தடுக்கும் முறை என்பன யாவும் செய்யுள் நடைப் பகுதிகளாகும்'' (பத்மநாதன், சி., 2014: 90,91).

இங்கு குறிப்பிடப்பெற்ற நூல்கள் யாவும் பிராந்தியங்களின் வரலாறு பற்றிப் பேசுவன. ஆனால், இக்கட்டுரையின் தொடக்கத்தில் நாம் நோக்கிய ''கல்வெட்டு''க்கள் தனிநபர் பற்றியும் அவர்களை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் குடும்பப் பாரம்பரியம் பற்றியும் பேசுவன. எனினும் வரலாற்றுப் பாரம்பரியப் பெருமைகளைப் பேசுவன - பதிவு செய்வன என்ற அடிப்படையில் இருவகைக் கல்வெட்டு நூல்களுக்கிடையிலும் ஒற்றுமை உண்டு. இரண்டும் சாசன மரபின் அடியாகத் தோற்றம் பெற்றனவே. தனி நபர் ஒருவரின் மரணத்தை ஒட்டி வெளியிடப் பெறுகின்ற கல்வெட்டு நூல்களும் அவ்வாறானவையே என்று கொள்வதற்கான தெளிவான சான்று அண்மைக்காலக் களஆய்வு ஒன்றின்மூலம் கிடைத்துள்ளது.

2012ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10, 11, 12ஆம் திகதிகளில் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் தலையிலான இந்திய, இலங்கை ஆய்வாளர்களைக் கொண்ட குழுவொன்று கள ஆய்வில் ஈடுபட்டது. அந்த ஆய்வின்மூலம் கிறிஸ்து சகாப்தத்தை ஒட்டியனவும் இலங்கை வரலாற்றில் இதுவரை அறியப்படாதனவுமான தகவல்களைக் கொண்ட சில கல்வெட்டுக்கள் புதிதாகக் கண்டறியப்பட்டன. அதேவேளை, நவீன காலத்துக்கு உரியனவான சில கல்வெட்டுக்களும் கண்டறியப்பட்டன. நவீன காலத்துக்கு உரியன வாயினும் ஈழத்தில் நிலைபெற்ற தனிநபர் மரணத்தை ஒட்டி வெளியிடப் பெறுகின்ற கல்வெட்டுநூல் பாரம்பரியத்துக்கான மூலாதாரத்தைக் கண்டுகொள்வதற்கு உதவுவனவாய் அவை அமையப்பெறுகின்றன. அவை யாவும் இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தம் நிறைவுறுவதற்கு முன் வெட்டப்பட்டவையாகும். வேறுவகையில் கூறுவதானால் அச்சுவசதி, சாதாரண பொதுமக்கள் மத்தியில் பரவலடைவதற்கு முந்திய காலத்துக்கு உரியனவாகும். அவையே இக்கட்டுரையில் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

அதேவேளை, நவீன காலத்துக்கு உரியனவான சில கல்வெட்டுக் களும் கண்டறியப் பட்டன. நவீன காலத்துக்கு உரியன வாயினும் ஈழத்தில் நிலைபெற்ற தனிநபர் மரணத்தை ஒட்டி வெளியிடப் பெறுகின்ற கல்வெட்டுநூல் பாரம்பரியத் துக்கான மூலாதாரத்தைக் கண்டு கொள்வதற்கு உதவுவனவாய் அவை அமையப் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்டத்தில், களுவாஞ்சிக்குடியிலிருந்து பழுகாமம் நோக்கிச் செல்லும் வீதியின் இரு பக்கத்திலும் அமைந்த பெரும் வயல் வெளியில் வீதியோரமாகவே அவை காணப்பட்டன. வீதியில் செல்லும் பயணிகளின் பார்வையிற் படும்படியாக அவை நிறுத்திவைக்கப்பட்டன போலும். கணிசமான அளவு பெரிய கற்பலகைகளில் அச்சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன. வயற்பகுதியில் வீதியோரமாக நாட்டப்பட்ட அச் சாசனங்கள் அல்லது நடுகற்கள் வீதி விஸ்தரிப்பின்போதோ அன்றேல் வயல் உழவு வேலைகளின்போதோ நிலை தளர்ந்து சரிந்து பாட்டில் விழுந்துகிடந்தன.

மேற்படி கல்வெட்டுக்களுள் காலத்தால் முந்தியதாகக் கொள்ளத்தக்கது சோ.ப.கணபதிப்பிள்ளை என்பவரது இறப்புத் தொடர்பானது. அவர் 1919ஆம் ஆண்டு காலமடைந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்து சகாப்தத்தின்படியாக 1919ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்ட அதேவேளை, தமிழ் ஆண்டும் காலயுக்தி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்து சகாப்த ஆண்டைக் குறிப்பிடும்போது ஆண்டு என்ற சொல்லின் சுருக்கமாக ஆ என்பதும் காலயுத்தி என்னும் தமிழ் வருடத்தைக் குறிப்பிடும்போது வருடம் என்ற சொல்லின் சுருக்கக் குறியீடான ™ என்பதும் கையாளப்பட்டுள்ளன. இவ்வகையில் ஆண்டு விபரம் வருமாறு அமையப்பெற்றது. 1919 ஆ - தெ காலயுக்தி ™. இதிற் காணப்படும் ஆ - தெ என்ற அமைப்பு தெளிவாக விளங்கவில்லை. எனினும் 1919க்குச் சமமான காலயுக்தி வருடம் என்ற பொருள்தரும் சுருக்கக் குறியீடாக இருக்கலாம். மேற்படி ஆண்டின் தை மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு ரோகிணி நட்சத்திரத்தில் வளர்பிறை தசமி திதியில் சோ.ப. கணபதிப்பிள்ளையின் மரணம் சம்பவித்த தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை இறந்த நபரின் நினைவாக வெளியிடப்பெறும் கல்வெட்டு நூலிற் காணப்படும் திதிநிருணய வெண்பாவில் உள்ளடங்குவன. இங்கு தைமாதம் தமிழ் மாதமா அல்லது அதற்கு நிகரான ஜனவரி மாதமா என்பது கணிப்பிடப்பட வேண்டியது. ரோகிணி நட்சத்திரம் ரோகணி என்று எழுதப்பட்டுள்ளது. வளர்பிறை என்ற தொடர் வ.பி. என்று சுருக்கவடிவில் தரப்பட்டுள்ளமை கொண்டு இக் கல்வெட்டை எழுதுவித்தவர்கள் எழுத்து முறைமையின் நவீனத்துவத்தை அறிந்தவர்கள் எனக் கருதலாம்.

இறந்தவரின் பெயர் எழுதப்பட்ட முறைமையிலும் நவீன யுகத்துக்கான அடையாளம் புலனாகின்றது. அதாவது கணபதிப்பிள்ளை என்ற பெயர், முதல் எழுத்துக்களோடு சோ.ப.கணபதிப்பிள்ளை என்று எழுதப்பட்டுள்ளது. தமிழர் மத்தியில் முதல் எழுத்துகளோடு பெயர் எழுதும் முறைமை கிறிஸ்தவத்தின் செல்வாக்கால் ஏற்பட்ட ஒன்றாகும். அந்நடைமுறை ஆங்கிலேயர் ஆட்சியின் பிற்கூறிலேயே செல்வாக்குற்றது. அதற்கு முன் ஆட்பெயரோடு அடையாக ஊர்ப்பெயரை எழுதும் மரபே தமிழர் மத்தியில் நிலவியது. நல்லூர் ஆறுமுக நாவலர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் என்பன எடுத்துக்காட்டாக அமையத்தக்கன. அதன் பின்னர் ஊர்ப்பெயரின் முதலெழுத்தையும் குறித்த நபரின் தந்தையார் பெயரின் முதலெழுத்தையும்

இறந்தவரின் பெயர் எழுதப்பட்ட முறைமையிலும் நவீன யுகத்துக்கான அடையாளம் புலனாகின்றது. அதாவது கணபதிப்பிள்ளை என்ற பெயர், முதல் எழுத்துக்களோடு சோ.ப.கணபதிப் பிள்ளை என்று எழுதப் பட்டுள்ளது. தமிழர் மத்தியில் முதல் எழுத்துகளோடு பெயர் எழுதும் முறைமை கிறிஸ்த வத்தின் செல்வாக்கால் ஏற்பட்ட ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டு வழங்கும் மரபு நடைமுறைக்கு வந்தது. சி.வை. தாமோதரம்பிள்ளை என்பது அவ்வாறு அமைந்ததே. சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளை என்பதே சி.வை.தாமோதரம்பிள்ளை என்று ஆனது. அதுபோல தி.த. சரவணமுத்துப்பிள்ளை, தி.த.கனகசுந்தரம்பிள்ளை என்ற பெயர்களில் முதலில் அமைந்த தி, திருகோணமலை என்ற ஊரைக் குறிப்பது. த, தந்தையார் பெயரின் முதலெழுத்து.

அவ்வகையில் சோ.ப.கணபதிப்பிள்ளை என்ற பெயரின் முதல் எழுத்துக்களில் முதலாவதான சோ என்பது அவரின் ஊரைக் குறிப்பதாகலாம் அல்லது பேரனார் பெயரின் முதலெழுத்தாகலாம். பேரனார் பெயரைக் குறிப்பதாயின் மேற்படி கணபதிப்பிள்ளை, கிறிஸ்தவ சமயச் செல்வாக்குக்கு உட்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர் என்று கொள்வதற்கு அதிக வாய்ப்புண்டு. ஏனெனில் மேலைத்தேய மரபின் வழியிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட முதலெழுத்துக்களுடனான பெயர் எழுதும் மரபு ஏற்பட்டது. ஆயின் அவர் இறந்த செய்தியைக் குறிப்பிடுவதான ''பரமபதம் அடைந்தார்'' என்ற மங்கலச் சொல்லானது இந்துமத சார்பானது. குறிப்பாக வைணவமத சார்பானது. அவ்வகையில் சோ.ப.கணதிப்பிள்ளை கிறிஸ்தவ சமயஞ் சேர்ந்து மீண்ட ஒரு குடும்பத்தைச் சார்ந்தவராதல் கூடும். கல்வெட்டு வாசகங்கள் வருமாறு:

1. *1919 அ - தெ*
2. *காலயுத்தி 1M*
3. *தை Š 27தி*
4. *ஞாயிற்றுக்*
5. *கிழமையி*
6. *ரவு ரோகணிந*
7. *ட்சத்திர ... வ*
8. *பி தசமி திதியி*
9. *ல் சோ ப க*
10. *ணபதி(ள்ளை) பர*
11. *ம பதவி யடை*
12. *ந்தார்*

பழுகாமத்திற் காணப்படும் அடுத்த கல்வெட்டு 1920ஆம் ஆண்டு காலமான கற்பகநாச்சியார் தொடர்பானது. அவரது பெயர் பி. ஆசிரிப்பிள்ளை வி. கணபதிப்பிள்ளை கற்பக நாச்சியார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரிபிள்ளை, கணபதிப்பிள்ளை என்ற பெயர்கள் ஒவ்வோர் முதலெழுத்துடன் எழுதப்பெற்றுள்ளன. ஆகையால் அப்பெயர்கள் இரண்டையும் கற்பக நாச்சியாரின் முன்னோர் பெயர் என்று கொள்ள

பழுகாமத்திற் காணப்படும் அடுத்த கல்வெட்டு 1920ஆம் ஆண்டு காலமான கற்பக நாச்சியார் தொடர்பானது. அவரது பெயர் பி. ஆசிரிப் பிள்ளை வி. கணபதிப்பிள்ளை கற்பக நாச்சியார் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. அதாவது ஆசிரிப்பிள்ளையும் கணபதிப்பிள்ளையும் ஒரே பரம்பரையைச் சேர்ந்தவர்களாய் இருப்பதற்குச் சாத்தியம் இல்லை.

அவர்கள் இருவரும் முறையே கற்பகநாச்சியாரின் தந்தையாகவும் கணவனாகவும் இருத்தல் கூடும். எவ்வாறாயினும் இக்கல்வெட்டில் பெயரெழுதப்பட்டுள்ள முறை விநோதமானதே. மரணம் சம்பவித்த ஆண்டு 1920ஆம் ™ என்று சுருக்கக் குறியீடுடன் தரப்பட்டுள்ளது. மாதம் கார்த்திகை Š என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கில ஆண்டும் கார்த்திகை என்ற தமிழ் மாதமும் தரப்பட்டனவா அல்லது கார்த்திகை என்பது நவம்பர் என்ற ஆங்கில மாதத்துக்குப் பதிலாகத் தரப்பட்டதா என்பது தெளிதற்குரியது. தமிழ் முறைப்படியான வருடம், மாதம், பட்சம், திதி என்பன தரப்படவில்லை. ஆகையால் கிறிஸ்தவ சார்பான குடும்பம் என்று கொள்ள இடமுண்டு. ஆனால் தெய்வீகமடைந்தார் என்ற மங்கல வழக்கும், சாசன வாசகங்களுக்கு மேலே தொடக்கத்திற் பொறிக்கப்பட்ட வேல்வடிவும் கற்பக நாச்சியார் குடும்பத்தை சைவச் சார்பானதாக இனங்காட்டுகின்றன. கல்வெட்டு வாசகங்கள் வருமாறு:

எவ்வாறாயினும் இக்கல்வெட்டில் பெயரெழுதப் பட்டுள்ள முறை விநோதமானதே. மரணம் சம்பவித்த ஆண்டு 1920ஆம் என்று சுருக்கக் குறியீடுடன் தரப்பட்டுள்ளது.

தமிழ் முறைப்படியான வருடம், மாதம், பட்சம், திதி என்பன தரப்படவில்லை. ஆகையால் கிறிஸ்தவ சார்பான குடும்பம் என்று கொள்ள இடமுண்டு.

1. 1920 ம் ™
2. கார்த்திகை Š
3. 24 பழுகாமம்
4. பி ஆசிரி
5. பிள்ளை வி கணப
6. திபிள்ளை கற்பக நா
7. ச்சியார் தெய்வீக
8. மடைந்தார்

இறப்புச் செய்தி குறித்த மற்றொரு சாசனம் வித்தியாசமானது. அது இருவரின் இறப்புப் பற்றிய செய்தியைத் தருகின்றது. ஒருவர் பொ.த.க.கந்தையன் என்பவர் (கந்தயன் என்றே எழுதப்பட்டுள்ளது) அடுத்தவர் அவரது மகன் பி.சின்னப்பிள்ளை என்பவர். இவர்களுள் முன்னவர் 1908ஆம் ஆண்டு ஐப்பசியிலும் பின்னவர் 1927ஆம் ஆண்டு வைகாசி 8ஆம் திகதியிலும் காலமாயினர். ஆகையால் இக்கல்வெட்டு 1927 வைகாசியிலோ அல்லது அதன் பின்னரோ வெட்டப்பட்டிருத்தல் வேண்டும். இக்கல்வெட்டை வெட்டுவித்தவர் இக்கல்வெட்டிற் குறிப்பிடப்பெறும் கந்தையனுடைய சகோதரராக இருத்தல் வேண்டும். (இறப்புத் தொடர்பான கல்வெட்டில், வெட்டுவித்தவர் யார் என்ற விவரமும் தரப்படுகின்ற இந்த நடைமுறை, தற்காலத்தில் பத்திரிகை, வானொலி முதலான ஊடகங்களில் வெளியிடப் பெறும் மரண அறிவித்தல்களின் இறுதியில் தகவல் தந்தவர் பற்றிய விவரமும் தரப்படுவதோடு ஒப்பிடத்தக்கது) ஏனெனில் கல்வெட்டின் இறுதியில் அமைந்த வெட்டுவித்தவர் பெயர் கந்தையனுடைய முதலெழுத்துக்களையே கொண்டதாக பொ.த.க சண்முகம் என்று அமையப் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கல்வெட்டுக்கள் இறந்தவரின் உடலைப் புதைத்த உடனோ அல்லது அவரது அந்திமக் கிரியையின் போதோதான் நாட்டப்படுவன அல்ல, காலங்கடந்தும் நாட்டப் பட்டிருக்கலாம். அதுபோலவே இறந்தவரின் உடலைப் புதைத்துத்தான் நாட்டவேண்டும் என்பதில்லை. தகனம் செய்யப்படும் இடத்திலும் நாட்டப் பெற்றிருக்கலாம்.

இக்கல்வெட்டின் மூலம் உய்துணரத்தக்க விடயம் ஒன்று உண்டு. அதாவது இத்தகைய கல்வெட்டுக்கள் இறந்தவரின் உடலைப் புதைத்த உடனோ அல்லது அவரது அந்திமக் கிரியையின் போதோதான் நாட்டப்படுவன அல்ல, காலங்கடந்தும் நாட்டப்பட்டிருக்கலாம். ஏனெனில் கந்தையன் காலமாகி கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளின் பின்னரே இக்கல் நாட்டப் பெற்றுள்ளது. அதுபோலவே இறந்தவரின் உடலைப் புதைத்துத்தான் நாட்டவேண்டும் என்பதில்லை. தகனம் செய்யப்படும் இடத்திலும் நாட்டப் பெற்றிருக்கலாம். மேற்படி கல்வெட்டின் வாசகங்கள் வருமாறு:

1. 1908 ™
2. (அ) ப்பசி
3. க. னார்
4. ஆ போ த க
5. கந்தயனு
6. ம் 1927 ™
7. வை Š
8. 8 ந்திய
9. தி மகன்
10. க சின்ன
11. ப் பிள்ளை
12. யும் தெய்
13. வீகம் அ
14. டைந்த
15. ணர்
16. பொ த க சண்முகம்

போரதீவு திரௌபதி அம்மன் கோவில் முன்றிலில் மிகச் சிறியதும் விடயத் தெளிவற்றதுமான கல்வெட்டு ஒன்று நடுகல் போன்று நாட்டப் பெற்றுள்ளது. அதுவும் இறப்புத் தொடர்பானதாக இருப்பதற்குச் சாத்தியப்பாடு உள்ளது. அதன் வாசகம் வருமாறு:

1. 94 ஆ
2. 4 Š
3. 25 தி
4. பி சீ ந
5. போ
6. தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் இறுதியில் அமைந்துள்ள தந்தை என்ற சொல் முறைப்பெயரோ இயற்பெயரோ என்று முடிவு செய்யக் கூடியதாயில்லை. ஒருவேளை அதற்கு மேல் வரியில் உள்ள ''போ'' என்ற எழுத்தையும் சேர்த்து அமைந்த ''போதந்தை'' என்ற இயற்பெயராகவும் இருத்தல் கூடும். அவற்றுக்கு மேல் வரியிலுள்ள பி சீ ரு என்பவை முதலெழுத்துக்களாகவோ அன்றேல் வேறு விடயம் குறித்த தொடர் ஒன்றின் சுருக்கக் குறியீடாகவோ இருத்தல் கூடும். தொடக்கத்தில் உள்ள 94 ஆ என்பது 19ஆம் நூற்றாண்டுக்குரிய 94ஆம் ஆண்டைக் குறிப்பதாகலாம். அந்த ஆண்டின் 4ஆம் மாதத்தின் 25ஆம் திகதியில் நிகழ்ந்த இறப்புக்குறித்த நடுகல்லாக அன்றேல் அன்றைய தினத்தில் நாட்டப்பெற்ற எல்லைக்கல்லாக மேற்படி கல்லைக் கொள்ளலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற மேற்படி கல்வெட்டுக்களை நோக்கும்போது பல வருடங்களுக்குமுன் பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்களாற் பதிவு செய்யப்பெற்ற இத்தகைய கல்வெட்டு ஒன்றும் நினைவிற் கொள்ளத்தக்கதே (Velupillai, A., 1971: 77). அது புத்தள மாவட்டம் சார்ந்த கல்பிட்டி நகரில் அமைந்துள்ள ஒல்லாந்தக் கோட்டையில் உள்ள இடுகாட்டிற் காணப்படுவது ஓர் இளம் பெண்ணின் இறப்புத் தொடர்பானது. அதன் வாசகங்கள் வருமாறு:

1. க அகரு ஆண்டு
2. ஆடி ිඊ .... மத்தீஸ்
3. த றோசாயிருப்பியு
4. ய பெண் காதி கிறிஸ்ரி
5. னா பறுநாந்து வேத
6. நாயகம் மரணமடை
7. ந்து க0 .... யிவடத்தில் அட
8. க்கம் பண்ணினது
9. வயது கஎ மாதம்
10. எ நாள் உஎ கலியா
11. ண முடித்து வாழ்த்தி
12. ருந்தது ™: ί நாள்: கి

கிறிஸ்ரினா பெர்ணான்டோ வேதநாயகம் என்ற இளம்பெண், றொசைறோ பீரிஸ் என்பவரின் மனைவி 9.7.1815இல் அடக்கம் செய்யப்பட்டது தொடர்பானது இக்கல்வெட்டு. இறக்கும்போது அவளுக்கு எத்தனை வயது, மணம் முடித்து எவ்வளவு காலம் வாழ்ந்தாள் என்பன பற்றிய விவரங்களும் மேற்படி கல்வெட்டிற் பதியப்பெற்றுள்ளன.

இறக்கும் போது வயது 17 வருடம், 7 மாதம், 27 நாட்கள். திருமணம் முடித்து வாழ்ந்து 4 வருடமும் 16 நாட்களும். கல்வெட்டில் ஆண்டு, மாத, நாள் எண்ணிக்கை யாவும் தமிழ் இலக்கங்களில் தரப்பட்டுள்ளன. ஆண்டு,

கல்வெட்டில் ஆண்டு, மாத, நாள் எண்ணிக்கை யாவும் தமிழ் இலக்கங்களில் தரப்பட்டுள்ளன. ஆண்டு, மாதம், திகதி என்ற சொற்களுக்கான சுருக்கக் குறியீடுகளும் தமிழ் முறைப்படியே தரப்பட்டுள்ளன.

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மரபில் வீரர்களுக்கு நடுகல் நாட்டும் மரபு பழங்காலத்தில் இருந்து மறைந்துவிட்டது.

மாதம், திகதி என்ற சொற்களுக்கான சுருக்கக் குறியீடுகளும் தமிழ் முறைப்படியே தரப்பட்டுள்ளன. கல்வெட்டிற் குறிப்பிடப்பட்ட ஆடிமாதம் தமிழ் ஆடி மாதத்தைக் குறிப்பிடுகின்றதா அல்லது ஜூலை மாதத்தைக் குறிப்பிடுகின்றதா என்பதில் தெளிவில்லை. ஜூலை என்று கொள்வதே இங்கு பொருந்துவதாகலாம். இக்கல்வெட்டு கிறிஸ்தவ மரபில் அமைந்தமை வெளிப்படையானது. இறந்தவர்களைப் புதைப்பதும் கல்லறை எழுப்புவதும் கல்லறை வாசகம் எழுதுவதும் கிறிஸ்தவ மரபு. தமிழ் மரபில் வீரர்களுக்கு நடுகல் நாட்டும் மரபு பழங்காலத்தில் இருந்து மறைந்துவிட்டது. கிறிஸ்தவம் இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்னமே இலங்கையில் நிலவிய, கோணேசர் கல்வெட்டு முதலானவற்றைத் தோற்றுவித்த நூல்மரபு ஒன்றும் கிறிஸ்தவ வழிவந்த கல்லறை வாசகமரபும் தம்முள் தாம் கலந்து ஒரு புதிய மரபை இலங்கையில் உருவாக்கி விட்டனபோலும்.

உசாத்துணை

பத்மநாதன், சி., 2014, ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

Velupillai, A., Ceylon Tamil Inscriptions Pt. I, Peradeniya, 1971.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

இந்திய தத்துவ மரபில் சடப்பொருள்வாதிகள் பற்றிய சித்திரிப்பு - ஒரு மறுமதிப்பீடு

இரத்தினசபாபதி பிரேம்குமார்

அறிமுகம்

இந்திய தத்துவ மரபில் வேதங்களின் ஆதிக்கம் என்பது மறுக்க முடியாத மற்றும் மறைக்க முடியாத உண்மையாக வெளிப்பட்டு நிற்கின்றது. இந்திய தத்துவ மரபில் காணப்படும் ஒன்பது தத்துவ முறைகளில் சடப்பொருள்வாதம் மட்டுமே வேதங்களின் கருத்துக்களை முழுமையாக கேள்விக்குட்படுத்தும் தத்துவ முறைமையாக காணப்படுகின்றது. இந்திய தத்துவ மரபில் வேதங்களுக்கு ஆதரவான அல்லது வேதங்களுடன் முரண்படாத தத்துவவாதிகள் ஒரே ஒரு காரணத்திற்காக மட்டும் சடப் பொருள்வாதத்தினை போற்றிப் புகழ்கின்றனர். இந்திய தத்துவம் அடிப்படைவாத (Fundamentalism) தன்மை கொண்டது என மேலை நாட்டினர் விமர்சிக்கும் போது மேற்குறிப்பிட்ட விமர்சனத்திலிருந்து இந்திய தத்துவ மரபினை சடப்பொருள்வாதம் காப்பாற்றுவதாக அறிஞர்கள் சடப்பொருள் வாதத்தினை பயன்படுத்திக் கொள்கின்றனர் (S.Chatterjee, and D.M.Datta, 1950:77). இந்த சந்தர்ப்பத்தினைத் தவிர ஏனைய அனைத்து சூழ்நிலைகளிலும் சடப்பொருள்வாதம் காரசாரமாக விமர்சனத்துக்குள்ளாக்கப்படுகின்றது. உலகாயதம் என்று அழைக்கப்படுகின்ற சடப்பொருள்வாதம் உலக வழக்கு அல்லது உலக அடிப்படை என்று அர்த்தப்படுத்தப்படுகின்றது. 'சார்வகர்கள்', 'பிரகஸ்பதயர்கள்', 'பூதவாதிகள்', 'பூதசைதண்யவாதிகள்' இன்னும் பல என பல பெயர்கள் சடப்பொருள்வாதிகளைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றுள் 'சார்வகம்' எனும் பெயர் குறிக்கும் அர்த்தம் சடப்பொருள்வாத தத்துவ முறைமையினை கேவலப்படுத்துவதற்காகவே ஏனைய இந்திய தத்துவவாதிகளினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 'சார்வகர்' என்ற சொல்லுக்கு பின்வரும் அர்த்தங்கள் சொல்லப்படுகின்றன:

> இந்திய தத்துவம் அடிப்படைவாத (Fundamentalism) தன்மை கொண்டது என மேலை நாட்டினர் விமர்சிக்கும் போது மேற் குறிப்பிட்ட விமர்சனத்திலி ருந்து இந்திய தத்துவ மரபினை சடப்பொருள் வாதம் காப்பாற்றுவதாக அறிஞர்கள் சடப்பொருள் வாதத்தினை பயன்படுத்திக் கொள்கின்றனர்

i. உண்ணுதல், குடித்தல் மற்றும் மகிழ்ச்சியாக இருத்தலில் நம்பிக்கை உடையவர்கள்.

ii. இனிமையாகப் பேசுபவர்கள்.

iii. ஒழுக்கம் இல்லாதவர்கள் (Chandradhar Sharma, 2003:40).

மேற்குறிப்பிட்ட பண்புகளை சடப்பொருள்வாதிகளுக்கு உரியதாக கூறுவதன் மூலம் சடப்பொருள்வாதிகள் பற்றிய மோசமான பதிவினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு காணப்படும் முக்கிய பிரச்சினை என்னவெனில், சடப்பொருள் வாதிகள் பற்றிய அவர்களது சொந்தப் படைப்புக்கள் அல்லாமல் ஏனைய தத்துவமரபினர் கூறும் கருத்துக்கள் மூலம் நாம் பெரும்பாலும் சடப்பொருள் வாதிகள் பற்றி அறிய முயல்வதாகும்.

உருவாக்குவதில் அனைத்து இந்திய தத்துவ மரபினரும் உறுதியாக நிற்பது தெரிகின்றது.

இங்கு காணப்படும் முக்கிய பிரச்சினை என்னவெனில், சடப்பொருள் வாதிகள் பற்றிய அவர்களது சொந்தப்படைப்புக்கள் அல்லாமல் ஏனைய தத்துவமரபினர் கூறும் கருத்துக்கள் மூலம் நாம் பெரும்பாலும் சடப் பொருள்வாதிகள் பற்றி அறிய முயல்வதாகும். தத்வோப்பலவசிம்ஹா, சுக்ரநீதி போன்ற நூல்கள் சடப்பொருள்வாதிகளின் சொந்தப்படைப்புக்கள் என்று கூறப்பட்டாலும் அவை சிக்கலான பிரச்சினைகளை எடுத்துக் கூறவில்லை என்பது சடப்பொருள்வாதிகள் பற்றிய நடுவுநிலைமையான முடிவுக்கு நாம் வர பெரும் தடையாக உள்ளது.

இத்தகைய நூல்கள் உண்மையிலேயே சடப்பொருள்வாதிகளின் நூல்களா? அல்லது அவர்களின் பெயரினைக் கெடுப்பதற்காகவே அவர்களுக்கு எதிரான தத்துவவாதிகளினால் உருவாக்கபட்டவையா? என்ற கேள்வி சடப்பொருள்வாதிகளின் மொத்தக் கருத்துக்களை அலசி ஆராய்ந்தவர்களின் மனத்தில் எழக் கூடும். சோ. கிருஷ்ணராஜாவின் பொருள்கொள்ளல் இந்நோக்குடன் ஒத்துச் செல்வதைக் காணலாம். ''ஜெயராசிப்பட்டரின் தத்வோப்பலவசிம்ஹா அறிவாராட்சியியல் அடிப்படையில் ஏனைய சடப்பொருள்வாத நிலைப்பாடுகளில் இருந்து வேறுபடுகின்றது. சடப்பொருள்வாதிகளின் நான்கு வகைப் பூதங்கள் பற்றி குறிப்பிடும் இந்நூல் அவை மெய்யானது என நிறுவுவதற்கான வாய்ப்பான அடிப்படைகள் எதுவும் இல்லை என்று (தர்க்க ரீதியான ஐயம் என்ற நிலைப்பாட்டிலிருந்து) தெரிவிக்கின்றது. எனவே இந்நூலை முழுமையான தொரு சடப்பொருள்வாத நூலாக ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பினும்....'' (கிருஸ்ணராஜா,சோ., 2011: 66).

மேலும் இத்தகைய சூழ்நிலை இந்திய சடப்பொருள்வாதிகளுக்கு எதிரானதாகவும் ஏனைய இந்திய தத்துவ வாதிகளுக்கு சாதகமானதாகவும் அமைந்துவிடுகின்றது. இந்திய சடப்பொருள்வாதிகள் பற்றிய சரியான நோக்கினை நாம் பெறவேண்டுமாயின், சுய சிந்தனையுடனும் விழிப்புடனும் இந்திய சடப்பொருள்வாதிகள் பற்றி இந்திய தத்துவ மரபினர் கூறும் கருத்துக்களை நன்கு அலசி ஆராய வேண்டும்.

புலக்காட்சியும் இந்திய சடப்பொருள்வாதமும்

அறிவைப் பெறும் வழிகள் பத்தினுள்[1] உரையினைத் தவிர ஏனைய அனைத்து அறிவினைப் பெறும் வழிகளையும் புலக்காட்சியினுள்[2] அடக்கிவிட முடியும். மேலும் இந்த ஒன்பது அளவைகளையும் 'இவ்வுலகம்' என்ற கட்டளைக் கல்லுக்குள் அடக்க முடியும். உரை மட்டுமே 'அவ்வுலக' (பௌதிக அதீதம்) த்துடன் தொடர்புபட்டதாக உள்ளது. இந்த அடிப்படையில் பௌதிக அதீதத்தினை அடித்தளமாகக் கொண்ட 'உரை'யினை எவ்வகையில் ஏற்புடைய அறிவுமூலமாக கருதுவது? என்ற கேள்வியினை இந்திய சடப்பொருள்வாதிகள் எழுப்புகின்றனர் (Chandradhar Sharma, 2003:43).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன ஐரோப்பிய தர்க்கப் புலனறிவுவாதிகளைப் போல் பகுத்தறிவிற்கும், புலன் அனுபவத்திற்கும் அப்பாற்பட்ட எந்த அறிவு முறைமையினையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருந்திருக்கவில்லை என்பது நிதர்சனமான உண்மையாகும்.

நல்ல தர்க்க வாதங்களின் ஏற்புடைமை என்பது புலக்காட்சியில் தங்கியுள்ளது. புலக்காட்சியில் தங்கியிராத வாதங்களினால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. அவை வெறுமனே கூறியது கூறலாகவே இருக்கும். நல்ல வாதங்களும், எடுகூற்றுக்களும் வடிவ ரீதியாகவும் அனுபவ ரீதியாகவும் உண்மைத்தன்மை கொண்டவையாக இருக்கும். 'ஐம்புலன்களினால் ஏற்படும் புலக்காட்சி மற்றும் அகக்காட்சி (இன்பம் மற்றும் துன்பம்) இவற்றை மட்டும் இந்திய சடப்பொருள்வாதிகள் ஏற்றுக்கொள்கின்றனர்' (Aananta Kumar Bhattacharyya, 1990: 463-464). எந்த ஏற்புடைய அறிவும் புலக்காட்சியை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்க வேண்டும் என இந்திய சடப்பொருள்வாதிகள் வற்புறுத்தினர் (Chandradhar Sharma, 2003:42).

புலக்காட்சியினை அடிப்படையாகக் கொண்ட அனுமானத்தினையே அவர்கள் ஏற்றுக்கொண்டனரே தவிர வேறுவகை அனுமானங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருந்திருக்கவில்லை. கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்திய சடப்பொருள்வாதியான புரந்தரர் தன்னுடைய 'சார்வகமத கிரந்த கர்த்தா' என்ற நூலில் புலக்காட்சி பற்றிய தனது நோக்கினை வெளிப் படுத்துவதை எஸ். என். தாஸ் குப்தா பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றார். ''எங்கெல்லாம் புலன் அனுபவம் இருக்கின்றதோ அங்கெல்லாம் புறப்பொருட்களின் இயல்பினைத் தீர்மானிப்பதில் அனுமானத்தின் பயன்பாட்டினை புரந்தரர் அனுமதிக்கின்றார். ஆனால், புலன் அனுபவத்திற்கு உட்படாத அடிப்படைவாத கொள்கைகளான கடந்தநிலை அல்லது மரணத்தின் பின் வாழ்க்கை அல்லது கர்மக்கோட்பாடு என்பவற்றை நிரூபிக்க பயன்படுத்த முடியாது என்றும் புரந்தரர் குறிப்பிடுகின்றார்'' (Debiprasad Chattopadhyaya, 1959: 28). இந்த விபரிப்பு இந்திய சடப்பொருள்வாதிகளின் தர்க்கமும் புலன் அனுபவமும் ஒன்றிணைய வேண்டும் என்ற நோக்கினை தெளிவுபடுத்துவதாக இருக்கின்றது.

இந்திய அனுமானம் ஐந்துவகையான கூறுகளைக் கொண்டது. இந்த அனுமான முறை தர்க்கமும் (Form) புலன் அனுபவமும் (Sense experience) கலந்த ஒன்றாக காணப்படுகின்றது. அனுமானம் வெறும் வடிவத்தினை மட்டும் கொண்டிருக்குமாயின் அது அறிவினைப் பெருக்காது என்பதுடன் வெறும் கூறியது கூறலாக மாறிவிடும். சிலவேளைகளில் அர்த்தமற்றதாகவும் காணப்படும். எடுத்துக்காட்டாக, வடிவத்திற்கு முக்கியத்துவம் வழங்கும் அரிஸ்டோட்டிலின் முக்கூற்று நியாய அனுமானத்தை காண்போம்.

மௌரியர்கள் அனைவரும் இந்தியாவின் பிரதம மந்திரிகள் ஆவர். (பிழை)

ஜவஹர்லால் நேரு ஒரு மௌரியர் ஆவார். (பிழை)

நல்ல தர்க்க வாதங்களின் ஏற்புடைமை என்பது புலக்காட்சியில் தங்கியுள்ளது. புலக்காட்சியில் தங்கியிராத வாதங்களினால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

எந்த ஏற்புடைய அறிவும் புலக்காட்சியை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்க வேண்டும் என இந்திய சடப்பொருள் வாதிகள் வற்புறுத்தினர்

[stamp]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய சடப்பொருள் வாதிகள் புலன் அனுபவத்திற்கு உட்பட்ட அனுமானத் தினையே அங்கிகரிக் கின்றனர். அனுமானத் தினை அதற்கு அப்பாற்பட்ட வகையில் பிரயோகிப்பது தவறானது என இந்திய சடப்பொருள் வாதிகள் வலியுறுத்து கின்றனர்.

ஆகவே, ஜவஹர்லால் நேரு இந்தியாவின் பிரதம மந்திரி ஆவார். (சரி)

மேலே உள்ள இரண்டு எடுகூற்றுக்களும் தர்க்க ரீதியாக சரியானதாக கருதப்பட்ட போதிலும் அவை இரண்டும் தவறான உள்ளடக்கத்தினைக் கொண்டிருக்கின்றன. ஆனால், முடிவுக்கூற்று தர்க்க ரீதியாக சரியானதாகவும் உள்ளடக்க ரீதியாக சரியானதாகவும் உள்ளது. இந்த அடிப்படையில் வடிவம் பேணும் தர்க்கத்தின் ஏற்புடைமை கேள்விக்குறியாக்கப்படுகின்றது. இந்திய சடப்பொருள்வாதிகள் புலன் அனுபவத்திற்கு உட்பட்ட அனுமானத்தினையே அங்கிகரிக்கின்றனர். அனுமானத்தினை அதற்கு அப்பாற்பட்ட வகையில் பிரயோகிப்பது தவறானது என இந்திய சடப் பொருள்வாதிகள் வலியுறுத்துகின்றனர் (Debiprasad Chattopadhyaya, 1959: Ibid). ஏனைய இந்திய தத்துவவாதிகள் முறையற்ற வகையில் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட வகையில் தர்க்க அனுமானங்களை பிரயோகித்து கடவுள் இருப்பு உட்பட ஏனைய அனைத்து பௌதிக அதீத எண்ணக்கருக்களை நிரூபிக்கும் முயற்சியில் ஈடுபடுவதை இந்திய சடப்பொருள்வாதிகள் கண்டிக்கின்றனர்.

தர்க்கப்புலன் அனுபவங்களுக்கு உட்பட்ட அனுபவ விடயங்களுடன் தன்னை வரையறுத்துக்கொள்ளும்போதுதான் அது ஏற்புடைய அறிவைத் தரும் என்பதை இந்திய சடப்பொருள்வாதிகள் நன்கு அறிந்திருந்தனர் (Chandradhar Sharma, 2003:42). கடவுளின் இருப்பு, ஆத்மாவின் இருப்பு, கர்மம், மறுபிறவி, சொர்க்கம், நரகம், மோட்சம், நிர்வாணம் என்ற கருத்துக்களை இந்திய தத்துவவாதிகள் பயன்படுத்தி வருகின்றனர். இக் கருத்துக்கள் இவ்வுலக அடிப்படையில் நிரூபிக்க முடியாதவை.

ஆத்மாவும் உடலும் ஒன்றா, இரண்டா?

நிரந்தரமான மாறாத ஆத்மா உண்டென்றும், அது உடல் மறைகின்ற போது பல பிறவிகளை எடுப்பதாகவும் கர்ம பலன்களை அனுபவித்த பின் மோட்சம் அடைவதாகவும் உள்ள கருத்துக்களை பெரும்பாலான இந்தியதத்துவ வாதிகள் கூறிவருகின்றனர். இக்கருத்துக்களுக்கு எல்லாம் எதிராக உடலின் குணமே ஆத்மா என இந்திய சடப்பொருள்வாதிகள் வாதிடுகின்றனர். இக்கருத்தினை பின்வரும் சொற்றொடர்கள் மூலம் விளக்க முற்படுகின்றனர் (Debiprasad Chattopadhyaya, 1976: 423-424).

''நான் கறுப்பு நான் மெலிவு'', ''எனது உடல்'' என்ற சொற்றொடர்களில் ''நான்'', ''எனது''என்பன உடலின் குணத்தினை குறிக்கின்றனவே தவிர உடலுக்கு அப்பாலான ஒரு பொருளை அல்ல என வாதிடுகின்றனர். மேலும் ''இராகுவின் தலை'' என்ற தொடரில் ''இராகுவின் தலை'' என்பது இந்திய சடப்பொருள்வாதிகளின் கருத்துப்படி அர்த்தமற்ற தொடராகும். ஏனெனில் இராகு என்றாலே தலை என்றுதான் அர்த்தம். எனவே ''இராகுவின் தலை'' என்பதன் அர்த்தம் தலையின் தலை என்பதாகும் (E.B.Cowell and A.E. Gough 1914:8).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, இந்த தொடர் தர்க்கரீதியாக அர்த்தமற்றதாக மாறுகிறது. இங்கு இராகுவும் தலையும் இரண்டு பொருள்கள் அல்ல, ஒரே பொருளினையே குறிக்கின்றது. அதே போல் உடல் மற்றும் ஆத்மா என்ற இரண்டு சொற்களும் இரண்டு பொருள்களை குறிக்கவில்லை மாறாக ஒரே பொருளைத்தான் குறிக்கின்றன என்பது இந்திய சடப்பொருள்வாதிகளின் வாதமாகும். மேலும் ''என்னைக் கொல்லாதே'', ''எனக்கு பசி'' என்ற தொடர்கள் உடலின் பண்புகளை குறிப்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். ''என்னைக் கொல்லாதே'' என்று ஒருவர் கூறுவாரே தவிர ''என் உடலைக் கொல்லாதே'' என்று கூறமாட்டார். நான் அதிஷ்டவசமாக குண்டு வெடிப்பில் இருந்து தப்பினேன் என்று ஒருவர் கூறுவாரே தவிர எனது உடல் குண்டுவெடிப்பில் இருந்து அதிஷ்டவசமாக உயிர் தப்பியது என்று கூறமாட்டார். இந்திய சடப்பொருள்வாதிகளின் கருத்தப்படி உடலின் ஒரு பண்பான ''நான்'' எனும் ஆத்மா மூன்று வகையான செயற்பாடுகளை செய்து வருகிறது (Aananta Kumar Bhattacharyya, 1990: 454).

★ செயல் செய்பவர் (The Doer)

★ அனுபவிப்பவர் (Enjoyer)

★ காண்பவர் (Seer)

இவை மூன்றும் உடலின் குணங்களாக இந்திய சடப்பொருள்வாதிகள் அடையாளம் காண்கின்றனர்.

கடவுள் அல்லது ஆத்மா என்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே இந்திய தத்துவ முறைமைகளில் பௌதிக அதீத அடித்தளம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பௌத்தத்திலும்கூட நிரந்தர ஆத்மாவுக்கு சமமான உணர்வு நிலைகளின் தொடர்ச்சி (stream of consciousness) என்ற கருத்து உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய தத்துவ முறைமைகளின் பௌதீக அதீத கருத்துக்களுக்கும் சடங்குகளுக்கும் அதிகாரத்தோடு இணைந்த அல்லது அதிகாரத்தினைக் கொண்ட ஒரு சமூகக் குழுவின் சுரண்டல் சார்ந்த செயற்பாடுகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக இந்திய சடப்பொருள்வாதிகள் வாதிடுகின்றனர் (Chandradhar Sharma, 2003:40). பலவிதமான ஒடுக்கு முறைகளும் அடக்கு முறைகளும் சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு இந்திய சடங்குகளிலும் பௌதிக அதீத கருத்துக்களிலும் காணப்படுவதாக இந்திய சடப்பொருள்வாதிகள் வாதிடுகின்றனர் (Chandradhar Sharma, 2003:Ibid). மதம் மற்றும் மதத்தினைப் பின்பற்றும் தத்துவவாதிகளின் செயற்பாடுகளைக் கூர்ந்து கவனிக்கும் ஆய்வாளர்களாகவும் சமூக அக்கறை உடையவர்களாகவும் இந்திய சடப்பொருள்வாதிகள் இருந்துள்ளனர். எடுத்துக்காட்டாக பின்வரும் மதம் பற்றிய அவர்களுடைய கருத்துக்கள் இதனை உறுதி செய்கின்றது.

இந்திய தத்துவ முறைமைகளின் பௌதீக அதீத கருத்துக் களுக்கும் சடங்குகளுக்கும் அதிகாரத்தோடு இணைந்த அல்லது அதிகாரத்தினைக் கொண்ட ஒரு சமூகக் குழுவின் சுரண்டல் சார்ந்த செயற்பாடு களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக இந்திய சடப்பொருள் வாதிகள் வாதிடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் பகுத்தறிவு வாதத்தின் முன்னோடி களாக இந்திய சடப்பொருள் வாதிகள் இருந்துள்ளனர் (Chandradhar Sharma, 2003:Ibid). சமண பௌத்தர்கள் வேதங்களுக்கு எதிராக கிளர்ந் தெழுவதற்கு முன்பதாக இந்திய சடப்பொருள் வாதிகளே வேதங்களுக்கு எதிரான கேள்விகளை எழுப்பினர்.

''மதம் என்பது மயக்கம் தருவது, மக்களை மயக்கத்தில் வைத்துள்ளது, பிரார்த்தனை என்பது எதுவும் செய்வதற்கு மன உறுதியற்ற பலவீனமானவர் களின் எதிர்பார்ப்பு, நரகத்தின் கொடுமைகளில் இருந்து ஒருவரைக் காப்பாற்றும் நியாயமற்ற மனப்பான்மையாக மதவழிபாடு காணப்படுகிறது, கடவுளின் தூதர்கள் மனிதர்களின் மிகச் சிறந்த பொய்யர்கள்'' (D.R.Shastri, 1990: 463-464).

இந்தியாவில் பகுத்தறிவு வாதத்தின் முன்னோடிகளாக இந்திய சடப்பொருள்வாதிகள் இருந்துள்ளனர் (Chandradhar Sharma, 2003:Ibid). சமண பௌத்தர்கள் வேதங்களுக்கு எதிராக கிளர்ந்தெழுவதற்கு முன்பதாக இந்திய சடப்பொருள்வாதிகளே வேதங்களுக்கு எதிரான கேள்விகளை எழுப்பினர். குறிப்பாக வேதங்களின் சடங்குகள் தொடர்பாக பல கேள்விகளை எழுப்பினர். இவர்களது நடவடிக்கைகள் காரணமாக வேதங்களும் அவற்றை ஆதரிப்பவர்களும் தங்களது கொள்கைகளை சரியான முறையில் முன்வைக்கவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகினர். பின்வரும் கேள்விகள் இந்திய சடப்பொருள்வாதிகளினால் வேதங்களின் சடங்குகள் தொடர்பாக எழுப்பப்பட்டன (மேலது, 411).

I. புரோகிதர் கூறுவது போல யாகத்தில் பலியிடப்படும் மிருகம் சொர்க்கத்துக்கு செல்லுமானால் ஏன் அவர்கள் தங்களது வயதான உறவினர்களை யாகத்தில் பலியிட்டு சொர்க்கத்துக்கு அனுப்பக் கூடாது?

II. இறந்தவர்களுக்கு இவ்வுலகில் படைக்கப்படும் உணவுப் பண்டங்கள் இறந்தவர்கள் வாழும் உலகில் (பிதிர் உலகம்) இருக்கும் உறவினர்களை அடையுமானால் நீண்ட தூரம் பயணம் செய்பவர்களுக்கு அவர்களது வீட்டார் உணவு சமைத்து இவ்வாறு அவர்களுக்கு படைத்தால் அவர்கள் பசி அடங்கிவிடுமா?

வேதங்களில் கூறப்படுகின்ற யாகங்களும் சடங்குகளும் புரோகிதர்களின் வாழ்க்கையினை நடத்துவதற்காக உருவாக்கப்பட்டவை என்ற குற்றச்சாட்டினை இந்திய சடப்பொருள்வாதிகள் முன்வைக்கின்றனர் (Chandradhar Sharma, 2003:42). சடங்குகள் மூலம் புரோகிதர்கள் அப்பாவி மக்களை ஏமாற்றுகின்றனர் என இந்திய சடப்பொருள்வாதிகள் வெளிப்படையாகவே விபரிக்கின்றனர் (மேலது, 411). எடுத்துக்காட்டாக பிள்ளைப்பேற்றுக்கான யாகம் (Putresti) தொடர்பான இந்திய சடப் பொருள்வாதிகளின் விபரிப்பினைக் காண்போம்:

''குழந்தைப் பேற்றுக்கான யாகம் இரண்டு விளைவுகளை ஏற்படுத்தலாம்: ஒன்று உடன்பாடானது மற்றொன்று எதிர்மறையானது. குழந்தை பிறக்குமாயின் யாகத்தில் உச்சரிக்கப்பட்ட மந்திரங்களின் சக்திதான் பிள்ளைப் பேற்றுக்கான காரணம் என யாகத்தை நடாத்திய புரோகிதர் கூறுவார். குழந்தை பிறக்காவிட்டால் யாகத்தில் சில குறைபாடுகள் உள்ளன என்று கூறுவார்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமும் இணைந்ததே வாழ்க்கை

மனிதனின் வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்துவருகின்றது. இது இயற்கை. இதற்கு கடவுளோ அல்லது விதியோ காரணம் அல்ல என இந்திய சடப்பொருள்வாதிகள் வாதிடுகின்றனர் (Debiprasad Chattopadhyaya, 1976: 457). இதன் காரணமாக, இவர்கள் இயற்கைவாதிகள் அல்லது சுபாவவாதிகள் என்று அழைக்கப்படுகின்றனர். இன்பத்துக்கு காரணம் போன பிறப்பில் செய்த புண்ணியமோ, துன்பத்திற்கு காரணம் போன பிறப்பில் செய்த பாவமோ அல்ல. இத்தகைய கருத்துக்கள் மக்களை ஏமாற்றுபவர்களிடம் இருந்தும் சுரண்டுபவர்களிடம் இருந்தும் வருவதாக இந்திய சடப்பொருள்வாதிகள் கருதுகின்றனர். சர்வ சித்தாந்த சங்கிரகம் பின்வருமாறு இந்நிலை பற்றி விபரிக்கின்றது.

''இன்பம், துன்பம், புண்ணியம் மற்றும் பாவம் ஏனையோர் கூறுவது போல் ஏற்படுவதில்லை. இன்பமும் துன்பமும் மனிதனால் உணரப்படுவது இயற்கை. இயற்கையினைத் தவிர எந்தக் காரணமும் இல்லை'' (சர்வ சித்தாந்த சங்கிரகம், II: *4*).

இந்திய சடப்பொருள்வாதிகளின் கருத்துப்படி இவ்வுலகில் துன்பமற்ற இன்பத்தை பெற நினைப்பது முட்டாள்களின் சிந்தனையாகும். இன்பமும் துன்பமும் கலந்ததுதான் இவ்வுலகின் இயல்பு. இந்நிலை பற்றிய சர்வ தரிசன சங்கிரகம் பின்வருமாறு விபரிக்கின்றது:

''முட்கள் உள்ளன என்பதற்காக சுவையான மீனை யாரும் ஒதுக்கித் தள்ள மாட்டார்கள். காட்டு விலங்குகள் அழித்துவிடும் என்பதற்காக விவசாயத்தை யாரும் கைவிடுவதில்லை. பிச்சைக்காரர்கள் உணவு கேட்கிறார்கள் என்பதற்காக யாரும் சமைக்காமல் இருப்பதில்லை'' (E.B.Cowell and A.E. Gough 1914:3).

பண்டைய இந்தியாவும் சுதந்திரச் சிந்தனையும்

பண்டைய இந்தியாவில் சுதந்திரச் சிந்தனையாளர்களாக இந்திய சடப் பொருள்வாதிகள் இருந்துள்ளனர்(மனு, XII, *106*). இவர்கள் நாத்திகர்கள் என்று அழைக்கப்பட்டனர். நாத்திகர்கள் என்பதற்கு பல அர்த்தங்கள் சொல்லப்படுகின்றன: வேதத்தை நிராகரிப்போர், கடவுளை மறுப்போர் மற்றும் மறு உலகத்தை மறுப்போர். இவ்வகையில் முழுமையான நாத்திகர்களாக இந்திய சடப்பொருள்வாதிகளே காணப்படுகின்றனர். மறு உலகினை ஏற்பதன் காரணமாக சமணரும் பௌத்தரும் அரை-நாத்திகர்களாக மாறுகின்றனர் (S.Chatterjee, and D.M.Datta, 1950:6).

பண்டைய இந்தியாவின் நீதி முறைமைகளை வகுத்த மனு, இந்திய சடப்பொருள்வாதிகளுக்கும் சுதந்திரச் சிந்தனைகளுக்கும் பெரும் தடையாக இருந்துள்ளார் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. எந்தவொரு வாதமும் எந்தவொரு தர்க்கமும் வேதங்களின் முடிவுகளுடன் முரண்படக் கூடாது என்ற கடுமையான சட்டத்தினை விதிக்கின்றார் மனு. ''தர்க்க ரீதியான

பண்டைய இந்தியாவில் சுதந்திரச் சிந்தனை யாளர்களாக இந்திய சடப் பொருள்வாதிகள் இருந்துள்ளனர் (மனு, XII, 106). இவர்கள் நாத்திகர்கள் என்று அழைக்கப் பட்டனர். நாத்திகர்கள் என்பதற்கு பல அர்த்தங்கள் சொல்லப் படுகின்றன: வேதத்தை நிராகரிப்போர், கடவுளை மறுப்போர் மற்றும் மறு உலகத்தை மறுப்போர்.

உசாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை எந்தவிதத்திலும் வேதங்களுடன் முரண்படக் கூடாது'' (மனு, XII, *106*).

''வேதங்களில் பாண்டித்தியம் பெறாத எவரும் தர்க்கம் கற்பிப்பதற்கு அனுமதிக்கப்படக் கூடாது. வேதங்களுடனும் உயர்ந்த ஆத்ம கொள்கைகளுடனும் முரண்படாத வகையில் தர்க்கத்தினை கற்பிக்க கூடியவராக தர்க்க ஆசிரியர் இருக்க வேண்டும்'' (மனு, XII, *43*).

''ஒரு தர்க்க ஆசிரியன் தர்க்கத்தின் மீது அதிக பற்றுக்கொண்டு வேதங்களையும் தர்ம சாத்திரங்களையும் புறக்கணிப்பானாயின் அவன் நாத்திகனாகவே கருதப்பட வேண்டும். இத்தகைய மனிதன் ஒரு பிராமணனாக இருப்பினும் கூட அந்த சமூகத்தில் இருந்து அவன் விலக்கி வைக்கப்பட வேண்டும்'' (மனு, II, *10-11*).

இத்தகைய மனுவின் அதிகார வசனங்கள் மத்திய கால ஐரோப்பாவின் விஞ்ஞான சிந்தனைக்கு எதிரான மத அடிப்படைவாதத்தினை ஞாபகப் படுத்துவதாக உள்ளது. பௌதிக அதீத புனைகதைகள்கூட இந்திய சடப்பொருள்வாதத்திற்கு எதிரான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கூட நாம் இந்திய வரலாற்றில் காண முடிகிறது. புகழ்பெற்ற இந்திய இதிகாசமான மாகாபாரதத்தில் பின்வரும் கதை சொல்லப்படுகிறது. காசியப்பன் என்ற பிராமணர் முன்பாக ஒரு நரியின் உருவில் இந்திரன் தோன்றி இக்கதையினை கூறுவது போல் அமைக்கப்பட்டுள்ளது:-

''(முந்திய பிறவியில்) நான் பயனற்ற நுட்பமான வாதங்களைக் கொண்ட தர்க்கத்தினை விரும்பிக் கற்றிருந்தேன். நான் தர்க்க அறிவினைக் கொண்ட அறிஞராக இருந்து வேதங்களை கடுமையாக தாக்கினேன். சபைகளில் முறையற்ற தர்க்கவாதங்களைப் பயன்படுத்திப் பேசினேன். பிராமணர்களுக்கு எதிராக செயற்பட்டேன். பிராமணர்கள் சொல்வதை மறுத்தேன். நான் நாத்திகனாக இருந்ததுடன் எல்லாவற்றையும் சந்தேகக் கண்கொண்டு பார்த்தேன். தர்க்கத்தினை வேதங்களைக் காட்டிலும் உயர்வாக கருதிக் கற்றேன். இச் செயற்பாடுகள் காரணமாக நான் இப்பிறவியில் நரியாக மாறி மிகுந்த துன்பத்தினை அனுபவித்துவருகிறேன்'' (Debiprasad, Chattopadhyaya, 1976 :193).

மேற்குறிப்பிட்ட சான்றுகள் இந்திய சடப்பொருள்வாதிகள் எதிர்கொண்ட மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளை வெளிப்படுத்துகின்றன.

வேதங்கள் அநியாயமானது என்றும் முட்டாள்தனமானது என்றும் கூறியது கூறல் என்றும், இன்னும் பல எனப் பல்வேறு குற்றச்சாட்டுக்களை வேதங்களுக்கு எதிராக உலகாயுதர்கள் முன்வைக்கின்றனர். இவற்றில் உண்மையில்லாமலும் இல்லை. எடுத்துக்காட்டாக, சதபதபிராமணம் பின்வருமாறு கூறுகிறது.

''புரோகிதர் யாகம் செய்யாவிட்டால் சூரியன் உதிக்காது'' (SB. *11.3.1.5*).

''புரோகிதர்கள் ஒழுங்கான முறையில் சடங்குகளைச் செய்யாவிட்டால்

வேதங்கள் அநியாயமானது என்றும் முட்டாள் தனமானது என்றும் கூறியது கூறல் என்றும், இன்னும் பல எனப் பல்வேறு குற்றச்சாட்டுக் களை வேதங் களுக்கு எதிராக உலகாயுதர்கள் முன்வைக் கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு நிரந்தரமாக இருக்கும். புரோகிதர்கள் ஓர் இடத்துக்கு ஒன்றாக சென்றாலோ அல்லது ஒன்றாக வெளியில் வந்தாலோ மாதங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வராது'' (SB.II.3.1.9-10).

மேற்கூறப்பட்ட சான்றுகளைக் கவனிக்கின்ற போது வேதங்கள் அறிவின் உறைவிடமா? என்ற கேள்வி பகுத்தறிவு ரீதியாக சிந்திக்கும் ஒருவருக்கு எழக் கூடும்.

காம சூத்திரத்தை இயற்றிய வாத்சாயனர் காமத்தினை தர்மத்தின் வழி அங்கீகரிக்கின்றார் (Chandradhar Sharma, *2003:46-47*). துறவறம் போற்றும் வள்ளுவரும் அறத்தின் வழி காமத்தினை அங்கீகரிக்கின்றார். காமத்தினை காமத்துப்பால் என்ற பகுதியில் உள்ளடக்கியிருக்கின்றார். காமத்தினை உள்ளடக்கும் இல்லறத்தினை துறவறத்துக்கு சமமாகவும் கருதுகின்றார். பின்வரும் குறட்பாக்கள் மேற்குறிப்பிட்ட கருத்தினை உறுதிப்படுத்துவனவாக உள்ளன:

''அறத்தான் வருவதே இன்பம்; மற்று எல்லாம்
புறத்த புகழும் இல'' (4.39:9)

''அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று'' (5.49:10)

''அறத்தாற்றின் இல் வாழ்க்கை ஆற்றின் புறத்து ஆற்றில்
போஒய்ப் பெறுவது எவன்'' (5.46:10)

முடிவுரை

இந்திய சடப்பொருள்வாதிகள் நான்கு இந்திய விழுமியங்களில் (அறம், பொருள், இன்பம், வீடு) காமத்துடன் அதிகம் இணைக்கப்பட்டு ஒழுக்கம் கெட்டவர்களாகவும் சமூகத்தினை தவறான பாதைக்கு இட்டுச் செல்பவர்களாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். உண்மையில் இந்திய சடப்பொருள்வாதிகள் அறத்தின் வழியே காமத்தினை அங்கீகரித்தனர். வாத்சாயனர் இத்தகைய வகையீட்டினைச் சேர்ந்தவர். அதேவேளை வள்ளுவரும் இவ்வழியினைப் பின்பற்றுவதை நாம் காண முடிகிறது. பௌதிக அதீத அடிப்படை இல்லாமல் இவ்வுலக அடிப்படையில் ஒழுக்க முறைமைகளை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்தலாம் என்பதில் நம்பிக்கை கொண்டவர்களாக இந்திய சடப்பொருள்வாதிகள் காணப்படுகின்றனர். புனிதமானவைகள் என்றும் உயர்ந்தவைகள் என்றும் சொல்லப்பட்டவைகளில் அநீதிகள் இருப்பதைக் கண்டு அதற்கு எதிராக போர்க் கொடி தூக்கியவர்களாக இந்திய சடப்பொருள்வாதிகள் காணப்படுகின்றனர். தேவர்கள் மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்றும் அதிகம் புண்ணியம் செய்து சொர்க்கம் அடைந்தவர்கள் என்றும் வேத மரபுகள் எடுத்துக் கூறுகின்றன. வேதங்களின் முக்கிய தெய்வமாக கருதப்படும் இந்திரன் கௌதம முனிவரின் மனைவியான அகலிகையுடன் தவறாக நடந்துகொண்டதன் காரணமாக சாபம் பெறுவதும், இந்திரனின்

புனிதமான வைகள் என்றும் உயர்ந்தவைகள் என்றும் சொல்லப்பட்டவைகளில் அநீதிகள் இருப்பதைக் கண்டு அதற்கு எதிராக போர்க் கொடி தூக்கியவர்களாக இந்திய சடப்பொருள் வாதிகள் காணப் படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> புராண இதிகாசங்களின் படி இவ்வுலகத்தில் செய்யப்பட்ட புண்ணியத்தின் விளைவாக கிடைக்கும் சொர்க்கமும் சிற்றின்ப களமாக திகழ்கின்றது.

மகன் ஜயந்தன் இராமனின் மனைவியான சீதையினை விரும்பி தண்டனை பெறுவதும் வேதங்களினதும் அவற்றின் கடவுள்களினதும் மதிப்பீட்டினை கேள்விக்குறியாக்குகின்றன. இந்த அடிப்படையில் இந்திய சடப்பொருள்வாதிகள் மீது சுமத்தப்பட்ட அவதூறான கருத்துக்களை நாம் எண்ணிப்பார்த்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிலையில் இருக்கின்றோம். மேலும் புராண இதிகாசங்களின் படி இவ்வுலகத்தில் செய்யப்பட்ட புண்ணியத்தின் விளைவாக கிடைக்கும் சொர்க்கமும் சிற்றின்ப களமாக திகழ்கின்றது. இந்திரனும் தேவர்களும் ரம்பா, ஊர்வசி, மேனகா, திலோத்தமா முதலிய அரம்பையர்களுடன் ஆனந்தமாக களியாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இளமை மாறாத முதுமை தொடாத இடமாக சொர்க்கம் சித்திரிக்கப்படுகின்றது. இத்தகைய பண்புகளை இந்திய தத்துவவாதிகள் இந்திய சடப்பொருள்வாதிகளுக்கு உரியது என்று கூறி கண்டிக்கின்ற அதேவேளை வேதங்களில் கூறப்படுகின்ற சொர்க்கத்திற்கு உரியதாக இத்தகைய பண்புகள் இருப்பதை நாம் காணலாம். ஆனால் பெரும்பாலான இந்திய தத்துவவாதிகள் இவற்றைக் கண்டிக்காமலும் கண்டுகொள்ளாமலும் இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது.

குறிப்புக்கள்

1. பொதுவாக இந்திய அறிவாராய்ச்சியியலில் பத்து பிரமாணங்கள் பேசப்படுகின்றன.

1. புலக்காட்சி (Perception)	*2.* அனுமானம் (Inference)
3. உவமானம் (Comparison)	*4.* உரை (Verbal testimony)
5. அருத்தாபத்தி (Presumption)	*6.* இயல்பு (Appropriateness)
7. ஐதீகம் (Popular belief)	*8.* அபாவம் (Non-Existence)
9. பாரிசேசம் (Inference by Elimination)	*10.* சம்பவம் (Inclusion)

2. இங்கு புலக்காட்சி என்பது ஐம்புலன்களுக்கு உட்பட்ட சாதாரண புலக்காட்சியினையே குறிப்பதோடு இப்புலக்காட்சியின் விளைவாக ஏற்படுகின்ற இன்பம் மற்றும் துன்பம் என்ற அகக்காட்சிகளையும் உள்ளடக்குவதாக இருக்கும். இத்தகைய சாதாரண புலக்காட்சிக்கு அப்பாற்பட்ட யோகக்காட்சி முதலான பௌதிக அதீத அடிப்படையினைக் கொண்ட காட்சி வகைகளை நாம் புலக்காட்சியாக ஏற்க முடியாது. ஏனெனில் ஒவ்வொரு தத்துவமும் வெவ்வேறு வகையான பௌதிக அதீத புலக்காட்சிகளை எடுத்துரைக்கின்றன. மேலும் இத்தகைய பௌதிக அதீத புலக்காட்சி வகைகளுக்குள் எல்லா தத்துவங்களும் ஏற்றுக் கொள்கின்ற ஒரு பொதுவான கட்டளைக் கல்லினை பிரயோகிக்க முடியாத சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். மேலும் பௌதிக அதீதத்தினை அடிப்படையாகக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலக்காட்சிகளின் நிரூபணம் இவ்வுலக நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது.

உதவி நூல் பட்டியல்

1. Adaikalasamy, Emmar, (B.T 2030) Thirukkural with Commentary, Kanthalakam,Chennai.
2. Bhattacharyya, Anantakumar(1990) Carvaka Darsana in Carvaka / Lokayata, An Anthology of Source Materials and some Recent Studies edited by Debiprasad Chattopadhyaya and Mrinalkanthi Gangopadhyaya, Indian Council of Philosophical Research, New Delhi.
3. Buhler, G., 1965,Manusmrti, SBE, Vol.XXV, New Delhi.
4. Chatterjee, S. and Datta, D.M. 1950, An Introduction to Indian Philosophy, Calcutta University Press, Calcatta.
5. Chattopadhyaya, Debiprasad,1959, Lokayata, People's Publishing House, New Delhi.
6. .... 1976 What is Living and What is Dead in Indian Philosophy, People's Publishing House, New Delhi.
7. Cowell, E.B. and Gough, A.E. (Tr.) 1914, Sarva Darsana Sangraha, London.
8. Eggeling, (tr.), 1964-1965, Satapatha Brahmana, SBE, 5 Vols.
9. Kandaswamy, S.N., 2000, Indian Epistemology as expounded in the Tamil Classics, International Institute of Tamil Studies, Chennai- 600113.
10. Krishnaraja, S., 2011 Carvaka Meiyeal-Oru Meel Paarvai in Meiyeal Chinthanaikal, Prof. S. Krishnarajah Soveniour e,dited by K. Sivathambi, M.A. Nugumaan and V. Inbamohan, Kumaran Publishers, Colombo.-6.
11. Rangacharya, M. (Tr.) 1983, Sarva Siddhandha Sangraha of Sangaracharya, Indian Council of Philosophical Research, New Delhi.
12. Sharma- Chandradhar, 2003, A Critical Survey of Indian Philosophy, Motilal Banarasidass Publishers PVT Ltd. Delhi.
13. Umagupta, 1987, Materialism in Vedas, Classical Publishing Company, New Delhi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நவீனத்துவமும் ஓவியச் செல்நெறியும்

சு.சிவரெத்தினம்

அறிமுகம்

நவீனத்துவம் (Modernism) எனும் எண்ணக்கருவினை அதனோடு இணைந்த வகையில் நமது சொல்லாடலில் இடம்பெறுகின்ற பின்வரும் சொற்கள் தொடர்பான எண்ணக்கருத் தெளிவுடன் அணுகுவது அதனுடைய சமூக வரலாற்றுத் தத்துவப் பின்புலங்களை எடுத்துக்காட்டவும் விளங்கிக் கொள்ளவும் உதவியாயிருக்கும்.

"Modern - மொடேண்

Modernity - மொடேனிற்றி

Modernization - மொடேனிசேசன்

Modernism - மொடேனிசம்'' (சிவத்தம்பி. கா., 2010:2)

Modern என்பது புதியது எனலாம். இது எமது பாரம்பரியத்திலிருந்து பெரிதும் வேறுபட்டு நிற்பதினால்தான் நாம் அதனை Modern என்கின்றோம். ''பின்னர் இது காலப் புதுமையைக் குறிப்பதற்கான ஒரு சொல்லாகிவிட்டது. நவீனம் (Modern) என்பது Modernity யிலிருந்து (நவீனமாம் தன்மை) வருவது (மேலது). Modernity என்பது சமூகம், அதன் சிந்தனைகள், நடைமுறைகள், நம்பிக்கைகள், உற்பத்தி உறவுமுறைகள் என்பனவற்றின் மாற்றம் சார்ந்த ஒரு அரசியல் எண்ணக்கருவாகும்.

Modernity என்றால் என்ன என்பதற்கு Gerge Lorrain என்பவரது மேற்கோளை சிவத்தம்பி எடுத்துக் காட்டுகின்றார்:

''மத்தியகாலத்தில் நிலவிய கடவுள் மைய உலக நோக்கை விடுத்து மனிதனை மையப்படுத்தி அவனையே எல்லாப் பொருள்களுக்குமான மையமாகவும் கொள்ளுகின்ற நிலை, அவனையே அளவுகோலாகக் கொள்ளுகிற நிலைதான் Modernity என்பது ஆகும். இதன் வருகையுடன் மனித ஜீவன் ''விடயப் பொருள்'' ஆகிறது. அதுவே அறிவின் தளமாகிறது. மனிதன் எல்லாப் பொருட்களினதும் ''உடையவன்'' ஆகிறான். அவனே உலகில் நடப்பதை அறிந்து கொள்வதற்கான நோக்கற்புள்ளியாகிறான் (மேலது: 2-3). இவ்வகைப்பட்ட சிந்தனை வளர்ச்சி மறுமலர்ச்சிக்கால கலைஞர்களின் படைப்புகளுக்குள்ளால் வெளிப்பட ஆரம்பித்து விட்டது. ''இத்தாலிய மனிதநேய ஓவியர்களும் பிற இயற்கை விஞ்ஞானிகளும்

'மத்தியகாலத்தில் நிலவிய கடவுள் மைய உலக நோக்கை விடுத்து மனிதனை மையப்படுத்தி அவனையே எல்லாப் பொருள்களுக்கு மான மைய மாகவும் கொள்ளுகின்ற நிலை, அவனையே அளவுகோலாகக் கொள்ளுகிற நிலைதான் Modernity என்பது ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனையும் இயற்கையையும் மையப்படுத்தித் தமது தத்துவங்களை அமைத்துக் கொண்டனர். இக்காலச் சிந்தனையாளரிடம் இருந்த அழகியல் குறித்த பார்வை குறிப்பிடத்தக்கது. எது அழகு? என்ற கேள்விக்கு உடல் சார்ந்த, புலன் உணர்வுகள் சார்ந்த, இயற்கை சார்ந்த பதில்களை இவர்கள் வழங்கினார்கள்'' (முத்துமோகன். ந., 2007: 62 - 63).

இவற்றால், இதுவரை கடவுள் நம்பிக்கையோடு உலகத்தோடு ஒத்திசைந்து போவதற்கு ஒரு சாதனமாக இருந்த அறிவு, இயற்கையின் விதிகளை அறிந்து கொண்டு இயற்கையை விளங்கிக்கொள்வதற்கும் அதைக் கட்டுப்படுத்துவதற்குமான சாதனமாக மாற ஆரம்பித்தது. புதிய புதிய கண்டுபிடிப்புக்களுக்கான வரவேற்பும் அவை பற்றிய தேடலும் தொழிற்புரட்சியைச் சாத்தியமாக்கின.

நவீனமயமாக்கம் (Modernization) என்பது கைத்தொழிற்படுத்துகை காரணமாக சமூகத்தில் உருவாகும் பொருளாதார, அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் எனலாம்.

நவீனமயமாக்கம் பாரம்பரிய சமூக அமைப்பில் பின்வரும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

1. நிலப்பிரபுத்துவ விவசாய பொருளாதாரத்துக்குப் பதிலாக கைத் தொழிலை மையமாகக் கொண்ட முதலாளித்துவ பொருளாதார முறைமை ஏற்படுதல்.
2. மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களையும் தொழிற்சாலைகளையும் நோக்கி இடம்பெயரத் தொடங்கியதால் வேகமான நகரமயமாக்கம் இடம்பெறல்.
3. முதலாளித்துவ பொருளாதார முறையும் நகரமயமாக்கமும் சமூகத்தில் சிறியளவிலான முதலாளித்துவ வர்க்கத்தின்கீழ் தொழிலாளி வர்க்கம், மத்தியதர வர்க்கம் எனும் இரு பெரும்பான்மை வர்க்கப்பிரிவுகள் தொழிற்படல்.
4. ஆட்சி அதிகாரத்திலும், அரச நிர்வாகத்திலும் பொதுமக்கள் பங்கெடுத் துக்கொள்ளக்கூடிய சூழல் உருவாதல். அதாவது முடியாட்சிக்குப் பதிலாக ஜனநாயக அரசுகள் ஏற்படுதல்.
5. சட்டத்தின் முன் யாவரும் சமம் என்கின்ற சட்ட ஆட்சிக்குள் மக்கள் கொண்டுவரப்படுதல்.
6. சமயச் சார்பின்மை அதாவது சமூக நிகழ்ச்சிகளையும் தோற்றப்பாடு களையும் சமய நம்பிக்கையின்றி அறிவாந்த ரீதியில் காரண காரியங்களை விளக்குகின்ற முறை ஏற்படுதல். இதனால் உண்மையைத் தவிர கற்பனைக்கு முக்கியத்துவமில்லாது போய்விடுதல்.

இந்த மாற்றங்கள் ஒன்று சேர்ந்து ஒரு புதிய சமூக பண்பாட்டினைத் தோற்று விக்கின்றன. இந்தப் பண்பாட்டில் நவீன கலையின் ரசிகனாக, போசகனாக, ஆதரவாளனாக சாதாரண குடிமகன் இருந்தான். முன்னைய பண்பாட்டில்

இந்த மாற்றங்கள் ஒன்று சேர்ந்து ஒரு புதிய சமூக பண்பாட்டினைத் தோற்று விக்கின்றன. இந்தப் பண்பாட்டில் நவீன கலையின் ரசிகனாக, போசகனாக, ஆதரவாளனாக சாதாரண குடிமகன் இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் வகுப்பினர் அதாவது அரசர்களும் நிலப்பிரபுக்களும் கனவான்களும் பெற்ற இடத்தை இந்தக் குடிமகன் பெற்றுக்கொண்டான். இவர்களின் தேவைகளும் விருப்பங்களும் ரசனைகளும் முன்னைய சமூகத்தின் அல்லது கலைப் போசகர்களின் தேவைகள் விருப்பங்கள் ரசனைகள் எனபனவற்றிலிருந்து வேறுபட்டவையாகும். இக்காலக் கலைஞன் இந்தச் சமூகத்தின் தேவைகளையும் விருப்பங்களையும் ரசனைகளையும் திருப்திப்படுத்தக்கூடிய கலையினைப் படைக்க வேண்டியவனாகின்றான்.

இந்த நவீனமயமாக்கத்தின் சமூக, அரசியல் தத்துவார்த்த தளத்திலிருந்தே நவீனத்துவம் (Modernism) வெளிப்படுகின்றது. நவீனத்துவம் என்பது நவீனமயமாக்கச் சமூகத்தின் கலை வெளிப்பாட்டு முறைகளையும் அவற்றின் தத்துவார்த்தங்களையும் குறிக்கும்.

பொதுவாக கலையைப் பொறுத்தவரையில் இலக்கியத்தில் Baudelaire யும் ஓவியத்தில் Manet யும் நவீனத்துவத்தின் ஆரம்ப கர்த்தாக்களாக எடுத்துக் கொள்ளும் போக்கு காணப்படுகின்றது.

நவீனத்துவ படைப்புக்கள் என்கின்ற சிந்தனைக்குள்ளால் வெளிப்படும் சுய அனுபவ வெளிப்பாட்டு முறைமைகள் பலவகைப்படும். அந்தவகையில் மனப்பதிவு வாதம் (Impressionism), பின்னைய மனப்பதிவு வாதம் (Postimpressionism), கனவுருவாதம் (Cubism), வெளிப்பாட்டுவாதம் (Expressionism), டாடாயிசம் (Dadaism), சர்ரியலிசம் (Surrialism), அரூப வெளிப்பாட்டு வாதம் (Absract Expressionism), ப்யுச்சரிசம் (Futurism), பொப் ஆர்ட் (Pop art) எனும் கலைப் போக்குகளை உதாரங்களாகக் குறிப்பிட முடியும்.

இலங்கையில் நவீனத்துவம் எனும் போது அது ஐரோப்பாவில் முகிழ்த் தெழுந்தது போன்று ஒரு தர்க்கரீதியான வளர்ச்சியின் பெறுபேறாக அன்றி காலனித்துவ ஆட்சியுடன் ஒரு திணிப்பாக இடம் பெறுகின்றது.

இலங்கையில் நவீனத்துவம்

இலங்கையில் நவீனத்துவம் எனும் போது அது ஐரோப்பாவில் முகிழ்த்தெழுந்தது போன்று ஒரு தர்க்கரீதியான வளர்ச்சியின் பெறுபேறாக அன்றி காலனித்துவ ஆட்சியுடன் ஒரு திணிப்பாக இடம்பெறுகின்றது. இதனால் ஐரோப்பிய நவீனத்துவத்தின் அனுபவங்கள், அதன் பண்புகள் அவ்வாறே இலங்கைக்கும் ஏற்புடையது என்று எதிர்பார்க்கமுடியாது. இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலைக்கேற்ப ஒரு புது வடிவம் பெறுவதனைக் காண்கின்றோம். நம்மிடையே நவீனமயப்பாடு (Modernisation) நடந்த முறைமை காரணமாகவும் அந்த நவீன விடயங்கள் ஏற்படுத்திய தாக்கங்களின் விளைவாகவும் நவீனத்துவம் (Modernism) என்பது பன்முகப்பட்ட சிக்கற்பாடான ஒரு கருதுகோளாகவே உள்ளது'' (சிவத்தம்பி. கா., 2010:171). இதானல் இலங்கைச் சூழல், அனுபவங்கள் பற்றிய புரிதலோடு இலங்கையின் நவீனத்தவத்தினை அணுகவேண்டி யுள்ளது. இந்த அடிப்படையில் இலங்கையில் நவீனத்துவம் என்ற புரிதலும் மாற்றங்களும் ஏற்பட்ட காலப்பகுதியாக 1800 தொடக்கம் 1980 வரைக்குமான காலகட்டம் இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இக்காலப்பகுதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனித்துவ ஆட்சியினையும் சுதந்திர இலங்கையின் ஆட்சியினையும் கொண்டவையாகும்.

ஐரோப்பிய நவீனமயமாக்கத்துக்கும் இலங்கையின் நவீனமய மாக்கத்திற்குமுள்ள முக்கியமான வேறுபாடு ஐரோப்பிய நவீனமயமாக்கம் நவீனத்துக்கு முந்திய அம்சங்களை களைந்தெறிந்துவிட்டு புதிய சூழமைவுக்கு தேவையானவற்றை முன்னிலைப்படுத்தியது. அதாவது பொருளாதாரத்தைப் பொறுத்தவரை ஐரோப்பிய நவீனத்துவத்தில் நிலப்பிரபுத்துவ விவசாய பொருளாதாரத்துக்குப் பதிலாக கைத்தொழிலை மையமாகக் கொண்ட முதலாளித்துவ பொருளாதார முறைமை ஏற்பட்டிருக்க இங்கு அவ்வாறான தொரு பொருளாதார மாற்றம் இன்றி புதிதாக பெருந்தோட்டத்தொழில் விவசாய முறை அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனால் ஐரோப்பாவைப் போன்று மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களையும் தொழிற்சாலைகளையும் நோக்கி இடம்பெயரத் தொடங்கி வேகமான நகரமயமாக்கம் இடம்பெற்றது போல் இல்லாமல் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டு மலையகப்பகுதிகளில் குடியமர்த்தப்பட்டு பெருந்தோட்டத் தொழிலாளர் வர்க்கமொன்றின் உருவாக்கம் இடம்பெற்றது.

"தேக்கமடைந்த இலங்கையின் பொருளாதாரத்தில் புதிய பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் முதலாளித்துவ வகுப்பு ஒன்று உருவானது. பொருளாதார நிலையிலும் சமூக அந்தஸ்த்திலும் தாழ்நிலையில் இருந்த பலர் மேல் நிலைக்கு வந்தனர். சமூக அமைப்பில் மேல்நிலையில் இருந்தோரும் முதலாளித்துவ தொழில் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டு முதலாளிகளாயினர். இவ்விருவகையினரும் நவீன இலங்கையின் சமூக அரசியல் வாழ்க்கையில் மேலாதிக்கம் பெற்ற சமூகக்குழுவாக எழுச்சி பெற்றனர்" (குமாரி ஜயவர்த்தன, 2009: viii). எழுச்சி பெற்ற இவர்களின் முதலாளித்துவம் கைத் தொழில் மைய முதலாளித்துவமாக அன்றி வணிகவாத முதலாளித்துவமாக (Mercantilism)[1] இருந்ததன் காரணத்தினால் ஐரோப்பிய நவீனத்துவத்தில் ஏற்பட்ட ஓரளவான வாழ்க்கைத்தர சமத்துவத்தைப் போலன்றி கிராமம் / நகரம், பங்களா / லயன் என்கின்ற ஏற்றத்தாழ்வான சமூகநிலையினை உருவாக்கியது. இது சமூகத்தில் நாகரிகம் / அனாகரிகம், புதுமை / பழமை, உயர்ந்தது / தாழ்ந்தது என்கின்ற எதிர்நிலைகளையும் ஏற்படுத்தியது.

காலனித்துவத்தின் அடிப்படையே குறிப்பிட்ட நாடுகளின் வளங்களை தமது நாட்டுக்கு கொண்டு சேர்ப்பதற்காக தமது நாட்டின் சட்டங்களையும் நிர்வாக முறையியல்களையும் நியமங்களையும் ஆளப்படும் நாட்டின்மீது திணித்து ஆளப்படும் நாட்டு மக்களை தன்மயமாக்குவதும் ஆகும். இலங்கை ஒரு காலனித்துவ நாடாக 1505களில் இருந்து போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சியின் கீழ் இருந்தாலும் தன்மயமாக்குதல் செயற்திட்டம் மிக நுட்பமான முறையிலும் காத்திரமாகவும் முன்னெடுக்கப் பட்டது ஆங்கிலேயர் காலப்பகுதியிலாகும். அதிலும் குறிப்பாக 1815களுக்குப்

காலனித்துவத்தின் அடிப்படையே குறிப்பிட்ட நாடுகளின் வளங்களை தமது நாட்டுக்கு கொண்டு சேர்ப்பதற்காக தமது நாட்டின் சட்டங்களையும் நிர்வாக முறையியல் களையும் நியமங்களையும் ஆளப்படும் நாட்டின்மீது திணித்து ஆளப்படும் நாட்டு மக்களை தன்மய மாக்குவதும் ஆகும்.

1. காலனித்துவ அரசுகளால் பின்பற்றப்பட்ட வர்த்தகக் கட்டுப்பாட்டுக் கொள்கையை வணிகவாதம் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேசிய மக்களை தன்மயமாக்குகின்ற செயற்திட்டத்தில் முதலில் மதமே முக்கிய பங்கினை வகித்தது. மதத்துடன் இணைந்த வகையில்தான் கல்வி வந்து சேர்கின்றது.

பின்பே அது உத்வேகம் பெற்றது. இதற்கு ஐரோப்பாவில் எழுந்த நவீனத்துவ போக்குகளும் காரணமாகும். குறிப்பாக அச்சு ஊடகத்தின் வளர்ச்சி, போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், ஜனநாயகம், சோஷலிசம், மனிதத்துவம் தொடர்பான சிந்தனை வளர்ச்சி என்பன காலனித்துவ நாடான இலங்கையினையும் பாதித்தது. இந்தப் பாதிப்புக்களே மரபார்ந்த சுரண்டல் முறையிலிருந்து விடுபட்டு தன்மயமாக்கல் சுரண்டல் முறையினை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையினை காலனித்துவ வாதிகளுக்கு ஏற்படுத்தியது. இந்த தன்மயமாக்கல் செயற்திட்டத்தின் பொருட்டு பின்வரும் நான்கு விடயங்கள் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

1. ஆங்கிலக் கல்வி
2. கிறிஸ்த்தவ மதம்
3. சட்டத்தின் முன் யாவரும் சமம்
4. ஜனநாயக ஆட்சி

சுதேசிய மக்களை தன்மயமாக்குகின்ற செயற்திட்டத்தில் முதலில் மதமே முக்கிய பங்கினை வகித்தது. மதத்துடன் இணைந்த வகையில்தான் கல்வி வந்து சேர்கின்றது. சுதேசிய இலங்கையர்களிடம் ஒரு சுதேசிய கல்விமுறை இருந்தபோதிலும் அது சாதிநிலைப்பட்டதாகவும் உயர் வகுப்பினருக்குரிய தொன்றாகவுமே இருந்தது. இதனால் சாதாரண மக்களுக்கும் சமூகத்தின் விழிம்புநிலையிலுள்ளோருக்கும் கல்வி எட்டாக்கனியாகவே இருந்தது. அத்துடன் சுதேசிய கல்விமுறையினைக் கொண்டு காலனித்துவ ஆட்சியின் நிர்வாகத்தில் பங்குகொள்ளமுடியாத நிலையும் இருந்தது. இந்த சமூகச் சூழ் நிலையினைக் கருத்திற்கொண்ட காலனித்துவ ஆட்சியாளர்கள் கிறிஸ்த்தவ மதத்துக்கு மாறுபவர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கினார்கள். அவற்றில் முக்கியமானது ஆங்கில மொழிக் கல்வியும் அரச உத்தியோகமும் ஆகும். உண்மையில் இவை நாட்டுமக்கள் மொழியறிவுடையவர்களாகவும் கல்வியறிவுடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற அக்கறை எதுவுமின்றி தங்களது நிர்வாக இயந்திரத்துக்கு மலிவான உழைப்பைப் பெறுவதையும் கல்வியினூடாக தங்களுடைய பெருமைகளைப் பேசவும் அவற்றை உயர்ந்தது என்று தூக்கிப்பிடிக்கவும் எமது பெருமைகளை, எமது அறிவை, எமது பண்பாட்டை நாமே இழிவானதாகக் கருதும் மனோபாவத்தை வளர்த்து பண்பாட்டு அடிமைகளாக எம்மை வைத்துக் கொள்வதற்கும் கல்வியை ஒரு கருவியாகக் கொண்டு செயற்படுவதும் நோக்கமாக இருந்திருக்கின்றது. இந்நோக்கத்தின் அடிப்படையிலேயே இலங்கையின் பாடத்திட்டங்களும் வடிவமைக்கப்பட்டன. எந்தவகையிலும் இலங்கையர்களின் சமூகப் பொருளாதார பண்பாட்டு அம்சங்களையும் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டதாக இந்தப் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்படவில்லை. உதாரணத்திற்கு இலங்கையில் வலுவான ஓவிய சிற்பப் பாரம்பரியம் இருந்தும்கூட இலங்கையின் கலைத்திட்டத்தில் அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திலெடுக்கப்படாமல் ஐரோப்பிய வகைமாதிரியினையே இங்கும் கொண்டுவந்தனர்.

காலனித்துவ ஆட்சியாளர்கள் எவ்வாறு ஆங்கிலக் கல்வியின் மூலம் காலனித்துவ ஆட்சிக்குத் தேவையான இலாபகரமான உழைப்பைப் பெற்றார்களோ அதே போல் நவீன ஓவியத்தினை அறிமுகப்படுத்தி பயிற்றுவிப்பதன் ஊடாக காலனித்துவ ஆட்சியில் இலங்கையில் வாழ்ந்த ஐரோப்பிய நிர்வாகிகளுக்கும் கலைரசனையுடையவர்களுக்கும் நிலச்சு வான்தார்களுக்கும் கலைப்பொருள் சேகரிப்பாளர்களின் தேவைக்கும் ரசனைக்குமான கலைப்படைப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதும் இலங்கையின் காட்சிப்புலப் பண்பாட்டினை ஐரோப்பிய மயப்படுத்துவதும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இதனால் இலங்கையின் நவீன ஓவியம் கல்விப்புலம் சார்ந்த ஒன்றாகவே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து சென்றதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

> இலங்கையின் நவீன ஓவியம் கல்விப்புலம் சார்ந்த ஒன்றாகவே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து சென்றதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

''*1846இல்* Andrew Nicholl *கொழும்பு அகடமியில் வடிவமைப்புப் பிரிவுக்குப்* (School of Design) *பொறுப்பாக இருந்தபோது ஓவியத்தினை நகர் மையமான கலைக்கூடக் கலையாகக்* (studio art) *கொண்டு வந்தார். அதே காலப்பகுதியில் பிரெஞ் ஓவியரான* Hippolyte Sylvaf *பிரதிமை ஓவியங்களை* (portrait painting) *அறிமுகப்படுத்தினார்*'' (Sarath Chandrajeeva (quoted), 2012: 23-24). இவை இலங்கை ஓவிய முறையிலும் அதன் காண்பியத்திலும் பெருந்தாக்கத்தினைச் செலுத்தின.

இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக ஓவிய அமைப்புக்களின் உருவாக்கமும் அவற்றினுடைய பணிகளுமாக அமைவதனைக் காணலாம். இந்த அமைப்புகள்கூட ஆரம்பத்தில் பிரிட்டிஸ்சாரை முக்கிய உறுப்பினர்களாகக் கொண்டும் அவர்களின் அனுசரணையுடனும் ஒத்தாசைகளுடனுமே இயங்கியிருப்பதை அறியமுடிகின்றது.

''*1880களின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு ஓவியக் கழகம்* (Colombo Drawing Club or Portfolio Sketch Club) *நவீன ஓவியச் செயற்பாட்டின் முன்னோடி அமைப்பாக இருக்கின்றது. இதன் அங்கத்தவர்கள் மாதம் ஒரு முறை கூடி தம்மால் படைக்கப்பட்ட படைப்புக்களை அறிமுகம் செய்து விவாதங்களை நடாத்தி ஒவ்வொரு மாதமும் ஒரு படைப்புச் சிறந்தது என தேர்ந்தெடுக்கப்படும் முறையினைக் கொண்டிருந்தார்கள். இவர்களுடைய முதலாவது கண்காட்சி விக்டோரியா மகாராணியின் வைரவிழாவினை முன்னிட்டு 1887 ஓகஸ்ட் 16 முதல் நான்கு நாட்கள் இடம் பெற்றது*'' (Neville Weereratne,1993:12). இது இலங்கை மத்தியதர மக்களுக்கு புதிய ஒரு ஓவிய உலகைக் காட்டியது. பெரும்பாலான இலங்கையர்கள் இதனால் கவரப்பட்டனர்.

''*இந்த அமைப்பு 10.12.1891 இலங்கை கலைச் சங்கமாக உருவெடுத்தது. இதன் முதலாவது தலைவராக* Sir Edward Noel Walker *எனும் ஐரோப்பியரே இருந்தார். இதனுடைய ஆரம்பக் கண்காட்சியினை 07.12.1892 அன்று அப்போதைய ஆளுநராக இருந்த* Sir Arthur Havelock *அவர்கள் வைபவரீதியாக*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்து வைத்தார்'' (மேலது). இதன் உத்தியோகபூர்வ இயங்கு தளம் அரசின் ஆதரவுடன் 1893 இல் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் உறுப்பினர்களாக கேற் முதலியார் A.C.G.S. அமரசேகர, கேற் முதலியார் ரியுட்டர் ராஜபக்ச, J.D.A. பெரேரா, டேவிட் பெயின்ரர் போன்றோர் அங்கம் வகித்தனர். இவர்களுடைய ஓவியப்பாணியாக விக்டோரியா அகடமிப் பாணியே இருந்தது. அமரசேகராவின் Devil Dancer's Daughter எனும் ஓவியம் அவரது படைப்புகளினதும் இந்தப்பாணியின் வெளிப்பாட்டினதும் முக்கிய ஒரு உதாரணமாகும். ''இலங்கை கலைச் சங்க உறுப்பினர்கள் இலங்கை கருப்பொருட்களை விக்டோரியா இயற் பண்பின் ஊடாக வெளிப்படுத்துவதில் மிகுந்த அக்கறையும் பற்றுறுதியும் கொண்டிருந்தனர். இதற்குக் காரணம் சுதேசிய கலைகளில் தாழ்வு மனப்பான்மையும் விக்டோரியாப் பாணியில் வரைதலை ஒரு உயர்ந்த அங்கீகாரமாக எண்ணிக்கொண்டிருந்தமையுமாகும்'' (சிவரெத்தினம், சு., 2011:22). இதனால் மேலைத்தேய ஓவிய நுட்பங்களும் பாணிகளும் இலங்கையினுள் அறிமுகமாவதற்கு இது அடித்தளமாக அமைந்தது.

''இலங்கையின் ஓவியக் கல்வியினை ஆரம்பிப்பதற்காக முதன்முதலாக Alfred Bartiam என்பவரை பிரித்தானிய அரசு அனுப்பிவைத்தது. அவர் 1902ஆம் ஆண்டு மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் ஓவியப் பரிசோதகராக கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்'' (Sarath Chandrajeeva, 2012: 24). இவரும் விக்டோரியா இயற்பண்புவாதத்துக்கு மாற்றாக எதையும் செய்ததாக அறியமுடியவில்லை. இதன் பின்பு பிரித்தானிய ஓவியரான Charles Freegrove Winzer என்பவர் கல்வித் திணைக்களத்தில் பிரதான கலைப் பரிசோதகராக 1920ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் பிரான்சில் இருந்தபோது பிக்காஷோ, கென்றி மத்தீஸ் போன்றவர் களுடைய கலைப்பாணியின் செல்வாக்குக்கு உட்பட்டவராக இருந்ததோடு மனப்பதிவு ஓவியர்களான Pissaro, Manet, Renoir, Degas, Cezanne, Gauguin, Van Gogh போன்ற ஓவியர்களை அறிமுகப்படுத்தவும் முனைந்ததோடு இலங்கை உயர்வர்க்கத்தினர் (elites) தமது நாட்டின் ஓவிய மரபின் செழுமை, தரம், அழகியல் வெளிப்பாடு என்பவை பற்றி தாழ்வுமனப்பான்மை கொண்டிருந்த நிலையில் அதற்கெதிராக அவற்றைப் போற்றுபவராகவும் இளம் சந்ததியினர் அவற்றைப் பாதுகாத்து கற்று பின்பற்ற வேண்டும் என்ற அவாக் கொண்டவராகவும் இருந்திருக்கின்றார் என்பதை அவருடைய எழுத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கை கலைச் சங்க (Ceylon Society of Arts) உறுப்பினர்கள் விக்டோரிய இயற்பண்புப் (Victorian naturalism) பாணியிலான ஓவியங்களையே நவீன ஓவியங்கள் என்ற அடிப்படையில் அப்பாணிக்கு மாறான ஓவியங்களை நிராகரித்தும் செயற்பட்டனர். ''தெரணியாகல, ஜோர்ஜ் கீற் போன்ற ஓவியர்கள் தங்களுடைய படைப்புகளை இலங்கை கலைச் சங்கத்தினூடாக காட்சிப் படுத்துவதற்கு பலமுறை முயற்சித்த போதும் அவை நிராகரிக்கப்பட்டன'' (Neville Weereratne, 1993:15).

இலங்கை கலைச் சங்க (Ceylon Society of Arts) உறுப்பினர்கள் விக்டோரிய இயற்பண்புப் (Victorian naturalism) பாணியிலான ஓவியங்களையே நவீன ஓவியங்கள் என்ற அடிப்படையில் அப்பாணிக்கு மாறான ஓவியங்களை நிராகரித்தும் செயற்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் இந்த ஓவிய நோக்குக் காரணமாக, படைப்பாற்றலையும் உலகில் ஏற்பட்ட பாணிமாற்றங்களையும் உட்கொண்டு புதிய போக்குகளை இலங்கை ஓவிய உலகுக்கு அறிமுகப்படுத்த முனைந்த இளம் ஓவியர்களுக்கு ஏமாற்றமளிப்பதாகவே இருந்தது. இதனால் இலங்கை கலைச் சங்கத்துக்கு (Ceylon Society of Arts) மாற்றாக ஒரு புதிய அமைப்பின் தேவை பற்றி அக்கால இளம் ஓவியர்கள் சிந்தித்தனர்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று C.F.Winzer இலங்கையில் ஒரு குறிப்பிட்ட குழுவினர் நவீனம் என்ற கருத்தாக்கத்தில் நலிவடைந்ததும் காலாவாதியாகிப் போனதும் இலங்கைக்கு பொருத்தமற்றதுமான விக்டோரிய இயற்பண்புவாத (Victorian naturalism) ஓவியப் பாணியிலிருந்து இலங்கைக் கலைஞர்களை விடுவித்து இலங்கைக்கேயுரிய நவீன மரபொன்றை உருவாக்குவதன் அவசியத்தினை உணர்ந்து பணியாற்றியதோடு இளம் ஓவியர்களை அவ்வாறான மரபுக்கு ஆற்றுப்படுத்தவும் செய்தார்.

இலங்கை கலைச் சங்கத்தினுடைய செயற்பாடுகள், Winzer உடைய உத்வேகம் என்பவை காரணமாக ஐரோப்பாவில் கல்வி கற்று அங்குள்ள நவீன ஓவியங்களுக்குப் பரிச்சயமாகி இருந்த புகைப்படக் கலைஞரான Lionel Wendt இலங்கையில் தனித்துவ பண்புகளுடன் விளங்கிய ஓவியர்களை ஒன்றுதிரட்டி 1943ஆம் ஆண்டு ''குழு 43'' எனும் அமைப்பினை ஆரம்பித்தார். ''இதன் உறுப்பினர்களாக ஐவன் பீரீஸ் (Ivan Peries), கிளசன், (Claessen), லெஸ்ரர் ஜேம்ஸ் பீரீஸ் (Lester James Peries), ஓம்றி கொலெட் (Aubrey Collette), ஜோர்ஜ் கிளசன் (George Claessen), றிசட் ஹப்றில் (Rechard Gabriel), ஹரீஸ் பீரிஸ் (Harry Pieris), W.J. வீலிங் (W.J.Beling), ராப் கிளசன் (Ralph Claessen), ஜஸ்ரின் தெரணியாகல (Justin Daraniyagala), எஸ்.ஆர். கனகசபை (S.R.Kanakasabai), ஜோர்ஜ் கீற் (George Kyet), மஞ்சுசிறி தேரர் (Manjusri Thero) போன்றோர் அங்கம் வகித்தனர்'' (Neville Weereratne, 1993:18).

இவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் கல்வி கற்றதுடன் பல்வேறுபட்ட கலைப் பாணிகளை அறிந்திருந்ததுடன் தாங்களும் விரைவான மாற்றத்துக்கு உட்படும் மனோபாவம் உடையவர்களாகவும் அவற்றை இலங்கையில் அறிமுகப்படுத்துவதில் ஆர்வமுள்ளவர்களாகவும் இருந்தனர். இவர்களுடைய செயற்பாடுகள் இலங்கையின் நவீனத்துவத்தினை மற்றொரு தளத்துக்கு இட்டுச் சென்றதுடன் பல்வேறுபட்ட கலைக்கொள்கைகளின் சங்கமிப்பாகவும் இவர்களுடைய கண்காட்சிகள் அமையலாயிற்று.

''குழு 43'' ஓவியர்களின் கண்காட்சிகளும் செயற்பாடுகளும் தென்னிலங் கையில் மட்டும் மையம் கொள்ளாது வடகிழக்குத் தமிழர்களிடமும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. குறிப்பாக இதன் உறுப்பினராக இருந்து ''குழு 43'' ஓவியக் கண்காட்சிகளில் கலந்து கொண்டவரான எஸ்.ஆர்.கனகசபை என்பவர் மூலம் நவீன ஓவியப் பாரம்பரியம் தமிழர்களிடத்தும் ஆரம்ப மாகியது.

''குழு 43'' ஓவியர்களின் கண்காட்சிகளும் செயற்பாடுகளும் தென்னிலங் கையில் மட்டும் மையம் கொள்ளாது வடகிழக்குத் தமிழர்களிடமும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. குறிப்பாக இதன் உறுப்பினராக இருந்து ''குழு 43'' ஓவியக் கண்காட்சிகளில் கலந்து கொண்டவரான எஸ்.ஆர். கனக சபை என்பவர் மூலம் நவீன ஓவியப் பாரம்பரியம் தமிழர்களிடத்தும் ஆரம்பமாகியது.

எஸ்.ஆர்.கனகசபை ''குழு 43'' இன் இயங்கு தளத்தை தீர்மானித்தவாரன C.F.Winzer மேல் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகார்த்தமாக 'Winzer Art Club' என்ற ஓவியர் கழகத்தை 1938 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்துச் செயற்பட்டார். இக்கழகத்தின் தோற்றத்துடன் ஈழத்துத் தமிழர் ஓவியக்கலை பழைய மரபுகளிலிருந்து விடுபட்டு கட்புல அடிப்படையில் ஐரோப்பிய அழகியல் உணர்வை மையப்படுத்தி ஓவியம் வரைதல் முனைப்புப் பெற்றது. 'Winzer Art Club' இயங்கிய காலம் யாழ்ப்பாண ஓவிய வரலாற்றில் ஒரு முக்கியமான காலமாகக் குறிப்பிடப்படுகின்றது.

1940 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் திகதி 'Winzer Art Club' ஏற்பாடு செய்த ஓவியக் கண்காட்சி பற்றியதொரு விமர்சனம் பின்வருமாறு வெளிவந்தது. ''இதுவே யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணத்தவர் ஒழுங்கு செய்த முதன்முதலான ஓவியக்காட்சி. ஓவியப்பிரதிகளின்றி மூல ஓவியத்தைக் காண்பது இலகு வானதன்று. இங்கு அதைக் காணக்கூடியதாயிருந்தது. ஏறக்குறைய 300 படங்கள் வரைதலும் ஓவியமுமாக காட்சிக்கிருந்தன. ஒரு வருட காலத்தில் கழகத்தார் இவ்வளவு திருத்தம் பெற்றிருப்பது மெச்சப்படத்தக்கதே. பென்சில் வேலை, சோக்கலர் வேலை, நீர்வர்ண வேலை, தைலவர்ண வேலை, களிமண் வேலை ஆகிய வேலைகள் வைக்கப்பட்டு இருந்தன'' (கிருஷ்ணராஜா, சோ., 1997: 6).

நீண்டகாலமாக புதிய நுட்பங்களுடனும் கருத்துக்களுடனும் சிறப்பாகச் செயற்பட்ட 'Winzer Art Club' 1955 இல் எஸ்.ஆர்.கனகசபையுடன் முடிவுக்கு வந்தது.

எஸ்.ஆர்.கே யின் பின் யாழ்ப்பாண மக்களிடம் ஓவியக்கலையினை ஒரு கலையாக எடுத்துச் செல்லக்கூடிய ஒரு அமைப்பு இல்லாததை உணர்ந்த இளைய தலைமுறையினர் விடுமுறைக்கால ஓவியர் கழகம் ('Holiday Painters Group') என்னும் அமைப்பை ஆரம்பித்தனர். இதனை ஆரம்பித்தவர்கள் இலங்கை கலைக்கழகத்தைச் சேர்ந்த J.D.A.Perera, 1953இல் கொழும்பில் ஆரம்பித்த அரசாங்க நுண்கலைக் கல்லூரியில் (Government School of Fine Arts) பயிற்சி பெற்ற மாற்கு, எம்.எஸ்.கந்தையா, க. செல்வநாதன், சி. பொன்னம்பலம் போன்றவர்களாவர்.

எஸ்.ஆர்.கே யின் பின் யாழ்ப்பாண மக்களிடம் ஓவியக் கலையினை ஒரு கலையாக எடுத்துச் செல்லக்கூடிய ஒரு அமைப்பு இல்லாததை உணர்ந்த இளைய தலைமுறையினர் விடுமுறைக் கால ஓவியர் கழகம் ('Holiday Painters Group') என்னும் அமைப்பை ஆரம்பித்தனர்.

இக்கழகம் 1962, 1963 ஆம் ஆண்டுகளில் யாழ். மாநகரசபை மண்டபத்தில் சிற்ப, ஓவியக் காட்சிகளை நடாத்தியதோடு ஓவியம், சிற்பம் ஆகிய கலை களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு சித்திர, சிற்ப வகுப்புக்களையும் அரசினர் கலைக்கல்லூரிப் புகுமுக வகுப்பையும் நடாத்தி வந்ததாக அறியமுடிகிறது. மாற்கு, எம்.எஸ்.கந்தையா, சி.பொன்னம்பலம் ஆகியோர் பெருந்தொகையான மாணவர்களிற்கு சித்திர, சிற்ப வகுப்புக்களை நடாத்தி ஓவியம், சிற்பம் தொடர்பாக இளைய தலைமுறையினருக்கு ஆர்வத்தையும் நாட்டத்தையும் ஏற்படுத்துவதற்கு கடுமையாக உழைத்தனர் (சிவரெத்தினம், சு., 2011:45).

'Winzer Art Club','Holiday Painters Group' என்பன ஈழத்துத்தமிழ் ஓவியர்களிடையே நவினத்துவம் வளர்வதற்கான அடிப்படைகளை வழங்குகின்ற அமைப்புக்களாகவும் நவீனத்துவ ஓவியச் செயற்பாட்டினை முன்கொண்டு செல்கின்ற அணியாகவும் தொழில்பட்டன எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'Winzer Art Club' உடன் தொடர்புடையவர்களாயிருந்த அதன் ஸ்தாபகர் எஸ்.ஆர்.கே. அவருடைய வழிகாட்டலில் ஓவியம் பயின்ற அ.இராசையா, எம்.எஸ்.கந்தையா, கே.கனகசபாபதி, ஐ.நடராசா, க. இராசரெத்தினம், இ.இராசையா, சானா போன்றோரும் 'Holiday Painters Group' உடன் தொடர்புடையவர்களாயிருந்த மாற்கு, சி. பொன்னம்பலம், எம்.எஸ். கந்தையா போன்றோரும் 1980கள் வரை நவீனத்துவச் செயற்பாட்டில் காத்திரமாகச் செயற்பட்டனர். இவர்களுடைய ஓவியச் செயற்பாடுகளும் நவீனத்துவ கலைக்கொள்கைகளான மனப்பதிவுவாதம், கியுபிசம், போன்ற கலைக் கொள்கைகளின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தன.

இவ்வாறு காலனித்துவ ஆட்சியின் போதும் அதற்குப் பின்பும்கூட எமது நவீன ஓவியம் கல்லூரிகள் பாடசாலைகளினூடும் அவற்றில் கடமைபுரிந்தவர்களினூடாகவுமே முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்த முன்னெடுப்பில் ''மேற்குலகில் உள்ளது போல், இங்கும் கடந்த காலத்திலிருந்து தளவேறுபாட்டு விடுபாடு'' ஒன்று ஏற்பட்டுள்ளது என்பது உண்மையே. ஆனால் அந்த ''விடுபாடுகள், அறுத்தெறிப்புகள்'' (tearing - off) யாவை, அவற்றின் சமூக உட்கிடக்கை யாது என்பதை நோக்கல் வேண்டும்'' *(சிவத்தம்பி. கா, 2010:168).*

இங்கு ஏற்பட்ட தளவேறுபாடு எனும்போது நவீனத்துவத்தின் பேறான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக உற்பத்திப் பொருட்களினால் ஏற்பட்ட விடுபாடு, உற்பத்திப் பொருட்களின் பாவனையினால் வெளிப்படுத்துகை முறையில் ஏற்பட்ட விடுபாடு எனும் இரு அம்சங்கள் முக்கியம் பெறுகின்றன.

இங்கு ஏற்பட்ட தளவேறுபாடு எனும்போது நவீனத்துவத்தின் பேறான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக உற்பத்திப் பொருட்களினால் ஏற்பட்ட விடுபாடு, உற்பத்திப் பொருட்களின் பாவனையினால் வெளிப் படுத்துகை முறையில் ஏற்பட்ட விடுபாடு எனும் இரு அம்சங்கள் முக்கியம் பெறுகின்றன.

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக உற்பத்திப் பொருட்களினால் ஏற்பட்ட விடுபாடு எனும் போது, பாரம்பரிய வர்ண மூலங்களான நிலக்கனிமங்கள், தாவரச்சாறுகள் என்பன விடுபட்டு இராசாயன வர்ணங்கள் பயன்பாட்டுக்கு வருகின்றன. 1840இல் பலவகைப்பட்ட வர்ணப்பசைகள் (colour tubes) உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் மூலம் இலகுவான உணர்வு வெளிப்பாட்டையும் படைப்பின் வேகத்தையும் அதிகரித்ததோடு சுவரிலிருந்து கன்வஸ்சுக்கு மாறிச்செல்லவேண்டியதன் அவசியத்தையும் தீர்மானித்தது.

தூரிகையினைப் பொறுத்தவரை தாவரங்களின் நார், விலங்குகளின் உரோமம் என்பவற்றுக்றுக்குப் பதிலாக நுட்பமாக பல்வேறு தரத்திலும் தன்மையிலும் தயாரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் தூரிகைகள் பயன்பாட்டுக்கு வருகின்றன. ஓவியத்தளமாக பாறை, சுவர், துணி, ஓலை எனும் இயற்கை மூலப்பொருள்களிலிருந்து விடுபட்டு கன்வஸ், காகிதம், கார்ட்போட், கண்ணாடி ஆகிய ஓவியத்தளங்களும் அவற்றை வைத்து வரையும் நிலச் சட்டம் (easel) என்பனவும் புதிய ஊடக மரபாக அறிமுகமாகியது.

இந்த ஊடக மாற்றம் கலைஞர்களின் வெளிப்பாட்டிலும் மாற்றத்தைக் கொண்டுவந்தது. வர்ணத்தினைப் பிரயோகிக்கும் தன்மை, தூரிகைப் பாவனைமுறை, உருவத்தொகுப்பு, ஒளிநிழல்படுத்துகை நுட்பம் என்பவற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கலைஞர்கள் ஒவ்வொருவரும் தனித்தனித் தன்மைகளைக் கடைப்பிடித்தனர். இப்போக்குகள் ஐரோப்பிய உலகுக்கு பழமை எனினும் இலங்கைக்கு புதிய விடயங்களாகவே இருந்தன.

கலைஞர்களிடத்தில் ஏற்பட்ட மாற்றம் போன்று இலங்கையில் இதன் ரசிப்புத் தன்மையிலும் மாற்றம் ஏற்படுவதைக் காணலாம். விகாரைகளிலும் கோயில்களிலும் சுவரோவியமாக மதக்கருத்துக்களை ரசித்து வந்த மக்கள் கலைக்கூடங்களுக்குச் சென்று ஓவியத்தை ஒரு தனித்த கலை வடிவமாக அது தரும் அழகியல் இன்பத்தை ரசிப்பவர்களாக மாறினர். இதனால் ஓவியங்களை பணம் கொடுத்து வாங்கி அவற்றை தங்களுடைய வரவேற்பறைகளின் சுவர்களில் தொங்கவிட்டு வீட்டினை அழகுபடுத்தும் ஒரு பண்பாடும் உருவாகியது.

கிறிஸ்த்தவ மதத்துக்குள்ளாலும் ஆங்கிலக் கல்விக்கூடாகவும் வெளிவந்தவர்கள் சமூகத்தில் ஒரு புது வடிவமாக உருப்பெற்றார்கள். இவர்களுக்கு சுதேசிய பாசை பற்றிய அறிவும் இல்லாது அதன் பண்பாடு களுக்குள்ளும் நிற்காமல் சுதேசிய மொழிகளையும் அப்பண்பாடுகளையும் இழிவானதாகவும் நாகரிகமற்றதாயும் நோக்கியதுடன் மேலைத்தேய மொழி, பழக்கவழக்கங்கள் மேலானதாகவும் நாகரிகமனதாகவும் கருதினார்கள். அவர்களுடைய ஆடைகள், வீட்டுத்தளபாடங்கள், வீட்டுகட்டுமானங்கள் மற்றும் விருப்புக்கள் என்பனவெல்லாம் ஆங்கிலேய வகைமாதிரிகளை பிரதிபண்ணுவதாகவே இருந்தன. ''இதுவரை பின்பற்றிய, பேணிவந்த பாரம்பரிய கலை ஆக்க முறைகளிலிருந்தும் அவை பற்றிய கருத்துக் களிலிருந்தும் விடுபட்டு மேற்குலக கலை ஆக்க முறைகளையும் அது தொடர்பான கருத்துக்களையும் பின்பற்ற ஆரம்பித்தனர். இந்தப் பின்பற்றுகையில் மேற்குலகில் நவீனத்துவத்துக்கு முந்தைய மறுமலர்ச்சி கால ஓவியப்பாணிகள்கூட இங்கு நவீன ஓவியமாகக் கொள்ளப்பட்டன'' (சிவரெத்தினம். சு., 2011:20). உதாரணமாக இலங்கையின் நவீன ஓவிய முன்னோடிகளில் ஒருவரான David Paynter கண்டி திரித்துவக் கல்லூரியில் இத்தாலிய மறுமலர்ச்சிகால ஓவியத்தாக்கத்துடன் இலங்கை வகை மாதிரிகளைக் கொண்டு வரையப்பட்ட ஓவியங்கள் நவீன ஓவியங்களாகவே பார்க்கப்பட்டன.

''இங்கும் மேற்குலகில் ஏற்பட்டது போன்ற பார்வை வித்தியாசங்கள், எடுத்துரைப்பு வேறுபாடுகள் ஏற்பட்டனதான். ஆனால் அவற்றின் ''தரம்'' (quality) வேறுபடுகின்றது. காலனித்துவத்தினூடேயும் இங்கு ஒரு சனநாயக மயப்பாடும் (Democratisation) சமயச் சார்பின்மையும் (secularisation) ஏற்படுகின்றன. இவை ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக்காலம் முதலே, பிரெஞ்சுப் புரட்சிக் காலம் முதலிருந்தே வந்தவை. எமக்கு நவீனத்துடனேயே வருகின்றன'' (சிவத்தம்பி. கா. 2010:170).

இதனால், மேற்கத்திய நவீனத்தில் முக்கியப்படாத அங்கு காலாவதி யாகிப் போன சில விடயங்கள் இலங்கையில் நவீனமாக கொள்ளப்பட்டன. New Statesman பத்திரிகையின் கலை விமர்சகர் John Berger 1952இல்

விகாரைகளிலும் கோயில்களிலும் சுவரோவியமாக மதக் கருத்துக்களை ரசித்து வந்த மக்கள் கலைக் கூடங்களுக்கச் சென்று ஓவியத்தை ஒரு தனித்த கலை வடிவமாக அது தரும் அழகியல் இன்பத்தை ரசிப்பவர்களாக மாறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டனில் நடந்த ஓவியக் கண்காட்சி தொடர்பாக பின்வருமாறு எழுதினார்: ''இந்த ஓவியங்கள் 19ஆம் நூற்றாண்டு ஆங்கில மரபிலிருந்து அவ்வாறே பெறப்பட்டவையாகும். இவை சலிப்புட்டுவனவாகவும் ஊக்கத்தைத் தராததாகவும் காணப்படுகின்றன'' (Neville Weereratne. 1993:13) என இலங்கையின் நவீனத்துவத்தினை விமர்சிப்பதிலிருந்து இது புலனாகின்றது.

இவ்வாறு காலாவதியாகிப்போன பண்புகளைக் கொண்டதாக இருந்த எமது நவீனத்துவம் அடுத்த கட்ட வளர்ச்சியில் இலங்கைக்கேயுரிய நவீனத்துவமாகவும் முகிழ்ப்புப் பெறுவதைக் காணலாம்.

''சாதி மட்டுமன்றி ஏனைய அடையாளங்களும் முதலாளி வகுப்பினருக்கு முக்கியத்துவம் உடைய விடயங்களாயின. அவ்வகுப்பின் ஆண்களிற்கும், பெண்களிற்கும் ''நான் யார்''? என்ற கேள்வி முக்கியமாயிற்று.

என்னிடம் பணம் உண்டு, ஆனால் நான் ''தாழ்ந்த'' சாதி.

என்னுடைய சமயம் மூடநம்பிக்கை என்ற பழிப்புக்குரியது.

என்னுடைய மொழிக்கு கலாசாரத்திற்கு மதிப்பு இல்லை, அவை இகழ்ச்சிக்குரியதாகின்றன.

எனது பெண்பிள்ளைகள் எழுதவாசிக்கத் தெரியாத அறிவிலிகள்.

முதலாளித்துவ வகுப்பினரை வாட்டிய பிரச்சினைகள் இவை. இதனால் அவர்கள் மத்தியில் இருந்து தோன்றியவர்கள் தங்களுக்கு ''உயர்'' சாதி அந்தஸ்த்து இருந்தது என்பதை கண்டுபிடித்து நிறுவினார்கள். தங்கள் சமயத்தின் மறுமலர்ச்சிக்கு உழைத்தார்கள். அது கிறிஸ்த்தவத்தைவிட மேலானது என்று கூறினார்கள். தங்கள் இனத்தவர்களின் கடந்தகால வரலாற்றையும் இனத்தின் தோற்ற வரலாறுகளையும் கதைகளையும் எடுத்துக் கூறினர். மறைந்த ''பொற்காலம்'' பற்றிய கதைகளைக் கூறினர். தங்கள் பெண்களின் நிலையை உயர்த்த வேண்டும் என்று உழைத்தனர். சமய மறுமலர்ச்சி இயக்கங்களை தலைமைதாங்கி நடத்தியதையும் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவி நவீன கல்வி முறையை விருத்தி செய்ததையும் முதலாளி வர்க்கத்தின் அடையாளம் தொடர்பான உணர்வின் வெளிப்பாடுகள் எனலாம்'' (குமாரி ஜயவர்த்தன, 2009: 15). இந்த அடையாள உணர்வு சுதேசிய பண்பாட்டு மீட்டுருவாக்கத்தினையும் மதமீட்டுருவாக்கத்தினையும் வற்புறுத்தியதோடு குறிப்பாக மதரீதியான செயற்பாடுகளை மிகக் காத்திரமாக முன்னெடுத்தது. தமிழில் ஆறுமுகநாவலரும் சிங்களத்தில் அநாகரிக தர்மபாலாவும் இவ்விடத்தில் முக்கியமானவர்களாகும். கிறிஸ்தவ மிசனறிகளுக்கு சமாந்திரமாக பௌத்த, இந்து நிறுவனங்களும் அம்மதத் தலைவர்களும் கல்வியை கீழ்மட்ட நிலைவரைக்கும் கொண்டு செல்வதற்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்கள். இந்நடவடிக்கைகளின் விளைவால் காலனித்துவ ஆட்சியாளர்கள் எதிர்பார்க்காதவகையில் ஒரு வேறுபட்ட சமூக அசைவியக்கம் ஏற்பட்டது. அதாவது முறைசார் கல்வியினைக் கற்று அரச உத்தியோகம் பார்க்கின்ற

இதனால், மேற்கத்திய நவீனத்தில் முக்கியப்படாத அங்கு காலாவதி யாகிப் போன சில விடயங்கள் இலங்கையில் நவீனமாக கொள்ளப் பட்டன.

இவ்வாறு காலா வதியாகிப்போன பண்புகளைக் கொண்டதாக இருந்த எமது நவீனத்துவம் அடுத்த கட்ட வளர்ச்சியில் இலங்கைக் கேயுரிய நவீனத்துவ மாகவும் முகிழ்ப்புப் பெறுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புதிய மத்தியதரவர்க்கம் உருவாகியது. இவர்கள் மொழிப்பற்றும் பண்பாட்டுணர்வும் மிக்கவர்களாக மேற்கிளம்பினர். இதனால் ''நமது நவீனத்துவத்தில் நமது பாரம்பரிய மீள்நோக்கும் ஓர் அம்சமாகிறது. இந்தப் பாரம்பரிய மீட்புணர்வு காரணமாக நாம் நமது பழமைகளுக்கு ஒரு புதிய கட்டமைப்புக் கொடுத்து அவற்றை மீளுருவப்படுத்தினோம்'' (சிவத்தம்பி, கா., 2010:170). ஆறுமுகநாவலரின் சைவமும் தமிழும், அநாகரிய தர்மபாலாவின் பௌத்த அடிப்படைகள் எல்லாம் அடையாள மீட்புணர்வின் வடிவங்களாயின. இது ஐரோப்பிய நவீனத்துவத்துக்கு முரணான ஒரு போக்காகும். அதாவது ஐரோப்பிய நவீனத்துவத்தில் மதநீக்கம் இடம்பெற இங்கு மதமீட்டுருவாக்கம் இடம்பெறுவதைக் காண்கின்றோம். இந்தப் பின்னணியில்தான் ஜோர்ஜ் கீற் இலங்கைக்கான நவீனத்துவத்துடன் மேற்கிளம்புகின்றார். பௌத்த ஜாதகக் கதைகளைக் கொண்ட அவருடைய கோதாமி விகாரை ஓவியங்கள் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கனவாகும். அத்துடன் ராதாகிருஷ்ணா ஐதீகத்தையும், மகாபாரதம், இராமாயாணம் போன்ற இதிகாசங்களையும் தனது படைப்புக்கான கருத்தளங்களாகத் தேர்வு செய்து கொள்கின்றார். ''ஐதீகக் கதைகள், காட்சிகள் நீண்ட ஒரு வரலாற்றுக் கதையை அல்லது மக்கள் நிலைப்பட்ட ஒரு அனுபவத்தை மிகச் சுருக்கமாக மக்கள் மனதில் பதியவைப்பவையாகும். கீற் இந்தச் சாராம்சத்தை எடுத்துக்கொண்டு நாளாந்த வாழ்க்கையின் அனுபவங்களைத் திரிபுபடுத்தி, சுருக்கி, குறியீடுகளாக்கிப் படைக்கின்றார். இந்தக் குறியீடுகள் அவற்றினுடைய அர்த்தத்தினை ஐதீகத்திலிருந்து பெறுகின்றன. மொத்தப் படைப்பும் அவற்றுடைய அழகினை மக்களின் வாழ்நிலையிலிருந்து பெறுகின்றது. அவற்றின் வர்ணம், ரேகை, வடிவமைப்பு என்பனவெல்லாம் அம்மக்களுக்குப் புதியது என்றில்லாது அவை அவர்களுடைய வாழ்க்கையுடன் இரண்டறக்கலந்த ஒன்றாக அமைகின்றன. இதனால் குறித்த விடயம் பன்முகப்பாட்டுத்தன்மை கொண்ட ஒன்றாகவும் அமைகிறது. கீற்றினுடைய படைப்புகளில் இப்பன்முகப்பாட்டுத் தன்மைகளைக் காணமுடியும்'' (சிவரெத்தினம், சு., 2011:39).

மாற்கு தமிழர் வாழ்வின் அன்றாடப் பிரச்சினைகளையும் அந்த வாழ்வியலையும் கலைத்துவ ஆளுமையுடன் வெளிப்படுத்திருந்த போதும் அந்த வெளிப்பாடு ஜோர்ஜ் கீற்றளவு தமிழர்களின் அடையாளம் சார்ந்த தாகவோ அல்லது இலங்கையின் அடையாளம் சார்ந்ததாகவோ அமையவில்லை. மாற்குவின் ஓவியங்களுக்குள் மேலைத்தேய, இந்திய ஓவியர்களின் தாக்கத்தினையே மிகுதியாக அவதானிக்க முடிகின்றது. இதற்குக் காரணம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று காலனித்துவ கல்விப் பாரம்பரியத்தினூடாகவே நவீன ஓவியம் எமக்கு கையளிக்கப்பட்டமை யினாலாகும்.

மாற்கு தமிழர் வாழ்வின் அன்றாடப் பிரச்சினை களையும் அந்த வாழ்வியலையும் கலைத்துவ ஆளுமையுடன் வெளிப் படுத்திருந்த போதும் அந்த வெளிப்பாடு ஜோர்ஜ் கீற்றளவு தமிழர்களின் அடையாளம் சார்ந்த தாகவோ அல்லது இலங்கையின் அடையாளம் சார்ந்ததாகவோ அமையவில்லை.

எனவே முடிவாக நவீனத்துவம் மேலைத்தேயத்தில் தர்க்கரீதியான சமூக வளர்ச்சிப்போக்காக இருக்க இலங்கையில் காலனித்துவத்தின் திணிப்பாக அதன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு ஊடகமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தேறியதனால் ஓவியத்தினை சமூகத்தினடியாக அன்றி கல்விப்புலம் சார்ந்த ஒன்றாக வளர்த்து அறுவடைகளைப் பெறவேண்டியிருந்திருக்கிறது. இலங்கைத் தேசிய உணர்வு, அடையாள மீட்பு என்பன ஓவியத்தில் பெரிதளவான ஒரு இயக்கமாக எழமுடியாமல் போனாலும் ஜோர்ஜ் கீற் போன்றவர்களினால் இலங்கைக்கான ஒரு நவீனத்துவப் போக்கினை அடையாளப்படுத்துக் கூடியதாக இருந்திருக்கிறது. இதே போன்றே தென்னிந்திய நவீனத்துவமும் தென்னிந்திய பண்பாட்டினடியாக தன்னை அடையாளப்படுத்துவதைக் காணலாம். அவர்களின் நவீனத்துவத்தில் பாரம்பரிய சுடுமண் சிற்பங்களையும் கருங்கற் சிற்பங்களையும் சுவரோவிய மரபுகளையும் அடையாளம் காணமுடிகிறது. இவற்றை களைந்தெறிந்துவிட்டு இரவல் வாங்கி வந்தவர்களாக அங்குள்ள நவீத்துவவாதிகள் காணப்படவில்லை. இதற்கு உதாரணமாக ஆதிமூலம் அவர்களைக் குறிப்பிடமுடியும்.

இலங்கைத் தேசிய உணர்வு, அடையாள மீட்பு என்பன ஓவியத்தில் பெரிதளவான ஒரு இயக்கமாக எழமுடியாமல் போனாலும் ஜோர்ஜ் கீற் போன்றவர் களினால் இலங்கைக்கான ஒரு நவீனத்துவப் போக்கினை அடையாளப் படுத்துக் கூடியதாக இருந்திருக்கிறது.

இலங்கைத் தமிழ் மரபில் எஸ்.ஆர்.கனகசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட ஐரோப்பிய மரபில் வந்தவர்களான மாற்கு போன்றவர்கள் யாழ்ப்பாணப் பண்பாட்டையும் அதன் வாழ்வியலையும் கலைத்துவத்துடன் வெளிப்படுத்தியிருந்த போதிலும் அடையாளத் தனித்துவம் ஜோர்ஜ் கீற்றளவோ அல்லது ஆதிமூலம் போலவோ இவர்களிடம் காணப்படவில்லை. இதற்குக் காரணம் எமக்கு நவீன ஓவியம் காலனித்துவ கல்விக் கலைத்திட்டத்தின் ஊடாகவே வளர்ந்து வந்தமையினாலாகும். ஜோர்ஜ் கீற், ஆதிமூலம் போன்றவர்களும் அந்தக் கல்லியினூடா வந்த போதிலும் அவர்கள் பௌத்த, இந்துப் பண்பாட்டின் வேர்களையும் சாதாரண மக்களின் சடங்கு, விழாக்கள் நம்பிக்கைகள் அலங்காரங்கள் என்பவற்றை ஆழ்ந்து நோக்கி அவற்றிலிருந்து நவீனத்துவத்தை வெளிப்படுத்தியவர்களாக இருந்திருக்கின்றனர்.

எமது நவீனத்துவம் எமது பண்பாட்டுக்குள் ஊடுருவாமல் பண்பாட்டை புறவயரீதியாகப் பார்ப்பதாகவே இருக்கின்றது. இதுவே இலங்கை தமிழ் மரபின் நவீனத்துவமாக இருக்கின்றது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

1. சிவத்தம்பி, கா., 2010, நவீனத்துவம் - தமிழ் - பின்நவீனத்துவம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. சிவரெத்தினம், சு., 2011, ஈழத்து நவீன ஓவியம் எஸ்.ஆர். கனகசபை முதல் மாற்கு வரை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. முத்துமோகன், ந., 2007, மார்க்சியக் கட்டுரைகள், காவ்யா, சென்னை.
4. ஜயவர்த்தன குமாரி (மொ.பெ.), 2009, சண்முகலிங்கம். க., அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை: இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம், சமூக விஞ்ஞானிகள் சங்கம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
5. Juliet Coombe, 2012, The Power of Sri Lankan Art – 1943- 2012, Sri Serendipity Publishing House, Sri Lanka.
6. Neville Weereratne, 1993, 43 Group – A Chronicle of Fifty Years in the Art of Sri Lanka, Lantana, Melbourne.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISSN 2386-1630

9 772386 163006

விலை ரூபா 250.00

Printed by Kumaran Press (Pvt) Ltd

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org